# வேளாண்மை - உழவர் நலத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 - 2025

### மானியக் கோரிக்கை எண். 5

## திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| முன்னுரை | | 1 |
| 1. | வேளாண்மை | 20–88 |
| 2. | சர்க்கரைத்துறை | 89–114 |
| 3. | தோட்டக்கலை–மலைப்பயிர்கள் | 115–160 |
| 4. | வேளாண்மைப் பொறியியல் | 161–192 |
| 5. | வேளாண்மை விற்பனை–வேளாண்வணிகம் | 193–243 |
| 6. | தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் | 244–264 |
| 7. | விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு | 265–286 |
| 8. | தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை | 287–296 |
| 9. | மானியக் கோரிக்கை | 297–301 |
| நிறைவுரை | | 302–305 |

## முன்னுரை

**"இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர் கரவாது**
**கைசெய்தூண் மாலை யவர்"**

**(திருக்குறள் : 1035)**

தாமே தொழில் செய்து ஊதியம் பெற்று உண்ணும் இயல்புடையவர், பிறரிடம் சென்று கையேந்த மாட்டார், தம்மிடம் வேண்டி நின்றவர்க்கும் ஒளிக்காமல் வழங்குவார்.
**(முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் உரை)**

கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமான் அவர்கள் வேளாண்மை செய்திடும் உழவர்களை மிக உயர்ந்தவர்களாகக் கூறி அவர்தம் வேளாண் தொழிலின் பெருமையையும் ஏரெழுபது நூலில் பின்வருமாறு போற்றியுள்ளார்.

**"பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடா தொருநாளும்**
**ஏர்வேந்தர் பெருஞ்செல்வம் அழிவுபடா திருத்தலினால்**
**தேர்வேந்தர் போர்க்களத்துச் சிலர்வெல்வர் சிலர்தோற்பர்**
**ஏர்வேந்தர் போர்க்களத்துள் இரப்பவருந் தோலாரே"**

(ஏரெழுபது : 58)

கல்வியிற் பெரிய கம்பர், "ஏரைக்கொண்டு தொழில்புரியும் உழவர்களின் பெருஞ்செல்வமாகிய நெல், அழிவடையாமல் மிகுதியாகத்

தோன்றியிருப்பதனால் தான், பூமியைக் காக்கும் மன்னவரின் பெருஞ் செல்வமானது, எப்போதும் குறைவில்லாமல் உள்ளது. அன்றியும் தேரை உடைய மன்னர்களில், போர்க்களத்துக்குச் செல்பவர்களில் சிலர் வெல்வர், சிலர் தோற்பர். உழவர்களின் போர்க்களத்திலோ இரந்து வருபவரும் பொருளைப் பெறுபவர் என்பதால் தோல்வியை அடையமாட்டார்" என்று உயர்வுறக் கூறியுள்ளார்.

மேன்மையான உழவுத் தொழிலே உலகத்தோரின் பசிபோக்கி உயிர்களைக் காத்துநிற்கும் அறத்தொழில் ஆகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றிற்கான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் வேளாண்மையைச் சார்ந்தே உள்ளன. வேளாண்மைத்தொழில் நாட்டின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றுவதுடன், தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்களுக்கு வாழ்வாதாரத் தொழிலாகவும் உள்ளது. வேளாண்மைத் தொழிலானது, முதன்மைத் தொழிலாக மட்டுமின்றி, பிற தொழில்களின் முன்னேற்றத்தில் பங்கு வகிப்பதுடன், தொழில்புரிவதற்கான வேலைவாய்ப்பு, விளைபொருட்களின் அடிப்படையில் வாணிபம், வறுமை ஒழிப்பு, பசியின்மை போன்ற இனங்களிலும்

முக்கியத்துவம் பெறுகின்றன. உழவுத் தொழிலில் உயர்ந்து விளங்கும் நாடே பஞ்சத்தில் வீழ்ந்து பரிதவிக்காமல் மேன்மை பெற்றுச் செழிப்புடன் திகழும், அந்நாடே சிறந்து விளங்கும் என்னும் உண்மையை நன்குணர்ந்த தமிழ்நாடு அரசு, உழவர்களின் உயர்வினைக் கருத்தில் கொண்டு சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் வேளாண்மை–உழவர் நலத்துறையானது, வேளாண்மையுடன் உழவர்களின் நலனையும் உள்ளடக்கி, பெயர் மாற்றத்தோடு, வேளாண்மையை பழைய தொழில்நுட்பங்களுடன் காலத்திற்கேற்ப புதிய தொழில்நுட்பங்களையும் புகுத்தி, இளைய தலைமுறையையும் உழவு மேற்கொள்ள ஊக்கப்படுத்தி, இலாபம் தரும் வண்ணம் மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றது.

தற்போது, குன்றிவரும் மண்வளத்தை மீட்டெடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டு, மாசற்ற சூழ்நிலையில் பயிர் செய்து, பெருகி வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை உயர்த்தி உணவளிப்பதும், வரும் இளைய தலைமுறையினருக்கு வளமான மண்ணையும், செறிவுற்ற, நஞ்சில்லாத வேளாண் விளை

பொருட்களையும் வழங்குவதும் இன்றியமையாத பணிகளாகும். தட்பவெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்களினால் விளைந்துள்ள பருவகால மாற்றங்கள், புதியவிதமான நோய், பூச்சி தாக்குதல்கள் ஆகியவற்றிற்குத் தீர்வு காண்பதும் அனைவருக்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளன. மேலும், குறைந்துவரும் பயிர் சாகுபடிப் பரப்பினை உயர்த்துதல், அனைத்துப் பயிர்களிலும் உற்பத்தித் திறனை உயர்த்துதல், நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரித்தல், புதியதாகக் கொண்டுவரப்படும் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்தல் போன்றவற்றை மேற்கொண்டு, அதன் மூலம் உற்பத்தியை அதிகரித்தல் போன்றவற்றையும் ஒருங்கே மேற்கொள்ள வேண்டிய சூழலுள்ளது.

தமிழ்நாட்டில் ஏழு வேளாண் தட்பவெப்ப மண்டலங்கள், பல்வேறு விதமான மண் வகைப்பாடுகள், வேறுபடும் மழையளவு, தட்பவெப்பச் சூழலுக்கேற்ப வளரும் பயிர்வகைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, விவசாயிகள் உயர் விளைச்சல் பெறும் நோக்கத்தோடு புதிய பயிர் இரகங்களும், தொழில்நுட்பங்களும் பரிந்துரைக்கப்பட்டு, அவர்களின் வருமானத்தை

அதிகரித்து வாழ்க்கைத்தரம் உயர்ந்திட வழிவகை செய்யப்பட்டு வருகின்றது. மேலும், பயிர்த்தொழிலை மட்டுமே சார்ந்திருக்காமல், ஆண்டு முழுவதும் நீடித்த நிலையான வருமானம் பெற்றிடும் வகையில், பிற வேளாண் சார்ந்த தொழில்களான கால்நடை வளர்ப்பு, வீட்டுத்தோட்டம், மீன்வளம், தேனீ வளர்ப்பு, பட்டுப்புழு வளர்த்தல், வேளாண் காடுகள் வளர்த்தல் ஆகியவற்றையும் விவசாயிகளிடம் ஊக்கப்படுத்தி, பலதொழில்களை ஒருங்கிணைத்து, தொடர் வருமானம் பெற்று, வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையில் சிறப்பான திட்டங்கள் தமிழ்நாடு அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**வேளாண் முன்னேற்றத்திற்குத் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**

மேட்டூர் அணையானது, 2023ஆம் ஆண்டில், குறித்த நாளான ஜூன் 12 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, குறுவை சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக, ரூ.75.95 கோடி மதிப்பீட்டில் **"குறுவை சாகுபடித் தொகுப்பு"** திட்டம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும், ஆறுகள், வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு பாசனவசதியும் மேம்படுத்தப்பட்டது. தமிழ்நாடு அரசின் சீரிய நடவடிக்கைகளினால், 5.599 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இந்த சாகுபடிப் பரப்பு கடந்த 48 ஆண்டுகளில் இல்லாத அதிகபட்ச சாதனையாகும்.

மேலும், வேளாண்மை உற்பத்தியை பெருக்கி உழவர் பெருமக்களின் நல்வாழ்வில் வளமை ஏற்படுத்திட, கடந்த மூன்றாண்டுகளில் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தியதைப் போல், 2024 ஆம் ஆண்டிலும் **ரூ.78.67 கோடி** மதிப்பீட்டில், குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்த உள்ளது. வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, ஊரக வளர்ச்சி

மற்றும் ஊராட்சித் துறைத் திட்டங்களை ஒருங்கிணைத்து குறுவை தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

மேலும், வேளாண்மை – உழவர் நலத்துறைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள மூன்று தொலைநோக்குத் திட்டங்களில் முதலாவதான நிகர சாகுபடிப்பரப்பினை உயர்த்துதல் என்ற இலக்கினை அடையும் வண்ணம் கடந்த மூன்று வேளாண் நிதிநிலை அறிக்கைகளில் வகுக்கப்பட்டு, வழங்கப்பட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதனால் நிகர சாகுபடிப்பரப்பானது, 2020–21 ஆம் ஆண்டில் 119 இலட்சத்து 37 ஆயிரம் ஏக்கரிலிருந்து 2022–23 ஆம் ஆண்டில் 119 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

மேலும், இரண்டாவது தொலைநோக்குத் திட்டமான இருபோக சாகுபடிப்பரப்பை இருமடங்காக்குதல் என்ற இலக்கும் பல்வேறு திட்டச் செயல்பாடுகளால், 2020–21 ஆம் ஆண்டில் 32 இலட்சத்து 65 ஆயிரம் ஏக்கரிலிருந்து 2022–23ஆம் ஆண்டில் அதிகரித்து 35 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

மேலும், மூன்றாவது தொலைநோக்குத் திட்டமான உணவுதானியங்கள், தென்னை,

சூரியகாந்தி மற்றும் வணிகப் பயிர்களான கரும்பு, பருத்தி ஆகியவற்றின் வேளாண் உற்பத்தித் திறனில் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழ்நாட்டினை இடம்பெறச்செய்தல் என்ற இலக்கினை அடையவும் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### அட்டவணை 1.1 – வேளாண் உற்பத்தித் திறனில் தேசிய அளவில் தமிழ்நாட்டின் நிலை

| முதலிடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் | நான்காம் இடம் |
|---|---|---|---|
| எண்ணெய் வித்துகள், நிலக்கடலை, கரும்பு, கேழ்வரகு | மக்காச்சோளம் | தென்னை | அரிசி, குறுதானியங்கள் |

ஆதாரம் : வேளாண்மை புள்ளியியல் ஒரு கண்ணோட்டம் – 2022

தமிழ்நாட்டில் கிராமசபைக் கூட்டங்கள் ஆண்டுதோறும் ஆறு நிகழ்வுகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையினால் ஜனவரி 26, மார்ச் 22, மே 1, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2, நவம்பர் 1 ஆகிய தினங்களில் நடத்தப்படுகின்றன. வேளாண்மை–உழவர் நலத்துறை சார்பில் அலுவலர்கள்

அக்கூட்டங்களில் கலந்து கொண்டு திட்டங்கள் பற்றி எடுத்துக்கூறுவதோடு, திட்டப் பயனாளிகளின் பெயர்ப்பட்டியலையும் காட்சிப்படுத்துவதால், திட்டங்கள் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், இந்நிகழ்வுகளில் புதிய வேளாண் தொழில்நுட்பங்கள், முன்னேற்றங்கள் தொடர்பான கண்காட்சிகள் அமைக்கப்பட்டும், விவசாயிகளுக்கு **"உழவர் செயலி"** பதிவிறக்கம், உழவர் கடன் அட்டை, பி.எம்.கிசான் நிதியுதவி போன்ற பிற திட்டப் பயன்கள் கிடைத்திடவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் வரையறுக்கப்பட்டு, உலக அளவில் 2030 ஆம் ஆண்டிற்குள் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இதுவரை 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் உருவாக்கப்பட்டு, அதனடிப்படையில் அனைத்துத் துறைகளிலும் திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை நிதி ஆயோக் (NITI Aayog) அமைப்பால் கண்காணிக்கப்படுகின்றன.

வேளாண்மைத் துறைக்கு ஆறு வளர்ச்சிக்கான இலக்குகளான, 'ஏழ்மையின்மை, பசியின்மை, நல்ல ஆரோக்கியம் – நல்வாழ்வு, தூய்மையான நீர்–

சுகாதாரம், பொறுப்புமிக்க பயன்பாடும் உற்பத்தியும், நீர்ச்சூழல் பாதுகாப்பு' ஆகிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு, இந்த இலக்குகளை நிறைவு செய்யும் வகையில் துறைத்திட்டங்களும் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. துறைக்கான நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை எய்திட நடவடிக்கைகள் மேற்கொண்டு திட்டங்கள் அனைத்தும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளன.

**"மேழிச் செல்வம் கோழைபடாது"** என்ற கொன்றைவேந்தன் கூற்றின் (77) மூலம் ஔவையார் "உழவு வழிவரும் செல்வம் குன்றாது" என்று உழவுத் தொழிலை உயர்த்திக் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய மேன்மைமிகு தொழிலை பல்வேறு இடர்பாடுகளையும் கடந்து சாதனையாக மாற்றி உயிர்களுக்கு உணவளிக்கும் அன்னையைப் போன்று உழைக்கும் உழவர்களின் வாழ்வு உயர்வு பெறும் நோக்கத்தில் பல்வேறு வேளாண் திட்டங்கள் நான்கு நிதிநிலை அறிக்கைகளில் வழங்கப்பட்டு, உழவர்கள் நலன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**தோற்றம் – வேளாண்மைத் துறை**

ஆளுநர் சர் வில்லியம் டெனிசன் அவர்கள் 1863 ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தின் தனது, குறிப்புக் குழுவிற்கு (Council of Note) வேளாண்மை தொடர்பாக வேளாண் நடைமுறைக் குறிப்புகளைச் சமர்ப்பித்து, வேளாண்மையின்பால் குழுவின் கவனத்தைக் கொண்டுவந்து, தொடர் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளுக்கு வித்திட்டார்.

இந்திய பஞ்ச ஆணையம் 1880 ஆம் ஆண்டில் வழங்கிய பரிந்துரைகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் வகையில் வேளாண்மைத் துறையானது 1882ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. பின்னர், வருவாய் தீர்வு, நில ஆவணங்கள் மற்றும் வேளாண்மை ஆணையரகப் பணியாக மறுவடிவமைக்கப்பட்டு 1905 ஆம் ஆண்டு முதல் தன்னிறைவு பெற்ற தனிப்பிரிவாக, வேளாண்மைத்துறையாக ஒழுங்கமைக்கப்பட்டு, தேவையான பணியாளர்களுடன் வேளாண்மை இயக்குநரின் தலைமையின் கீழ் பணியினைத் தொடர்ந்து வருகிறது.

வேளாண்மைத்துறையின் பணிகள் தலைமைச் செயலக அளவில் முதலில் வருவாய்த்துறையாலும்,

பின்னர் திட்ட வளர்ச்சித் துறையாலும் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் புதியதாக உருவாக்கப்பட்ட வேளாண்மைத்துறையின் வசம் வழங்கப்பட்டது. வருவாய் வாரியத்தின் குடிமைப் பொருள் வழங்கல் ஆணையர் 1949–1951ஆம் ஆண்டுகளில் உணவு உற்பத்தி ஆணையராக நியமிக்கப்பட்டு செயலாற்றியுள்ளார். தலைமைச் செயலகப் பொறுப்புகளையும் 1956 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து அவரே வகிக்க ஆணையிடப்பட்டிருந்தது. பின்னரே, வேளாண்மைத்துறையின் அரசுச் செயலாளருக்கு இப்பணிகள் மாற்றப்பட்டுள்ளன.

**அட்டவணை : 1.2 – வேளாண்மை – உழவர் நலத்துறை – துறைகளின் தோற்றம்**

| வ. எண் | துறை | ஆண்டு | விவரம் |
|---|---|---|---|
| 1. | வேளாண்மைத்துறை | 1882 | தனித்துறையாகச் செயல்படுதல் |
| | | 1905 | வேளாண்மை இயக்குநரை துறைத்தலைவராகக் கொண்டு செயல்படுதல் |
| 2. | வேளாண்மை விற்பனை – வேளாண் வணிகத்துறை | 1977–1978 | வேளாண்மைத் துறையில் இருந்து பிரிந்து தனித்துறையாகச் செயல்படுதல் |
| 3. | தோட்டக்கலை – மலைப்பயிர்கள் துறை | 1979–1980 | வேளாண்மைத் துறையில் இருந்து பிரிந்து தனித்துறையாகச் செயல்படுதல் |

| வ. எண் | துறை | ஆண்டு | விவரம் |
|---|---|---|---|
| 4. | விதைச்சான்றளிப்பு –உயிர்மச் சான்றளிப்புத்துறை | 1979–1980 | வேளாண்மைத் துறையில் இருந்து பிரிந்து தனித்துறையாகச் செயல்படுதல் |
| | | 2022 | கோயம்புத்தூரிலிருந்து தலைமை அலுவலகம் சென்னைக்கு மாற்றம். |
| 5. | வேளாண்மை பொறியியல் துறை | 1980–1981 | வேளாண்மைத் துறையில் இருந்து பிரிந்து தனித்துறை உருவாக்கம் |
| 6. | முதல் வேளாண்மை கல்லூரி | 1876 | சென்னை, சைதாப்பேட்டையில் உருவாக்கம் |
| | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம். | 1971 | கோயம்புத்தூரில் உருவாக்கம் |
| 7. | சர்க்கரைத்துறை | 1969 | வேளாண்மைத்துறையில் இருந்து உருவாக்கம் |
| | | 2022 | தொழில் துறையிலிருந்து மாற்றி வேளாண்மை–உழவர் நலத்துறையுடன் இணைப்பு |
| 8. | உணவு பதப்படுத்துதல் | 2012 | வேளாண்மை விற்பனை – வேளாண் வணிகத்துறையில் இயங்குதல் |
| | | 2022 | குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறைக்கு மாற்றப்பட்டது. |
| 9 | வேளாண்மைத்துறையின் மறுசீரமைப்பு | 2008 | ஏற்கனவே இருந்த செயல்பாடுகளை செவ்வனே செயல்படுத்திடும் பொருட்டு வட்டார அளவில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. |

**ஆதாரம்: வேளாண்மைத்துறை கையேடு, 6வது பதிவு (1990)**


## தமிழ்நாட்டில் வேளாண்மை

தமிழ்நாடு மாநிலமானது மித மற்றும் வறண்ட ஈரப்பத வகை கொண்டதாக நில அமைப்பில்

வகைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு, 1.30 இலட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் தேசிய அளவில் 11வது பெரிய மாநிலமாக உள்ளது. மேலும், 7.21 கோடி மக்கள் தொகையுடன் 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தேசிய அளவில் ஏழாவது மாநிலமாகவும் உள்ளது. தமிழ்நாடு நான்கு சதவீத பரப்பளவு, ஆறு சதவீத மக்கள் தொகை மற்றும் மூன்று சதவீத நீர் ஆதாரங்களையும் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில், 79.38 இலட்சம் நிலவுடைமைதாரர்கள் 59.71 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிர்சாகுபடி செய்கின்றனர். இந்திய அரசின் 10–வது வேளாண்மைக் கணக்கெடுப்பின்படி மொத்த நிலவுடைமைதாரர்களில் 93 சதவீத குறு, சிறு விவசாயிகள் 62 சதவீத நிலப்பரப்பிற்கும், ஏழு சதவீத நடுத்தர மற்றும் பெரு விவசாயிகள் 38 சதவீத நிலப்பரப்பிற்கும் நிலவுடைமைதாரர்களாக உள்ளனர். சராசரி நிலவுடைமைப் பரப்பு, தமிழ்நாட்டில் 0.75 எக்டர் அளவில் (தேசிய சராசரி நிலவுடைமைப் பரப்பு– 1.08 எக்டர்) உள்ளது.

## படம்: 1 –தமிழ்நாட்டின் நிலப்பயன்பாடு – 2022–23




**மொத்த நிலப்பரப்பு – 130.33 இலட்சம் எக்டர்**
**பயிரிடுதிறன் (%) – 129.40**
**(மொத்த சாகுபடி பரப்பு / நிகர சாகுபடி பரப்பு x 100)**
**(*)** *மொத்த பயிரிடும் பரப்பு (62.60 இலட்சம் எக்டர்) மற்றும் ஒருமுறைக்கு மேல்சாகுபடி செய்யப்பட்ட பரப்பு (14.23 இலட்சம் எக்டர்)–க்குமுள்ள வேறுபாடு.*
***(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, 2022–23 தமிழ்நாடுஅரசு)***


### அட்டவணை: 1.3 –நிலப்பயன்பாட்டில் தமிழ்நாட்டின் நிலை –2020–21 & 2022–23 ஒப்பீடு

| வ. எண் | நிலப் பயன்பாடு | (இலட்சம் எக்டர்) | | |
|---|---|---|---|---|
| | | 2020 – 2021 | 2022– 2023 | குறிப்பு |
| 1. | மொத்த சாகுபடி பரப்பு | 61.55 | 62.60 | 1.05 **இலட்சம் எக்டர்** அதிகரிப்பு |
| 2. | நடப்பு தரிசு நிலங்கள் | 8.93 | 8.90 | 0.03 **இலட்சம் எக்டர்** குறைவு |
| 3. | இதர தரிசு நிலங்கள் | 18.65 | 18.48 | 0.17 **இலட்சம் எக்டர்** குறைவு |
| 4. | நிகர சாகுபடிப் பரப்பு | 48.33 | 48.37 | 0.04 **இலட்சம் எக்டர்** அதிகரிப்பு |
| 5. | பயிரிடுதிறன் (% | 127.35 | 129.40 | 2.05 **சதவீதம்** அதிகரிப்பு |

**தமிழ்நாட்டின் சராசரி மழையளவு**

தமிழ்நாட்டின் சராசரி மழையளவு 919.8மி.மீ. ஆகும். 2023ஆம் ஆண்டு பெறப்பட்ட மழையளவு 1,035 மி.மீ ஆகும்.

### படம்: 2 – பருவம் வாரியாக 2023ஆம் ஆண்டில் பெறப்பட்ட மழை அளவு




(ஆதாரம் : இந்திய வானிலைத்துறை)

**பாசன நீர் ஆதாரம்**

2022–23ஆம் ஆண்டில் மாநிலத்தின் பல்வேறு பாசனநீர் ஆதாரங்கள் மூலம் பயன்பெறும் நிகர பாசனப் பரப்பளவு விவரம் பின்வருமாறு.


**அட்டவணை: 1.4 – 2022–23ஆம் ஆண்டில் நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப்பரப்பு**

| பாசன ஆதாரம் | எண்ணிக்கை | நிகர பாசனப் பரப்பு (இலட்சம் எக்டர்) | நிகர பாசனப் பரப்பு (%) |
|---|---|---|---|
| கால்வாய்கள் | 2,241 | 6.83 | 23.39 |
| ஏரிகள் | 41,123 | 3.99 | 13.66 |
| குழாய் கிணறுகள் & ஆழ்துளைக் கிணறுகள் | 3,71,084 | 5.42 | 18.56 |
| திறந்த வெளிக் கிணறுகள் | 14,69,659 | 12.92 | 44.25 |
| இதர பாசனம் | 45,129 | 0.04 | 0.14 |
| | மொத்தம் | 29.20 | 100.00 |

*ஆதாரம் : பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, (2022–23) தமிழ்நாடு அரசு*

சாகுபடி செய்யப்படும் பரப்பானது கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் 63 சதவீதமாகவும், கால்வாய்கள் மூலம் 23 சதவீதமாகவும் மற்றும் ஏரிகள் மூலம் 14 சதவீதமாகவும் உள்ளது.


**படம்: 3 – நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப்பரப்பு – 2022–23**




**பாசன நீர் ஆதாரங்களின் பயன்பாடு:**

2021–22ஆம் ஆண்டில் 18.35 இலட்சம் எக்டராக இருந்த கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகளின் பாசனப்பரப்பு 2022–23ஆம் ஆண்டில் 18.38 இலட்சம் (0.16 சதவீதம் அதிகரிப்பு) எக்டராக அதிகரித்துள்ளது.

படம்: 4 – தமிழ்நாட்டின் ஏழு வேளாண்தட்ப வெப்ப மண்டலங்கள்




ஆதாரம் : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வேளாண் இணையதளம்

# 1. வேளாண்மை

## 1.1. பயிர் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறன் அதிகரித்தல்

தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேளாண்மைக்கென வழங்கப்பட்ட தொலைநோக்குத் திட்டங்களான நிகர பயிர் சாகுபடிப் பரப்பை உயர்த்துதல், இருபோக சாகுபடிப் பரப்பை இருமடங்காக்குதல் ஆகியவற்றை அடையும் வகையில் சமர்ப்பிக்கப்பட்ட வேளாண்மை நிதிநிலை அறிக்கைகளில் பல்வேறு உழவர் நலன் காக்கும் திட்டங்களைச் செயல்படுத்தியதன் விளைவாக 2020–21 ஆம் ஆண்டில் 108.24 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி 2021–22ஆம் ஆண்டில் 119.97 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. 2022–23ஆம் ஆண்டில் பருவம் தவறிப் பெய்த மழை, பருவ மழை காலங்களில் பொழிந்த அதீத கனமழை போன்ற பல்வேறு இயற்கை இடர்பாடுகளுக்கு இடையிலும் 116.91 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி அடையப்பெற்றது.

2023–24ஆம் ஆண்டிலும் தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் மழைக்குறைவு, வடகிழக்குப்

பருவமழைக் காலத்தில் வட மாவட்டங்களில் ஏற்பட்ட மிக்ஜாம் புயல், தென் மாவட்டங்களில் பெய்த அதீத கனமழை ஆகிய இயற்கைப் பேரிடர்கள் நிகழ்ந்த போதிலும், மூன்றாம் முன் மதிப்பீட்டின்படி 118.02 இலட்சம் மெட்ரிக் டன் உணவுதானிய உற்பத்தி சாதனை அடையப்பட்டுள்ளது. இதன் மூலம் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக 116 இலட்சம் மெட்ரிக் டன் அளவினைக் கடந்து உணவு தானிய உற்பத்தி சாதனை எய்தப்பட்டு வருகிறது.


**அட்டவணை: 1.5 – 2024–25 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்**

| வ. எண் | பயிர்கள் | பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெ.டன்) | உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | நெல் | 20.20 | 81.81 | 4,050 |
| 2 | சிறுதானியங்கள் | 9.95 | 39.09 | 3,928 |
| 3 | பயறு வகைகள் | 10.00 | 8.73 | 873 |
| **மொத்த உணவு தானியங்கள்** | | **40.15** | **129.63** | |
| 4 | எண்ணெய் வித்துகள் | 5.80 | 16.28 | 2,800 |
| 5 | பருத்தி | 1.78 | 4.61* | 440** |
| 6 | கரும்பு | 1.75 | 231 | 132*** |
| | **மொத்தம்** | **49.48** | | |

** உற்பத்தி இலட்சம் பொதிகள்: பொதி ஒன்றுக்கு 170 கிலோ*

** உற்பத்தித் திறன்–பஞ்சு    **** உற்பத்தி திறன் மெட்ரிக் டன் / எக்டர்*

**படம் : 1.1 – கடந்த நான்கு ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி ஒப்பீடு**




* புள்ளியியல் துறையின் (2023–24 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது முன் மதிப்பீட்டின் படி)

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டங்கள்:**

**அ. தமிழ்நாட்டில் கூடுதலாக 11.75 இலட்சம் எக்டர் பயிரிடச் செய்து தற்போதுள்ள நிகர பயிரிடு பரப்பான 60 சதவீதத்தை 75 சதவீதமாக உயர்த்துதல்**

தமிழ்நாட்டில் 2020–21ஆம் ஆண்டில் 48.33 இலட்சம் எக்டராக இருந்த நிகர சாகுபடிப் பரப்பானது

பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தியதன் காரணமாக 2021–22ஆம் ஆண்டில் 49.09 இலட்சம் எக்டராக உயர்ந்தது. மேலும், 2020–21ஆம் ஆண்டில் 61.56 இலட்சம் எக்டராக இருந்த மொத்த சாகுபடிப் பரப்பானது 2022–23ஆம் ஆண்டில் 1.04 இலட்சம் எக்டர் அதிகரித்து 62.60 இலட்சம் எக்டராக உயர்ந்துள்ளது. மேலும், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தியதன் காரணமாக 2020–21ஆம் ஆண்டில் 15,000 எக்டர் இதர தரிசு நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டதன் மூலம் 18.65 இலட்சம் எக்டராக இருந்த இதர தரிசானது 2022–23ஆம் ஆண்டில் 18.48 இலட்சம் எக்டராகக் குறைந்துள்ளது. இவ்வாறாக, தொடர்ந்து இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, அறிவித்தவாறு பத்தாண்டுகளில் இலக்கு எய்தப்படும்.

**ஆ. 10 இலட்சம் எக்டர் அளவுக்கு உள்ள இருபோக சாகுபடி நிலங்கள் அடுத்த பத்தாண்டுகளுக்குள் இருமடங்காக, அதாவது, 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல்**

தமிழ்நாட்டில் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் இரண்டு இலட்சம் இலவச மின் இணைப்புகள்

விவசாயிகளுக்குப் புதிதாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், நீர்த்தேவைகளைச் சிக்கனமாகப் பயன்படுத்திட 2021-22ஆம் ஆண்டில் 1,02,329 எக்டர், 2022-23ஆம் ஆண்டில் 70,856 எக்டர், 2023-24 ஆம் ஆண்டில் இதுநாள் வரை 1,29,020 எக்டர் ஆக மொத்தம் 3,02,205 எக்டரில் நுண்ணீர்ப்பாசன அமைப்புகளை நிறுவியதன் காரணமாக இருபோக சாகுபடி 2022-23ஆம் ஆண்டில் 14.23 இலட்சம் எக்டர் பரப்பாக உயர்ந்துள்ளது. மேலும், தொடர்ந்து திட்டப்பணிகள் நடந்து வருவதால் பத்தாண்டுகளில் அறிவித்தபடி சாதனை செய்யப்படும்.

## 1.2 முதன்மை வேளாண்மைத் திட்டங்கள்

### 1.2.1. முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் (CM MK MKS).

ஒரே பயிர் சாகுபடி, மண்ணிலிருந்து அதிக அளவு சத்துகளை உறிஞ்சும் பயிர்களின் சாகுபடி ஆகியவற்றால் மண்ணின் வளம் குறைந்து வரும் சூழல் தற்போது வேளாண்மையில் உள்ளது. மேலும், பயிர்களில் உயர் விளைச்சல் பெறும் பொருட்டு இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் அதிக அளவில் பயன்படுத்துவது மண்ணிலுள்ள

நுண்ணுயிர்களைக் குறைத்து, மண் வளத்தையும் நலிவுறச் செய்துள்ளது. இந்நிலை நீடித்தால், வரும் இளைய தலைமுறையினருக்கு வளமற்ற மண்ணையே விட்டுச் செல்லும் நிலையுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, மண்வளம் பேணி நல்லுணவு தந்து, மக்கள் நலன் காத்திடும் விதமாக முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் 2024–25ஆம் ஆண்டில் ரூ. 206 கோடி நிதி ஒதுக்கீட்டில் 22 இனங்களுடன் செயல்படுத்தப்படுகிறது.

i. மண்வளம் காக்க, ஆயக்கட்டு, இறவை பாசனப் பகுதிகளில், 2 இலட்சம் ஏக்கரில் பசுந்தாள் உரம் பயிரிட 2 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ. 20 கோடி நிதி ஒதுக்கீடு.

ii. 10,000 விவசாயிகளுக்கு தலா இரண்டு மண்புழு உரப்படுக்கைகள் அமைத்திட ரூ. 6 கோடி மானியம். நிரந்தர மண்புழு உரத் தொட்டிகள், உரப்படுக்கை அமைக்க 3,560 விவசாயிகளுக்கு ரூ. 5 கோடி மானியம்.

iii. 2,482 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் 3.33 இலட்சம்

விவசாயிகளின் நிலத்தில் மண்பரிசோதனை செய்து மண்வள அட்டையுடன் சமச்சீர் உரப் பரிந்துரை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை திட்டங்களுக்காக ரூ. 10.375 கோடி நிதி ஒதுக்கீடு.

iv. தலா 37,500 ஏக்கர் களர், அமில நிலங்களைச் சீர்ப்படுத்த ரூ. 22.5 கோடி நிதி ஒதுக்கீடு.

v. திரவ உயிர் உரங்கள் 10 இலட்சம் ஏக்கருக்கு, 2 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கிட ரூ. 7.5 கோடி நிதி ஒதுக்கீடு.

vi. இரசாயனங்களின் பயன்பாட்டினைப் பெருமளவு குறைத்து மண்நலம் காக்க "வயல் சூழல் ஆய்வு" மேற்கொண்டு, விவசாயிகளுக்கு உரிய அறிவுரைகளும் பரிந்துரைகளும் வழங்குதல்.

vii. பூச்சி, நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்தவல்ல 10 இலட்சம் வேப்பமரக்கன்றுகள் வேளாண்காடுகள் திட்டத்தில் இலவசமாக வழங்கிட ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு.

viii. உயிரி பூச்சிக்கொல்லி பண்புகளுடைய ஆடாதொடா, நொச்சி போன்ற தாவர வகைகளில் 50 இலட்சம் செடிகளைத் தரிசு

நிலங்களிலும், வயல்களிலும் நடவு செய்ய ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

ix. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவல்ல சீவன் சம்பா போன்ற மருத்துவ குணம் கொண்ட பாரம்பரிய நெல் இரகங்கள், 1,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்திட விதை விநியோகம்.

x. மரபுசார் நெல் இரகங்களைப் பாதுகாக்க 200 மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு 10,000 ஏக்கரில் சாகுபடி மேற்கொள்ள விதை விநியோகத்திற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு .

xi. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க சிறுதானியங்கள், பயறுவகைகளின் பாரம்பரிய இரகங்களின் விதைகளை அரசு மாநில விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து புதிய இரகங்களை உருவாக்கிடவும் பயன்பாட்டிலுள்ள இரகங்களை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் .

xii. உயிர்ம வேளாண்மையின் பயன்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் வட்டாரத்திற்கு ஒரு கிராமத்தில் உயிர்ம

வேளாண்மைக்கான மாதிரிப் பண்ணை உருவாக்க ரூ. 38 இலட்சம் நிதிஒதுக்கீடு.

xiii. முழுமையான உயிர்மச் சான்றுடன் கூடிய உயிர்ம வேளாண்மையை உறுதி செய்து விதைப்பு முதல் நேரடி சந்தைப்படுத்துதல் வரை வாய்ப்புகளை உருவாக்கி, விவசாயிகள் கூடுதல் இலாபம் பெற்றிட 725 உயிர்ம வேளாண் தொகுப்புகளுக்கு ரூ.27 கோடி நிதிஒதுக்கீடு.

xiv. உயிர்ம வேளாண்மைக்குத் தேவையான இயற்கை இடுபொருள் தயாரித்தல் மையம் அமைக்க 100 குழுக்களுக்கு ஒரு கோடி ரூபாய் மானியம்.

xv. வேளாண்காடுகள் திட்டத்தில் தரமான மரக்கன்றுகளை உற்பத்தி செய்ய நாற்றங்கால் அமைப்பதற்கும், வலுப்படுத்துவதற்கும் ரூ. 13 கோடி நிதி ஒதுக்கீடு

xvi. பயிர் சாகுபடியுடன், கறவை மாடுகள், ஆடுகள் வளர்த்தல், பழ மரங்கள், தேனீ வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளை மேற்கொள்ள 14,000 ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள் அமைத்திட ரூ.42 கோடி நிதி ஒதுக்கீடு.

xvii. மானாவாரி நிலங்களில் விவசாயிகள் இலாபகரமான பயிர் சாகுபடி மேற்கொள்ள மூன்று இலட்சம் ஏக்கரில் சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துகள் பயிரிட விதைகள் உள்ளிட்ட இடுபொருட்களுக்கு ரூ.36 கோடி நிதி ஒதுக்கீடு.

xviii. வீட்டுத் தோட்டத்தில் ஊட்டச்சத்துமிக்க வாழை, பப்பாளி, முருங்கை, கறிவேப்பிலை போன்ற செடிகள் வளர்ப்பதை ஊக்குவிக்க ரூ. 4 கோடி நிதி ஒதுக்கீடு.

xix. பயிர்களின் மகரந்தச்சேர்க்கைக்கு உதவிடும், மக்கள் உடல்நலம் பேணும் தேன் பொருட்களுக்கு கன்னியாகுமரியில் பரிசோதனை, பதப்படுத்தும் கூடங்கள் அமைத்து, தேனீ வளர்ப்பு பயிற்சிகள் அளித்திட ரூ. 3.60 கோடி நிதி ஒதுக்கீடு.

xx. சிறப்பு வேளாண் கிராமங்களை உருவாக்கி, காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கான தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து, விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி பரவலாக்கம் செய்திட ரூ.1.48 கோடி நிதி ஒதுக்கீடு.

xxi. பயிர்க்கழிவுகள் உள்ளிட்ட கரிமப் பொருட்களை வேகமாகச் சிதைத்து கரிமச்சத்தின் அளவை உயர்த்தி, கிடைக்காத நிலையிலுள்ள சத்துகள் கிடைக்கப் பெறவும், பயனுள்ள நுண்ணுயிர்க் கலவையை உருவாக்கிடவும் ஆய்வுகள் மேற்கொண்டு அதன் செயல்திறனை மதிப்பிட ரூ. 1.39 கோடி நிதி ஒதுக்கீடு.

xxii. வேளாண் விளைபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் எளிதில் நகர்ப்புர நுகர்வோரைச் சென்றடைய, நேரடியாகக் கொள்முதல் செய்து, தரம் பிரித்து, சிப்பம் கட்டி, முத்திரையிட்டு விற்பனை செய்ய 100 உழவர் அங்காடிகளுக்கு ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு.

### 1.2.2. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

கிராம வளர்ச்சியில்தான் நாட்டின் வளர்ச்சி உள்ளது என்ற அடிப்படையில் தமிழ்நாடு அரசு, கிராமங்களில் வேளாண் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை 2021–22ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் தேர்வு செய்யப்பட்ட அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளில், தரிசு நிலத்தொகுப்புகள் உருவாக்கி, அத்தொகுப்புகளில் மின் அல்லது சூரிய சக்தி நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி, நுண்ணீர்ப் பாசனத்துடன், பழ மரக்கன்றுகளை நிரந்தரப் பயிர்களாகவும், குறுகிய கால வேளாண் பயிர்களையும் சாகுபடி செய்திடச் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வேளாண் வளர்ச்சியில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தும் நோக்கத்தில் வேளாண்மை–உழவர் நலத்துறையின் இதர திட்டங்களின் நிதி ஒதுக்கீட்டில் 80 சதவீத நிதியைத் தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்து, திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

நடப்பு 2024–25ஆம் ஆண்டில் இத்திட்டம் 2,482 கிராம ஊராட்சிகளில் ரூ.176.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.3. ஒரு கிராமம் ஒரு பயிர் திட்டம்

கிராமங்களில் மறுமலர்ச்சி ஏற்படுத்திட, "ஒரு கிராமம் ஒரு பயிர்" என்ற புதிய திட்டம் 15 ஆயிரத்து 280 வருவாய் கிராமங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தில் 2024–25ஆம் ஆண்டில், ஒரு கிராமத்திற்கு ஒரு பயிர் என்று தேர்வு செய்து ஐந்து முதல் பத்து ஏக்கர் பரப்பளவில், நெல், இதர முக்கியப் பயிர்களுக்கான வேளாண் பணிகளான நிலம் தயாரிப்பு, உயர் விளைச்சல் இரகங்களைப் பயன்படுத்துதல், விதை நேர்த்தி, விதைப்பு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை உட்பட அனைத்துத் தொழில்நுட்பங்களையும் மேற்கொண்டு, செயல் விளக்கங்கள் வாயிலாக விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. மேலும், நன்மை, தீமை செய்யும் பூச்சிகளைத் தெரிந்து கொள்ள ஏதுவாக "நிரந்தரப் பூச்சிக் கண்காணிப்புத் திடல்கள்" வயல்களில் அமைக்கப்பட்டு, உரிய பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளும் விவசாயிகளுக்குப் பரிந்துரைக்கப்பட உள்ளன.

## 1.2.4. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் (ஐந்தாண்டுத் திட்டம்)

விவசாயிகளின் நலன் கருதி, சிறுதானியங்களின் பரப்பு, உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், 2023–24 முதல் 2027–28 வரையிலான 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என 2023–24ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையின் போது அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 2023–24ஆம் ஆண்டில் ரூ.65 கோடி நிதி ஒதுக்கீட்டில், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், சிறுதானியங்கள் பெருமளவில் சாகுபடி செய்யப்படும் 25 மாவட்டங்களைக் கொண்ட, இரண்டு சிறுதானிய சிறப்பு மண்டலங்களில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டம், 2024–25ஆம் ஆண்டிலும் ரூ.65 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.2.5 மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம்

#### 1.2.5.1. குறுவைப் பருவத்தில் மாற்றுப்பயிர்

கார் / குறுவை / சொர்ணவாரி பருவத்தில் நெற் பயிருக்கு மாற்றாகக் குறைந்த நீர்த்தேவையுள்ள மாற்றுப் பயிர்களான சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிக்கும் விதமாக இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. 2023–24 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 23,510 ஏக்கர் பரப்பளவில் சிறுதானியங்களும், 21,158 ஏக்கர் பரப்பில் பயறு வகைப்பயிர்களும், 5,795 ஏக்கர் பரப்பில் எண்ணெய்வித்துப் பயிர்களும் ஆக மொத்தம் 50,463 ஏக்கரில் ரூ.8.48 கோடி நிதி செலவினத்தில் மாற்றுப்பயிர் 43,341 விவசாயிகளால் பயிரிடப்பட்டது. இத்திட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட சிறுதானியங்களின் உற்பத்தி 9,404 மெட்ரிக் டன், பயறுவகை பயிர்களின் உற்பத்தி 5,290 மெட்ரிக் டன் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்தி 6,259 மெட்ரிக் டன் என அடையப் பெற்றுள்ளது.

இத்திட்டம், 2024–25ஆம் ஆண்டிலும் ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பளவில், ரூ.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.5.2. பட்டதாரி இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல்

பட்டதாரி இளைஞர்களை ஊக்குவித்து வேளாண் சார்ந்த தொழில் துவங்க வழிவகை செய்வது மிகவும் அவசியமாகிறது. இதன் அடிப்படையில், இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்கும் திட்டம் 2021–22ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்கள் சுயமாக வேளாண் சார்ந்த தொழில் துவங்கிட அதிகபட்சமாக ரூபாய் ஒரு இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2023–24–ஆம் ஆண்டில் 88 இளைஞர்களுக்கு, வேளாண் சார்ந்த தொழில் துவங்க ரூ.88 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2024–25ஆம் ஆண்டில் ஒருகோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.2.5.3. சிறந்த உயிர்ம விவசாயிக்கான "நம்மாழ்வார் விருது"

உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காகவும், இதர

விவசாயிகளையும் உயிர்ம வேளாண்மையில் ஈடுபடச் செய்யும் விவசாயிகளைக் கௌரவிப்பதற்காகவும், 2023–24ஆம் ஆண்டில் மூன்று விவசாயிகளுக்கு ரூ.5.22 இலட்சம் மதிப்பீட்டில் நம்மாழ்வார் விருது வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2024–25ஆம் ஆண்டில் ரூ.5.22 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.2.5.4 பாரம்பரிய நெல் விதை வங்கி**

பாரம்பரிய நெல் இரகங்களை இனத்தூய்மையுடன் சேகரித்துப் பாதுகாக்க 2023–24–ஆம் ஆண்டில் 11 பாரம்பரிய நெல் விதை வங்கிகள் ரூ.33 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

**1.2.6. ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில் 20 சதவீத கூடுதல் மானியம் வழங்குதல்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில் பயன்பெறும் போது அவர்களின்

பங்களிப்புத் தொகையினை செலுத்துவதில் ஏற்படும் பொருளாதாரச் சுமையைக் குறைத்து, வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் விதமாக ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக்குடில்கள், நிழல் வலை குடில்கள் அமைத்தல், சோலார் உலர்த்திகள், சோலார் பம்ப்செட்டுகள் வழங்குதல், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள், பண்ணை இயந்திரங்கள் வழங்குதல் போன்ற திட்டங்களுக்கு 20 சதவீத கூடுதல் மானியம் வழங்கப்படுகிறது. மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தில் 2022-23ஆம் ஆண்டில் ரூ.5.90 கோடி செலவிடப்பட்டு, 1,726 ஆதிதிராவிட விவசாயிகளும், 165 பழங்குடியின விவசாயிகளும் பயனடைந்துள்ளனர். 2023-24ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தில் ரூ.19.08 கோடி செலவிடப்பட்டு, 5,509 ஆதிதிராவிட விவசாயிகளும், 653 பழங்குடியின விவசாயிகளும் பயனடைந்துள்ளனர்.

விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டம், 2024-25ஆம் ஆண்டிலும் ரூ.18 கோடி மாநில நிதியில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.2.7. மின்னணு வேளாண்மை

வேளாண்மையில் மின்னணு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயிகளுக்கான வேளாண் தொழில்நுட்பங்கள், இடுபொருட்கள் இருப்பு விவரம், சந்தை நிலவரம், வானிலை முன்னறிவிப்பு, அணைகளின் நீர் இருப்பு விவரம், அரசு மானியத் திட்டங்களின் விவரம் போன்றவற்றை விவசாயிகளிடம் துரிதமாகக் கொண்டு செல்வதற்கு ஏதுவாக, 24 முக்கிய சேவைகளுடன் "உழவர்" என்ற பிரத்யேக கைபேசி செயலி உருவாக்கப்பட்டு, விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை சுமார் 17 இலட்சம் விவசாயிகள் உழவர் செயலியைப் பதிவிறக்கம் செய்துள்ளனர்.

வேளாண்மைத் துறை, இதர அரசுத் துறைகள் மூலம் விவசாயிகள் எளிதில் தங்களுக்குத் தேவையான பயன்களைத் துரிதமாகப் பெற கிரைன்ஸ் (GRAINS – Grower Online Registration of Agriculture INput System)) என்ற இணைய முகப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் உள்ள நிலங்கள் விவசாயிகளின் விவரங்களுடன் இணைக்கப்பட்டு, இத்தகவல்

அனைத்து துறைகளுக்கும் பொதுவானதாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்துப் புல எண்களுக்கும் புவியிடக் குறியீடு வழங்கப்பட்டு அவை விவசாயிகளின் தரவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, புவியிடக் குறியீடு செய்யப்பட்ட புல எண்ணில் சாகுபடி செய்யப்படும் பயிர் விவரங்கள் நிகழ்நிலை அடிப்படையில் பதிவு செய்யப்படுகின்றன.

மாநிலத்தில் பயிரிடப்பட்டுள்ள அனைத்துப் பயிர்களின் வகை மற்றும் பரப்பளவு பராமரிக்கப்படுவதால் பயிர் வாரியான தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கிப் பயிர் உற்பத்தித் திறனை மேம்படுத்திடவும், பயிர் சேத விவரங்களை விவசாயிகள் வாரியாகத் துல்லியமாகக் கணக்கிட்டு, இயற்கைப் பேரிடர் காலங்களில் விவசாயிகளுக்கு விரைவாக இழப்பீடு வழங்கிடவும் கிரைன்ஸ் இணைய முகப்பு பயனுள்ளதாக இருக்கும்.

விவசாயிகளின் நிலவுடைமை விவரம், பயிர் சாகுபடி, வங்கி விவரங்கள் போன்றவை ஒரு சேர இருப்பதால் அரசுத்துறைகள், வங்கிகள் ஆகியவை விவசாயிகளுக்குத் தேவையான அனைத்துச் சேவைகளையும் உடனுக்குடன் வழங்கிட ஏதுவாக

இருப்பதால் விவசாயிகள் எளிதில் பயன்களைப் பெற இயலும்.

### 1.2.8. கிராம அளவிலான வேளாண் முன்னேற்றக் குழு

தமிழ்நாட்டில் "ஐந்து ஆண்டுகளில், அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும், அனைத்துக் குக்கிராமங்களை உள்ளடக்கி, 25 முதல் 50 விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு, கிராம வேளாண் முன்னேற்றக் குழுக்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க முதற்கட்டமாக 2023–24ஆம் ஆண்டில், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட 2,504 கிராம ஊராட்சிகளில், 25 முதல் 50 விவசாயிகள் கொண்ட வேளாண் முன்னேற்றக் குழுக்கள் அமைக்கப்பட்டு ரூ.2.50 கோடி செலவில் வேளாண்மை சார்ந்த நவீன தொழில்நுட்பங்கள் குறித்து 77,000 விவசாயிகளுக்கு 10,016 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

2024–25ஆம் ஆண்டிலும் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் 2,482 கிராம ஊராட்சிகளில், கிராம வேளாண் முன்னேற்றக்

குழுக்கள் உருவாக்கப்பட்டு, ரூ.2.24 கோடி அட்மா (ATMA) திட்ட நிதி ஒதுக்கீட்டில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

அதன்படி, கோடை உழவு முதல் வேளாண் விளை பொருட்களைச் சந்தைப்படுத்துதல் வரையிலான அனைத்துத் தொழில்நுட்பங்களையும் பயிற்சியின் வாயிலாகத் தெரிவித்து, குழு உறுப்பினர்கள் தொழிநுட்பங்களை முழுமையாகக் கடைப்பிடித்து உற்பத்தியினை அதிகரிக்கச் செய்வதுடன், அக்கிராமத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து நிலையான வருமானம் மூலம் முன்னேறக் கூடிய கிராமமாக மாறுவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 1.2.9. உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம்

நவீன பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள், அரசு மானியத்திட்ட பயன்களை கிராம ஊராட்சி அளவில் உழவர்களுக்கு நேரடியாக எடுத்துச் செல்வதில் வேளாண் விரிவாக்கப் பணி முக்கியப் பங்காற்றுகிறது. இவற்றினை நிலைப்படுத்திட வேளாண் விரிவாக்க அலுவலர்கள் (உதவி வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள் / வேளாண்மை

அலுவலர்கள்) நிலையான கால அட்டவணையில் கிராம ஊராட்சிக்கு வருகை புரிகிறார்கள்.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் விரிவாக்க அலுவலர்களால் 10 விவசாயிகள் (ஆதிதிராவிடர் / பழங்குடியினர் விவசாயிகள் 2 பேர் உட்பட) தெரிவு செய்யப்படுகின்றனர். வேளாண்மை, அதன் சார்புத் தொழில்கள் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த விவசாயிகள் மூலம் இதர விவசாயிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

விரிவாக்க அலுவலர்கள் கிராம ஊராட்சிகளுக்கு வருகை புரியும் தேதி/இடம் ஆகியவை விவசாயிகளுக்கு முன்னரே தெரிவிக்கப்படும். உழவர் செயலி வலைதளத்தின் மூலமும் அறிந்து கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வேளாண் விரிவாக்க அலுவலர்கள் கிராம ஊராட்சிகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் போது, கிராம ஊராட்சி தொடர்பான வருகை விவரங்களைப் பதிவேற்றம் செய்திட ஒரு பிரத்யேக கைபேசி செயலி (UATT செயலி) உருவாக்கப்பட்டுள்ளது.

வட்டார, மாவட்ட, மாநில அளவில் வேளாண் விரிவாக்கப் பணியாளர்களின் கிராம வருகையினைக் கண்காணிக்கவும், விவசாயிகளுக்கு வழங்கிய தொழில்நுட்பச் செய்திகள் குறித்தும், விவசாயிகள் தெரிவித்த பிரச்சனைகளைத் தெரிந்து கொள்ளவும், ஒரு தகவல் இணைய முகப்பு (Dash board) உருவாக்கப்பட்டுள்ளது. விரிவாக்கப் பணியாளர்களின் பெயர், தொடர்பு எண், கிராம ஊராட்சியின் தொடர்பு இடம் ஆகியவை குறித்த வருகை விவரங்களை விவசாயிகள் உழவர் செயலியில் காணலாம்.

### 1.3. பயிர் சாகுபடி விவரம்

#### 1.3.1. நெல்

தமிழ்நாட்டின் முக்கிய உணவான அரிசி, முதன்மைப் பயிராக அனைத்து மாவட்டங்களிலும், கார் / குறுவை / சொர்ணவாரி (ஏப்ரல் – ஜூலை), சம்பா / தாளடி / பிசானம் (ஆகஸ்ட் – நவம்பர்) மற்றும் நவரை / கோடை (டிசம்பர் – மார்ச்) ஆகிய மூன்று பருவங்களில் பயிரிடப்படுகிறது. நெல், இயல்பு பரப்பளவான 20.91 இலட்சம் எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு, சராசரியாக 74 இலட்சத்து 55 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசி மகசூல் அடையப்பட்டு வருகிறது.

2024–25ஆம் ஆண்டில் 20 இலட்சத்து 20 ஆயிரம் எக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொண்டு 81 இலட்சத்து 81 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி இலக்கினை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

2023–24ஆம் ஆண்டில், நெல்லில் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தில் ரூ.2.80 கோடி நிதியும், தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கத்தில்–(நெல்) ரூ.5.15 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்ட இனங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2024–25ஆம் ஆண்டிலும் இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இயற்கைச் சீற்றங்களிலிருந்து வேளாண் விளைபொருட்களைப் பாதுகாப்பதற்காக, ரூ. 5 கோடி மதிப்பீட்டில் 2023–24ஆம் ஆண்டில், விவசாயிகளுக்கு 53,500 தார்ப்பாய்கள் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. நெற்பயிரின் வளர்ச்சிக்குத் தேவையான துத்தநாக சல்பேட், மண் வளத்தைக் கூட்டும் ஜிப்சம் ஆகியவை விவசாயிகளுக்கு ரூ. 5 கோடி மதிப்பீட்டில் 2023–24ஆம் ஆண்டில் மானிய

விலையில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2024–25ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2024–25ஆம் ஆண்டில் சம்பா, நவரை பருவங்களில் பொதுமக்களால் பெரிதும் விரும்பி உண்ணப்படும் மிகச்சன்ன வகை நெல் இரகங்கள் அதிக அளவில் பரவலாக்கம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 1.3.2. சிறுதானியங்கள்

தமிழ்நாட்டில் சிறுதானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம் மற்றும் குறுதானியங்களான வரகு, பனிவரகு, குதிரைவாலி, சாமை, தினை ஆகியவை சராசரியாக 8.94 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 31.35 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**அட்டவணை : 1.6– 2022–23ஆம் ஆண்டில் மாநில அளவில் சிறுதானியப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன்**

| வ. எண் | பயிர் | பரப்பு (இலட்ச ம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்) | உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | மக்காச்சோளம் | 4.267 | 29.899 | 7,007 |
| 2 | சோளம் | 3.602 | 2.927 | 812 |
| 3 | கேழ்வரகு | 0.696 | 2.066 | 2,968 |
| 4 | கம்பு | 0.451 | 1.134 | 2,514 |
| 5 | சாமை | 0.138 | 0.170 | 1,234 |
| 6 | வரகு | 0.017 | 0.032 | 1,865 |
| 7 | தினை | 0.011 | 0.005 | 470 |
| 8 | பனிவரகு | 0.008 | 0.013 | 1,700 |
| 9 | குதிரைவாலி | 0.048 | 0.064 | 1,334 |
| | **மொத்தம்** | **9.238** | **36.310** | |

*(**ஆதாரம்**: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு)*
**2022–23 ஆம் ஆண்டிற்கான இறுதி மதிப்பீட்டின் படி*

2024–25ஆம் ஆண்டில் 9.95 இலட்சம் எக்டர் பரப்பளவில் 39.09 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

**1.3.2.1. சிறுதானியங்கள் சாகுபடி ஊக்குவிப்பதற்கான திட்டங்கள்**

**அ) உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு – ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்கள்:**

ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்களின் பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கத்துடன் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு (ஊட்டச்சத்துமிக்க சிறுதானியங்கள்) திட்டம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023-24ஆம் ஆண்டில் இத்திட்டம், ரூ. 30.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2024-25ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**ஆ. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு :**

**மக்காச் சோளம்:**

மக்காச்சோளத்தின் பரப்பு, உற்பத்தியினை அதிகரிக்க, ஒன்பது மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023-24ஆம் ஆண்டில் இத்திட்டம், ரூ.1.63 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2024-25ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.


### இ. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

சிறுதானிய சாகுபடியை ஊக்குவிக்கும் விதமாக, சிறுதானிய சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உழவு மானியம் வழங்கும் திட்டம் ரூ.1.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2023-24ஆம் ஆண்டில், இரண்டு சிறுதானிய சிறப்பு மண்டலங்களிலும் (25 மாவட்டங்கள்) செயல்படுத்தப்பட்டுள்ளது. 2024-25ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.3.3. பயறுவகைப் பயிர்கள்

பயறுவகைப் பயிர்கள் மனிதர்களின் ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான புரதச்சத்தினை வழங்குகின்றன. மேலும், அவை காற்றிலுள்ள நைட்ரஜன் சத்தை எடுத்துக்கொண்டு வேர் முடிச்சுகளை உருவாக்கி மண்ணின் வளத்தைப் பெருக்குவதிலும் உதவுகின்றன. தமிழ்நாட்டில், துவரை, உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப்பயறு, கொள்ளு, கொண்டைக்கடலை, மொச்சை ஆகியவை முக்கியப் பயறுவகைப் பயிர்களாக விளைவிக்கப்படுகின்றன. பயறுவகைப்பயிர்கள் சராசரியாக 8.17 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 5.22 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

## படம் : 1.2 – பயறுவகைப் பயிர்களில் மாநில அளவிலான பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறன் 2022–23




பயறுவகைப்பயிர்கள் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் விதமாக 2023–24ஆம் ஆண்டில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டம் (பயறுவகைகள்), நெல்தரிசில் பயறுசாகுபடித்திட்டம் ஆகியவை முறையே ரூ.28.32 கோடியிலும், ரூ.2.96 கோடியிலும் செயல்படுத்தப்பட்டன.

2023–24 ஆம் ஆண்டு, துவரை பயிரின் உற்பத்தித் திறனை அதிகரிக்க தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நடவுத் துவரைக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் ரூ.12.00 கோடி

நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பலனாக 2022–23ஆம் ஆண்டின் துவரை உற்பத்தித்திறனான 1,038 கிலோ/ எக்டர் என்பது 2023–24ஆம் ஆண்டில் 1,118 கிலோ/ எக்டர் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு 2024–25ஆம் ஆண்டும், நடவுத் துவரைக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 30,000 ஏக்கர் பரப்பில் ரூ.10.80 கோடி, ஒன்றிய – மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் துவரை சாகுபடிப் பரப்பை அதிகரிக்கும் விதமாக 2024–25ஆம் ஆண்டு "துவரை சாகுபடிப் பரப்பு விரிவாக்க இயக்கம்", 70,000 ஏக்கர் பரப்பில் ரூ.17.50 கோடி மாநில நிதியில் செயல்படுத்தப்படும்.

உளுந்து, பச்சைப்பயறு, துவரை. கொள்ளு, தட்டைப்பயறு ஆகியவற்றின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தித்திறனை உயர்த்தி, தேவையில் தன்னிறைவு பெற, 2024–25ஆம் ஆண்டில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டம் (பயறுவகைகள்) ரூ.35.38 கோடியிலும், நெல் தரிசில் பயறுசாகுபடித் திட்டம் ரூ.3.35 கோடி, நிதி ஒதுக்கீட்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.3.4. எண்ணெய்வித்துப் பயிர்கள்

எண்ணெய்வித்துப் பயிர்களில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் நமது உணவில் இன்றியமையாததாக உள்ளது. மேலும், வண்ணப்பூச்சுகள், சோப்புகள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றைத் தயாரிக்கவும் பயன்படுகின்றன. எண்ணெய் பிரித்தெடுத்தபின் எஞ்சும் பிண்ணாக்கு கால்நடைத் தீவனமாகவும், உரமாகவும் பயன்படுகிறது.

**அட்டவணை : 1.7 – எண்ணெய்வித்துப் பயிர்கள் – 2022–23 பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன்**

| வ. எண் | பயிர் | பரப்பு (எக்டர் ) | உற்பத்தி (மெ .டன் ) | உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | நிலக்கடலை | 3,51,079 | 9,12,150 | 2,598 |
| 2 | எள் | 47,878 | 25,071 | 524 |
| 3 | சூரியகாந்தி | 9,640 | 10,118 | 1,050 |
| 4 | ஆமணக்கு | 5,814 | 1,813 | 312 |
| 5 | இதர எண்ணெய் வித்துப் பயிர்கள் | 361 | 361 | 1,000 |
| | மொத்தம் | 4,14,772 | 9,49,513 | 2,289 |

எண்ணெய்வித்துப் பயிர்கள் தமிழ்நாட்டில் சராசரியாக 3.95 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 9.44 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகின்றது.

எண்ணெய்வித்துப் பயிர்களின் பரப்பு, உற்பத்தித் திறனை உயர்த்த 2023–24ஆம் ஆண்டில் தேசிய சமையல் எண்ணெய் இயக்கம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களில் ரூ.38.08 கோடி நிதி செலவினத்தில் 1.94 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தினால் எண்ணெய் வித்துப் பயிர்களின் உற்பத்தித் திறன் எக்டருக்கு 2,289 கிலோவிலிருந்து 2,313 கிலோவாக உயர்ந்துள்ளது.

மேலும் 2024–25ஆம் ஆண்டில் எண்ணெய்வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு, சோயாபீன்ஸ் ஆகியவற்றின் பரப்பு, உற்பத்தித் திறனை உயர்த்த "தேசிய சமையல் எண்ணெய் இயக்கத்தில் ரூ.56.85 கோடியும், நெல் தரிசில் எண்ணெய்வித்துப் பயிர்களின் சாகுபடித் திட்டத்தில் ரூபாய் ஒரு கோடியும் நிதி ஒதுக்கீடு செய்து இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதன் வாயிலாக எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்தித் திறன் எக்டருக்கு 2,800 கிலோவாக உயரும் என எதிர்நோக்கப்படுகிறது.

நிலக்கடலை போன்ற எண்ணெய்வித்துப் பயிர்களில், ஜிப்சம் பயன்பாட்டை ஊக்குவித்து, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மூலம் பயிர்களின்

உற்பத்தி, உற்பத்தித்திறனை அதிகரிக்க, ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 50,000 ஏக்கர் பரப்பிற்கு ஜிப்சம் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், 2023–24ஆம் ஆண்டில் எண்ணெய்வித்துகள் அதிகம் விளையும் 14 மாவட்டங்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு எண்ணெய்வித்துகள் மண்டலத்தில், எண்ணெய்வித்துகள் உற்பத்தியை அதிகரித்தல், மதிப்புக்கூட்டுதல், சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி ஆகியவற்றில் தொடர்ந்து சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் – எண்ணெய் வித்து மரப்பயிர்கள் திட்டத்தின் கீழ் பயனற்ற தரிசு நிலப்பயன்பாட்டை மேம்படுத்தவும் விவசாயிகளுக்கு வருமானத்தைப் பெருக்கவும் வேம்பு மரக்கன்றுகள் நடவு செய்ய ஊக்குவிக்கப்படுகிறது. ஏற்கனவே சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களில் பராமரிப்பு மற்றும் ஊடுபயிர் சாகுபடி செய்தல், ஆகிய இனங்கள் 2023–24ஆம் ஆண்டில் ரூ.1.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 2024–25ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.3.5. பருத்தி

நெசவுத் தொழிலுக்கு மிகத் தேவையான பருத்தி இழையை வழங்கிடும் வெள்ளைத்தங்கம் என அழைக்கப்படும் பருத்திப் பயிர், தமிழ்நாட்டின் முக்கிய வணிகப் பயிர் ஆகும். பருத்திப் பயிரின் விதைகள் புரதச்சத்து அதிகம் கொண்டு கால்நடைத் தீவன உற்பத்தியிலும் முக்கியப் பங்காற்றுகின்றன. தமிழ்நாட்டில் பருத்தி சராசரியாக 1.50 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 3.24 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. பருத்தியில் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித் திறனைப் பெருக்கிட, 2023–24ஆம் ஆண்டில் நீடித்த நிலையான பருத்தி சாகுபடி இயக்கம், ரூ.11 கோடி நிதியிலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில், ரூபாய் ஒரு கோடி நிதியிலும், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் (பருத்தி)யில் ரூ. 1.135 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பருத்தி சாகுபடிப் பரப்பினை 1.78 இலட்சம் எக்டராகவும், உற்பத்தியினை 4.61 இலட்சம் பேல்களாகவும் உயர்த்த, 2024–25ஆம் ஆண்டில் பலன்தரும் பருத்தி சாகுபடி திட்டமானது ரூ.11 கோடி நிதி ஒதுக்கீட்டிலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் பருத்திக்கான திட்ட இனம் ரூ.1.50 கோடி

நிதி ஒதுக்கீட்டிலும், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு (பருத்தி திட்டம்) ரூ.1.419 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் செயல்படுத்தப்படும்.

## 1.4. வேளாண்மைத் துறையின் பிற திட்டங்கள்

### 1.4.1 தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)


நல்ல விளைச்சல் பெறுவதற்கு தரமான விதைகளே ஆதாரமாக உள்ளன. தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை தரமான விதைகளை உரிய பருவத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் உயரிய நோக்கத்துடன் 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இம்முகமை, அறிவிக்கை செய்யப்பட்டுள்ள பயிர் இரகங்களின் வல்லுநர் விதைகளைக் கொண்டு விதைப்பண்ணை அமைத்து, ஆதார விதை, சான்று விதை உற்பத்தி செய்தல், தரச்சான்று பெற்று விதைப்பெருக்கம் செய்யும் விவசாயிகளிடமிருந்து விதை விலைக் கொள்கையின் படி சான்று பெற்ற விதைகளைக் கொள்முதல் செய்தல் மற்றும் தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகித்தல் ஆகிய முக்கியப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இம்முகமையின் கட்டுப்பாட்டில் உள்ள 33 மாநில விதைப் பண்ணைகள், ஆறு மாநில எண்ணெய் வித்துப் பண்ணைகள், ஒரு மாநில பயறுவகை விதைப் பெருக்கப்பண்ணை ஆகியவற்றின் மூலம் விதை உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தரமான விதைகளை உற்பத்தி செய்யும் நோக்கத்தில் 108 விதை சுத்திகரிப்பு நிலையங்களின் மூலம் சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023–24ஆம் ஆண்டில், 26,347 மெட்ரிக் டன் சான்றளிக்கப்பட்ட விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. 2024–25ஆம் ஆண்டில் 33,400 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்படும்.

**படம் :1.3 2024–25ஆம் ஆண்டிற்கான விதை கொள்முதல், விநியோகத்திற்கான திட்டம்**



### 1.4.2. விதைகள், நடவுப்பொருட்களுக்கான துணை இயக்கத்தின் விதைக் கிராமத் திட்டம்

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான தரமான விதைகளைத் தாங்களே உற்பத்தி செய்து, உயர் விளைச்சல் பெற வேண்டும் என்பதே விதைக் கிராமத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதில் நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்கள் ஆகியவற்றின் ஆதார விதைகள்/சான்று விதைகள், விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

2023–24ஆம் ஆண்டில் ரூ.32 கோடி நிதி ஒதுக்கீட்டில் விதைக்கிராமத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நடப்பு 2024–25ஆம் ஆண்டிலும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.4.3. வேளாண்மை விரிவாக்க மையங்கள்

வேளாண்மை விரிவாக்க மையங்கள், விதைகள், முக்கிய வேளாண் இடுபொருட்கள், வேளாண்கருவிகள், பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவற்றை இருப்பு வைத்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதுடன் விதைப்பு முதல் அறுவடை

வரையிலான அனைத்து பயிர்சார்ந்த ஆலோசனைகளையும் வழங்கிடும் ஒருங்கிணைப்பு மையங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்கள் வட்டார அளவில் 383 எண்களும், துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் பிர்கா அளவில் 497 எண்களும், மொத்தமாக 880 வேளாண்மை விரிவாக்க மையங்கள் தமிழ்நாட்டில் செயல்பாட்டில் உள்ளன.

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு, வேளாண்மைப் பொறியியல்துறை ஆகிய அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படும் விதமாக ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

விவசாயம் தொடர்பான அனைத்து சேவைகளையும் விவசாயிகளுக்கு வழங்கிடும் பொருட்டு செயல்படும் 383 முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்களில் 220 மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும்,

32 மையங்களையும் தரம் உயர்த்திடும் பொருட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் 205 மையங்களுக்கு பல்வேறு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும், 99 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு புதிய கட்டடம் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

1.5. பயிர் பாதுகாப்பு

காலநிலை வேறுபாடு, களைகள், பூச்சி– நோய்த் தாக்குதலினால் பயிர்களில் சேதம் ஏற்படாமல் சரியான மேலாண்மை முறைகளின் வாயிலாகப் பயிர்களைப் பாதுகாப்பது வேளாண்மையில் முக்கிய அங்கமாகும். விவசாயிகள் அனைவரும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைத் தொழில்நுட்பங்களைக் கடைப் பிடிப்பதனால், எளிதாக பூச்சி நோய் தாக்குதலை உரிய தருணத்தில் கட்டுப்படுத்தி, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதுடன், சாகுபடிச் செலவையும் குறைக்க முடியும்.

மேலும், பயிர்வாரியான பூச்சி, நோய்த் தாக்குதல் மற்றும் மேலாண்மை குறித்த பல்வேறு பயிற்சிகள் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்றன. இதுதவிர,

விவசாயிகளுக்கு உடனடித் தீர்வு கிடைக்கும் வகையில் உழவர் செயலி வாயிலாக செயற்கை நுண்ணறிவு மூலம் பயிர்களில் பூச்சி, நோய்த் தாக்குதல் உடனுக்குடன் அடையாளம் காணப்பட்டு அவர்களின் அலைபேசிகளுக்கு பயிர் பாதுகாப்பு மேலாண்மை முறைகள் குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகிறது. வட்டார அளவில் பூச்சி, நோய்த் தாக்குதல், வயல் சூழல் ஆய்வு மூலம் தீவிரமாகக் கண்காணிக்கப்படுவதுடன் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் முன் அறிவிப்புகள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசால் பூச்சி, நோய்த் தாக்குதலைக் கண்காணித்துத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான பணிகள் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1.5.1. உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள்.

பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்தும் பாக்டீரியா, பூஞ்சானம், வைரஸ், இயற்கை எதிரிகளான ஒட்டுண்ணி போன்ற உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், தமிழ்நாட்டிலுள்ள 22 உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், 2 ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள், 5 கரும்பு ஒட்டுண்ணி

உற்பத்தி மையங்கள் ஆகியவற்றில் உற்பத்தி செய்யப்பட்டு அவைகளை வயல்வெளியில் வெளியிட மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

இவை ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளில் முக்கிய பங்காற்றுவதுடன் இரசாயனப் பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டினைக் கணிசமான அளவு குறைத்திடவும் உதவுகின்றன.

**அட்டவணை: 1.8 – 2023–24ஆம் ஆண்டில் உயிரியல் கட்டுப்பாட்டுக்காரணிகளின் உற்பத்தி, விநியோக விவரங்கள்**

| வ. எண் | உயிரியல் கட்டுப்பாட்டு க் காரணிகள் | உற்பத்தி மற்றும் விநியோகம் |
|---|---|---|
| 1 | டிரைக்கோடெர்மா விரிடி (கிலோ) | 3,83,572 |
| 2 | சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் (கிலோ) | 3,95,605 |
| 3 | பிவேரியா பேசியானா (கிலோ) | 14,636 |
| 4 | டிரைகோகிரம்மா கைலோனிஸ் (சிசி) | 55,954 |
| 5 | மெட்டாரைசியம் அனிசோபிலியே (கிலோ) | 96,125 |
| 6 | கிரைசோபெர்லா (எண்கள்) | 14,67,200 |

இத்திட்டம் 2024–25ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## அட்டவணை : 1.9 – உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்கள்

| வ. எண் | மாவட்டம் | உயிரியியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்கள் | ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள் | கரும்பு ஒட்டுண்ணி மையங்கள் |
|---|---|---|---|---|
| 1. | விழுப்புரம் | விழுப்புரம் | – | விழுப்புரம் |
| 2. | சேலம் | சீலநாயக்கன் பட்டி | – | – |
| 3. | நாமக்கல் | நாமக்கல் | – | மோகனூர் |
| 4. | தருமபுரி | பாப்பாரப்பட்டி | – | – |
| 5. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | – | – |
| 6. | ஈரோடு | பவானி | – | கோபிசெட்டி பாளையம் |
| 7. | திருப்பூர் | – | – | உடுமலைப் பேட்டை |
| 8. | திருச்சி | திருச்சி | – | – |
| 9. | தஞ்சாவூர் | காட்டுத்தோட்டம் | – | தஞ்சாவூர் |
| 10. | திருநெல்வேலி | பாளையங் கோட்டை | – | – |
| 11. | காஞ்சிபுரம் | – | பஞ்சுப் பேட்டை | – |
| 12. | மதுரை | விநாயகபுரம் | விநாயகபுரம் | – |
| 13 | புதுக்கோட்டை | அன்னவாசல் | – | – |
| 14 | திருவள்ளூர் | மாதவரம் | – | – |
| 15 | கரூர் | கரூர் | – | – |
| 16 | அரியலூர் | திருமானூர் | – | – |
| 17 | பெரம்பலூர் | பெரம்பலூர் | – | – |

| வ. எண் | மாவட்டம் | உயிரியியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்கள் | ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள் | கரும்பு ஒட்டுண்ணி மையங்கள் |
|---|---|---|---|---|
| 18 | திருவாரூர் | மன்னார்குடி | – | – |
| 19 | விருதுநகர் | விருதுநகர் | – | – |
| 20 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | – | – |
| 21 | வேலூர் | வேலூர் | – | – |
| 22 | கன்னியாகுமரி | கோழிப்போர்விளை | – | – |
| 23 | திண்டுக்கல் | நத்தம் | – | – |
| 24 | கடலூர் | பண்ருட்டி | – | – |

## 1.6. உரம்

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சராசரியாக 22 இலட்சம் மெ.டன் இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரசாயன உரங்கள் பயிர்களின் உற்பத்தித்திறன், உற்பத்தியினை நிர்ணயிக்கும் முக்கியமான இடுபொருளாகும். பெருகி வரும் உரத்தேவையினைக் கருத்தில் கொண்டு மாநில அரசு, விவசாயிகளின் இடுபொருள் செலவினைக் குறைத்திடவும், மண்வளத்தினைப் பாதுகாத்திடவும், பசுந்தாள் உரங்கள், உயிர் உரங்கள் மற்றும் இயற்கை உரங்களைப் பயன்படுத்திட

விவசாயிகளை ஊக்குவித்து விவசாயிகளின் நலனைப் பாதுகாத்து வருகிறது.

மாநிலத்தின் உரத்தேவையினைக் கணக்கிட்டு அதற்கேற்ற ஒதுக்கீட்டினை ஒன்றிய அரசிடமிருந்து பெறுவதுடன், தேவையான அளவு உரங்களைப் பெற்று இருப்பு வைப்பதும் கண்காணிக்கப்படுகிறது. நடப்பு காரீப் பருவத்திற்கு 4.91 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 1.40 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி, 1.04 இலட்சம் மெட்ரிக் டன் பொட்டாஷ், 4.54 இலட்சம் மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் ஆகியவை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை : 1.10 – ஆண்டு வாரியாக உர விநியோக**

**விவரங்கள்**

| உரம் | உர விநியோகம் (இலட்சம் மெட்ரிக் டன்) | |
|---|---|---|
| | 2022 – 23 | 2023 – 24 |
| யூரியா | 10.96 | 10.11 |
| டி.ஏ.பி. | 3.11 | 2.64 |
| பொட்டாஷ் | 1.59 | 1.63 |
| காம்ப்ளக்ஸ் | 6.82 | 7.24 |
| **மொத்தம்** | **22.48** | **21.62** |

இரசாயன உரங்களை உர நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து முன் இருப்பு வைப்பதற்காகவும், பருவத்தில் தட்டுப்பாடின்றி உரங்கள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலும் 2023-24ஆம் ஆண்டில் வட்டியில்லா முன்பணமாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (டான்பெட்) ரூ.125 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 1.7. தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

விவசாயிகளுக்குக் கிடைக்கும் உரம், உயிர் உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளின் தரத்தினை உறுதி செய்வது துறையின் முக்கியமான பணியாகும். இதனை உறுதி செய்திட தமிழ்நாட்டில் 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், 12 பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள், மூன்று மாநில பூச்சிக்கொல்லி ஆய்வகத்துடன் கூடிய குறியீட்டு மையங்கள், இரண்டு உயிர்ம உரப் பரிசோதனை ஆய்வகங்கள், தரக்கட்டுப்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும், உயிர் உரத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் உயிரியல் காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் திருச்சியிலும் மற்றும் மத்தியக் கட்டுப்பாட்டு ஆய்வகம் புதுக்கோட்டையிலும் செயல்பட்டு வருகின்றன.

### 1.7.1. உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள், உயிரியல் காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களின் செயல்பாடுகள்

**அட்டவணை : 1.11 – உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களில் உர மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்ட விவரம்**

| வ. எண் | விவரம் | 2023–24 | | தரமற்ற மாதிரிகள் | 2024–25 இலக்கு |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | | |
| 1 | உர மாதிரிகள் | 24,600 | 25,962 | 670 | 24,600 |
| 2 | உயிர்ம உர மாதிரிகள் | 1,440 | 1,506 | 87 | 1,440 |
| 3 | உயிர் உர மாதிரிகள் | 1,040 | 1,174 | 11 | 1,040 |

2024–25ஆம் ஆண்டில், அனைத்து உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கும் ISO–17025:2017 தேசிய தர நிர்ணயச்சான்றினை (NABL Accreditation) பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டு உயிர்ம உரப் பரிசோதனை ஆய்வகங்களுக்கும், உயிர் உரத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்கும் ISO–17025:2017 தேசிய தர நிர்ணயச்சான்றினை (NABL Accreditation) பெற்றிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**அட்டவணை : 1.12 – பூச்சிக்கொல்லி மாதிரிகள் பகுப்பாய்வு விவரம்**

| வ. எண் | விவரம் | 2023-24 | | தரமற்ற மாதிரிகள் | 2024 - 25 இலக்கு |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | | |
| 1 | பூச்சிக்கொல்லி மாதிரிகள் | 21,850 | 22,474 | 166 | 21,850 |

தேசிய தர நிர்ணயச் சான்றினை கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுரம் ஆய்வகங்களுக்கு பெற்றது போல், மீதமுள்ள 10 ஆய்வகங்களுக்கும் தேசிய தர நிர்ணயச் சான்றினை பெற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தரமற்றவையாகக் கண்டறியப்பட்ட உரமாதிரிகள், பூச்சிக்கொல்லி மாதிரிகளைத் தயார் செய்த நிறுவனங்களின் மீது துறைரீதியான நடவடிக்கை, சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2024-25ஆம் ஆண்டில், உற்பத்தி செய்யப்படும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளான டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் புளுரோசன்ஸ், பெவேரியா பேசியானா போன்றவற்றின் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு திருச்சிராப்பள்ளியிலுள்ள புதிய உயிரியல்

காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் பூச்சிக்கொல்லிகள் சட்டம், 1968 இன்படி தரப்பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

### 1.8. மண்வள மேம்பாடு

#### 1.8.1 மண் பரிசோதனை நிலையங்கள்

மண் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு, பயிருக்கேற்றவாறு உரமிடுதல், பிற உரங்களின் உபயோகம், மண்வள மேம்பாட்டுப் பணிகள் ஆகியவை பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்திடவும் விவசாயிகளின் வருவாயை உயர்த்திடவும் அவசியமானதாகும். இதற்கென, தமிழ்நாட்டில் 36 மண்பரிசோதனை நிலையங்களிலும், 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களிலும், மண் மாதிரிகள், பாசன நீர் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வு முடிவுகள் மண்வள அட்டைகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மண் நலம் மற்றும் வளம் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் நலனுக்காக மயிலாடுதுறையில் புதிய மண் பரிசோதனை நிலையமும் தஞ்சாவூர், திருநெல்வேலி, கடலூர், வேலூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் நடமாடும் மண் பரிசோதனை

நிலையங்களும் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 2023–24–ஆம் ஆண்டில், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், நுண்ணீர்ப் பாசனத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் 3.92 இலட்சம் மண் வள அட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 45,400 பாசன நீர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

2024–25–ஆம் ஆண்டில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – மண் நலம் மற்றும் வளம் திட்டத்தில் 3.33 இலட்சம் மண் மாதிரிகள் பரிசோதனை செய்யப்படவுள்ளன.

### 1.8.2. தமிழ் மண்வளம்

தமிழ் மண்வளம் என்ற தனி இணைய முகப்பு 28.06.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த இணையதளம் வாயிலாக ஒவ்வொரு விவசாயியும் புல எண் தேர்வு செய்தும் புவியிடக் குறியீடு வாயிலாகவும் தங்கள் நிலத்தின், மண்ணின் தன்மை நிலத்தடி நீரின் வகைப்பாடு, மண்ணின் கார அமிலநிலை, மண்ணில் உள்ள சத்துக்களின் அளவை அறிந்து அதற்கேற்ற

உரம் மற்றும் பயிர் பரிந்துரையை அறியலாம். இந்த இணைய முகப்பில் 40 இலட்சம் புல எண்களின் மண் பரிசோதனை முடிவு தரவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும் விவசாயிகளின் நேரடி மண் மாதிரிகளின் பரிசோதனை முடிவு தரவுகளும் இந்த இணைய முகப்பில் பதிவேற்றம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 1.9. நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி மையம்

விவசாயிகள் உயர் மகசூல் பெற்றிட மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக் குறைபாடுகளை நீக்கும் வகையில் விவசாயிகளுக்குத் தரமான நுண்ணூட்ட உரங்கள் விநியோகம் செய்திட வேண்டியது அவசியமாகின்றது. இதற்கென புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் இயங்கி வரும் நுண்ணூட்ட உரக் கலவை உற்பத்தி மையம் வாயிலாக ஆண்டிற்கு 3,300 மெட்ரிக் டன் அளவில் 14 வகையான அத்தியாவசியமான நுண்ணூட்ட உரக் கலவைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. 2024-25ஆம் ஆண்டிலும், 3,300 மெட்ரிக் டன் நுண்ணூட்ட உரக் கலவைகள் உற்பத்தி செய்யப்பட உள்ளன.

## 1.10. உயிர் உர உற்பத்தி மையங்கள்

மண்ணின் நலம், மண் வளம் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களின் பங்கு இன்றியமையாததாகும். எனவே, நுண்ணுயிரிகளால் ஆன உயிர் உரங்களைப் பயன்படுத்தி, மண்வளத்தைப் பாதுகாத்து செறிவூட்டும் நோக்கத்துடன், தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஒன்பது வகையான திரவ உயிர் உரங்கள் 12.10 இலட்சம் லிட்டர் அளவில் 22 உயிர் உர உற்பத்தி மையங்களில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் 2024-25ஆம் ஆண்டிலும் 12.10 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்கள் உற்பத்தியுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.11. வேளாண்மை விரிவாக்கத்திற்கான துணை இயக்கம் - மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டம் - அட்மா (வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை)

மாநில விரிவாக்கத் திட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான பயிர் உற்பத்தி மற்றும் பண்ணை சார்ந்த புதிய தொழில்நுட்பங்களை,

பல்நோக்குடன் வழங்கிட வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள், வேளாண்மைப் பொறியியல், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு, கால்நடை பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, மீன் வளம் (ம) மீனவர் நலத்துறை, வனத்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகிய துறைகளையும் ஒருங்கிணைத்து விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்திற்குத் தேவையான செயல்பாடுகளை கிராம அளவில் ஆய்வு செய்து திட்டமிட்டு ஒருங்கிணைத்துச் செயல்படுத்திட, மாவட்டந்தோறும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை நிறுவப்பட்டுள்ளது.

### 1.11.1. அட்மா செயல்பாடுகள் – 2023–24

அட்மா திட்டத்தில் தொழில்நுட்பப் பயிற்சிகள், கண்டுணர் பயணங்கள், செயல்விளக்கத்திடல்கள், பண்ணைப் பள்ளிகள் போன்ற பல்வேறு செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென

ரூ.52.35 கோடி செலவிடப்பட்டு, இதுவரை 4,15,235 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**அட்டவணை : 1.13. 2023–24ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை விவரம்**

| வ. எண் | இனம் | பயிற்சிகள் (எண்கள்) | பயனாளிகள் (எண்கள்) |
|---|---|---|---|
| 1 | உள் மாநிலப் பயிற்சி | 100 | 4,000 |
| 2 | உள்மாவட்டப் பயிற்சி | 7,846 | 3,12,760 |
| 3 | மாநிலங்களுக்குள்ளான கண்டுணர் பயணம் | 380 | 6,740 |
| 4 | உள் மாநிலக் கண்டுணர் பயணம் | 1,118 | 56,750 |
| 5 | உள்மாவட்டக் கண்டுணர் பயணம் | 84 | 4,200 |
| 6 | செயல் விளக்கங்கள் | 13,185 | 13,185 |
| 7 | பண்ணைப் பள்ளிகள் | 704 | 17,600 |
| | **மொத்தம்** | 23,417 | 4,15,235 |

2024–25ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.12. உழவர் பயிற்சி மையங்கள்

### 1.12.1. உழவர் பயிற்சி நிலையம்

மாநிலத்தில் 22 உழவர் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் வாயிலாக விவசாய ஒருங்கிணைப்பாளர், மகளிர்

விவசாயிகளுக்கு வேளாண் மேலாண்மையில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து ரூ.17 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. 2024–25ஆம் ஆண்டிலும் உழவர் பயிற்சி நிலையங்களில் பயிற்சிகள் வழங்கப்படும்.

**அட்டவணை : 1.14 – உழவர் பயிற்சி நிலையங்கள்**

| வ. எண் | மாவட்டம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 2 | விழுப்புரம் | திண்டிவனம் |
| 3 | வேலூர் | வேலூர் |
| 4 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 5 | சேலம் | சேலம் |
| 6 | நாமக்கல் | நாமக்கல் |
| 7 | தருமபுரி | தருமபுரி |
| 8 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 9 | ஈரோடு | ஈரோடு |
| 10 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 11 | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 12 | கரூர் | கரூர் |
| 13 | புதுக்கோட்டை | குடுமியான்மலை |
| 14 | தஞ்சாவூர் | சாக்கோட்டை |
| 15 | தேனி | தேனி |
| 16 | திண்டுக்கல் | திண்டுக்கல் |

| வ. எண் | மாவட்டம் | அமைவிடம் |
|---|---|---|
| 17 | இராமநாதபுரம் | பரமக்குடி |
| 18 | சிவகங்கை | சிவகங்கை |
| 19 | விருதுநகர் | விருதுநகர் |
| 20 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை |
| 21 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 22 | கன்னியாகுமரி | நாகர்கோவில் |

### 1.12.2. மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம் (ஸ்டாமின்), குடுமியான்மலை

மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையத்தில் வேளாண்மைத் துறையில் பணிபுரியும் விரிவாக்க அலுவலர்கள், அமைச்சுப்பணியாளர்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள், நிர்வாகம், விரிவாக்க மேலாண்மை, கணினி ஆகியவை தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

கடந்த 2023-24ஆம் ஆண்டில் 750 வேளாண் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு ரூ.19.62 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2024-25ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.12.3. மாநில வேளாண்மை மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிலையம் (சமிதி), குடுமியான்மலை

மாநில உறுதுணை விரிவாக்கத் திட்டங்களின் சீரமைப்புத் திட்டத்தின் கீழ், வேளாண்மை, அதன் தொடர்புடைய துறைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இப்பயிற்சி நிலையத்தினால் (சமிதி) பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும், வேளாண்மை விரிவாக்க மேலாண்மை முதுகலைப் பட்டயப்படிப்பு (PGDAEM), வேளாண் இடுபொருள் விற்பனையாளர்களுக்கான விரிவாக்க சேவைக்கான பட்டயப்படிப்பு (DAESI), பூச்சிக்கொல்லி வியாபாரிகள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கான பூச்சிக்கொல்லி மேலாண்மை குறித்த சான்றிதழ் படிப்பு, கிராமப்புர இளைஞர்களுக்கான திறன் வளர்க்கும் பயிற்சி (STRY) மற்றும் சான்றுபெற்ற பண்ணை ஆலோசகர் (Certified Farm Advisor) உரவிற்பனையாளர்களுக்கான ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை சான்றிதழ் படிப்பு போன்ற பயிற்சிகள் ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் மற்றும் தேசிய பயிர்நல மேலாண்மை நிலையத்துடன் இணைந்து வழங்கப்படுகின்றன.

கடந்த 2023–24ஆம் ஆண்டில் 330 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ.9.90 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2024–25ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.12.4. நீர் மேலாண்மை பயிற்சி மையம்

நீர் மேலாண்மை, நீர் பயன்பாட்டுத்திறன் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் 615 விவசாயிகள், 132 களப்பணியாளர்களுக்கு, மதுரை மாவட்டம், விநாயகபுரத்தில் செயல்பட்டு வரும், "நீர் மேலாண்மை பயிற்சி மையம்" மூலம் ரூ.20 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2024–25ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.13. பேரிடர் மேலாண்மை

வெள்ளம், வறட்சி, புயல் போன்ற இயற்கைப் பேரிடர்கள் நிகழ்வதால் வேளாண் பயிர்கள் மிகுந்த சேதமடைந்து பயிர் உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகியவை வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இடுபொருள் மானியம், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உரிய காலத்தில்

வழங்கி விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பேணிக்காத்திட மாநில அரசு பல்வேறு சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது.

கடந்த 2023ஆம் ஆண்டில் ஆலங்கட்டி மழை, கோடை மழை, டெல்டா மாவட்டங்களில் குறுவைப் பருவத்தில் பாசன நீர் பற்றாக்குறையால் நெற்பயிரில் ஏற்பட்ட மகசூல் இழப்பு, தென்மேற்கு பருவகாலத்தில் சீரான மழைப்பொழிவு இல்லாத காரணத்தினால் மக்காச்சோளப் பயிரில் ஏற்பட்ட மகசூல் இழப்பு, மிக்ஜாம் புயல், தென் மாவட்டங்களில் அதீத கனமழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் 7 இலட்சம் ஏக்கர் பரப்பில் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு நிவாரணமாக ரூ.284.94 கோடி, 3.96 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 1.14. உழவர் நலன் காக்க வேளாண் மண்டலக் குழுக்கள்

வேளாண்மை இயக்குநர் / தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் தலைமையில் மாவட்ட ஆட்சியர்களை உள்ளடக்கி வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,

பொதுப்பணித்துறை / நீர்வள ஆதாரத்துறை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் வனத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள், விவசாயிகள், சுற்றுச்சூழல் வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஏழு வேளாண் மண்டலங்களிலும் மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது, விவசாயம், இயற்கைப் பேரிடர்கள், மாசு தொடர்பான பிரச்சனைகள், புதிய திட்டங்களுக்கு விவசாய நிலத்தேவை தொடர்பான சிக்கல்கள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சனைகளைத் தீர்க்கும் தளமாகச் செயல்பட்டு வருகிறது.

வேளாண் மண்டலக் குழுக்களால், 2023-24ஆம் ஆண்டில் தெற்கு மண்டலம், அதிக மழைப்பொழிவு மண்டலத்தில், மண்டலக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. நடப்பு, 2024-25ஆம் ஆண்டிலும் வேளாண் மண்டலக் குழுக்கள் தொடர்ந்து செயல்படும்.

### 1.15. விவசாய கடன் அட்டைத் திட்டம்

விவசாயிகள் உரிய நேரத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி, கூட்டுறவு வங்கி, மண்டல ஊரக வங்கிகளிடமிருந்து போதிய கடனுதவி

பெற்று பயிர் சாகுபடி செய்திட உதவும் வகையில் "விவசாய கடன் அட்டை" வழங்கும் திட்டம் 1998ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள், குத்தகைதாரர்கள் உள்ளிட்ட அனைவரும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். விவசாயிகளின் நிலவுடைமை மற்றும் பயிர் சாகுபடிப் பரப்பின் அடிப்படையில் ரூ.1.60 இலட்சம் வரை வங்கிகளில் பிணையமில்லாத கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை விவசாயிகளுக்கு 32 இலட்சம் விவசாய கடன் அட்டை (புதுப்பித்த கடன் அட்டை உட்பட) வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடர்ந்து 2024–25ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

**1.16. விவசாயிகளுக்கான இலவச மும்முனை மின்சாரத் திட்டம்**

1990 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு இலவச மும்முனை மின்சாரம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2021–22–ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் மின் இணைப்புகள், 2022–23–ஆம் ஆண்டில் 50,000 மின் இணைப்புகள், 2023–24–ஆம் ஆண்டில் 18,975 மின் இணைப்புகள் புதிதாக வழங்கப்பட்டு தற்போது வரை 23.56 இலட்சம் இலவச மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு

வழங்கப்பட்டுள்ளன. 2023–24–ஆம் ஆண்டில் இலவச மின்சாரம் வழங்க ரூ.6,990.79 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2024–25ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.17. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன், உற்பத்தி திறனைப் பெருக்குதல், ஒற்றைப் பயிர் சாகுபடியைத் தவிர்த்தல், காலநிலை மாற்றத்திற்கு உகந்த இறவைப்பாசன வேளாண்மை, நீர்ப்பாசன மேலாண்மை, போன்ற நோக்கங்களுக்காக, தெரிவு செய்யப்பட்ட 51 துணையாற்றுப் படுகைகளில், 2017–18 ஆம் ஆண்டு முதல் ரூ.84.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 2024–25ஆம் ஆண்டில் நான்கு கட்டங்களாக, தெரிவு செய்யப்பட்ட 51 துணையாற்றுப்படுகைகளில் செயல்படுத்தப்படும். பயிர் செயல்விளக்கங்கள், உழவர் வயல்வெளிப் பள்ளிகள், விதைக்கிராமம், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, வேளாண் இயந்திரமயமாக்கல், திறன்

மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் மாதிரிக் கிராமத் திட்டம் ஆகிய இனங்களைக் கொண்டு ரூ.9.13 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 1.18. வேளாண்மைத்துறையில் வழங்கப்படும் விருதுகள்

வேளாண்மையில் புதிய இரகங்கள், பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி, அவற்றினைச் செயல்படுத்துவதன் மூலம் பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் பயிர் விளைச்சல் போட்டிகளை நடத்தி பல்வேறு சிறப்பு விருதுகளை தமிழ்நாடு அரசு வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்துவதுடன் பிற விவசாயிகளும் அவற்றினைப் பின்பற்றி அதிக மகசூல் பெற்றிடவும் ஊக்கப்படுத்தி வருகின்றது.

**அட்டவணை : 1.15 – விருதுகள் விவரம்.**

| வ. எண் | விருது விவரம் | பொது விவரம் | பரிசுத் தொகை விவரம் |
|---|---|---|---|
| I. | மாநில அளவிலான விருதுகள் | | |
| 1 | "திரு.சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது" | விவசாயிகளை செம்மை நெல் சாகுபடியில் மாநிலத்தில் அதிக உற்பத்தித்திறன் பெற்றிட ஊக்குவித்தல். | ரூபாய் 5 இலட்சம் மற்றும் வெள்ளிப் பதக்கம். |

| வ. எண் | விருது விவரம் | பொது விவரம் | பரிசுத் தொகை விவரம் |
|---|---|---|---|
| 2 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது | விவசாயிகளை பாரம்பரிய நெல் இரகங்களை பாதுகாத்திட ஊக்குவித்தல் | முதல் பரிசு – ரூபாய் ஒரு இலட்சம், இரண்டாம் பரிசு – ரூபாய் 75,000 மூன்றாம் பரிசு – ரூபாய் 50,000 |
| 3 | மாநில அளவில் சிறப்பாக செயலாற்றி அதிக விளைச்சல் பெறும் விவசாயிகளுக்கு பரிசு | கம்பு, பச்சைப்பயறு, உளுந்து, துவரை, குதிரைவாலி, சாமை, தினை, கேழ்வரகு, நிலக்கடலை, எள் மற்றும் கரும்பு ஆகிய 11 பயிர்களில் சாகுபடி மேற்கொண்டு அதிக உற்பத்தியைப் பெறும் விவசாயிகளை ஊக்குவித்தல் | முதல் பரிசு: ரூபாய் 2.5 இலட்சம்<br><br>இரண்டாம் பரிசு: ரூபாய் 1.5 இலட்சம்<br>மூன்றாம் பரிசு : ரூபாய் 1 இலட்சம்<br><br>(ஒவ்வொரு பயிருக்கும் தலா மூன்று பரிசுகள் வழங்கப்படும்) |
| II | **மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி** | | |
| 1 | நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி | விவசாயிகளை புதிய இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி அதிக உற்பத்தித்திறன் பெற்றிட ஊக்கப்படுத்துதல் | முதல் பரிசு – ரூபாய் 15,000/– இரண்டாம் பரிசு – ரூபாய் 10,000/– |
| 2 | சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, | | முதல் பரிசு – ரூபாய் 10,000/– இரண்டாம் பரிசு |

| வ. எண் | விருது விவரம் | பொது விவரம் | பரிசுத் தொகை விவரம் |
|---|---|---|---|
| | துவரை மற்றும் பச்சைப்பயறு | | – ரூபாய் 5,000/– |
| 3 | உணவு தானிய உற்பத்தியில் சாதனை எய்தும் மாவட்டங்களுக்கு விருது. | உணவு தானிய உற்பத்தி இலக்கில் அதிகபட்ச உற்பத்தி சாதனை செய்தல். பயிர் அறுவடைப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில், வெற்றியாளர்கள் தேர்வு. | மாவட்ட அளவில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம். |
| 4 | உணவு தானியப் பயிர்களான நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, உளுந்து, பச்சைப்பயறு | அதிகபட்ச உற்பத்தித் திறனை எய்தும் வட்டார விரிவாக்க அலுவலர்களை ஊக்கப்படுத்துதல். பயிர் அறுவடைப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் , வெற்றியாளர்கள் தேர்வு. | ஒவ்வொரு பயிருக்கும் ஒரு விருது வீதம் ஆறு விருதுகள் |

### 1.19. பயிர்க் காப்பீட்டுத் திட்டம்

வெள்ளம், வறட்சி, புயல், கன மழை போன்ற எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பயிர் இழப்பினால் பாதிப்படைந்த விவசாயிகளுக்குப் பொருளாதார ரீதியாக உதவிடும் நோக்கில் பிரதம

மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 2023-24ஆம் ஆண்டில் இத்திட்டமானது 60:130 இணைக் காப்பீட்டுத் திட்டமாக 37 மாவட்டங்களை உள்ளடக்கிய 14 தொகுப்புகளில் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டது.

விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காப்பீடு செய்வதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட காலக்கெடுவினை சம்பா நெற்பயிருக்கும், சிறப்பு, இராபி பருவ பயிர்களான நெல் தரிசில் பருத்தி, கரும்பு பயிர்களுக்கும் ஒன்றிய அரசின் ஒப்புதலோடு நீட்டிப்பு செய்து ஆணை வழங்கினார்கள்.

மேலும், மாநில அரசின் காப்பீட்டுக் கட்டணப் பங்காக இதுவரை ரூ.439.31 கோடி தமிழ்நாடு அரசால் காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு எடுத்த சீரிய முயற்சிகளினால், 2023-24ஆம் ஆண்டிற்கு இதுவரை ரூ.104.27 கோடி பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக சுமார் 67,332 விவசாயிகளுக்கு விதைப்பு செய்ய இயலாமையின் கீழ் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களுக்கும் மகசூல் சார்ந்த

இழப்பீட்டிற்கு திருநெல்வேலி, கடலூர் மாவட்டங்களுக்கும், பகுதி சார்ந்த பயிர் இழப்பீட்டிற்கு தூத்துக்குடி மாவட்டத்திற்கும் காப்பீட்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது சம்பா நெற்பயிருக்கு மகசூல் இழப்பின் அடிப்படையில் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு தேசிய பயிர்க் காப்பீட்டு இணையதளம் வாயிலாக இழப்பீட்டுத் தொகை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2024-25ஆம் ஆண்டில், ரூ. 1,775 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.20. பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி திட்டம் (PM - KISAN)

"பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி" திட்டம் ஒன்றிய அரசின் 100 சதவீத பங்களிப்புடன் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஆண்டிற்கு ரூ.6,000/- மூன்று தவணைகளில், சொந்த நிலம் வைத்துள்ள விவசாயக் குடும்பங்களுக்கு உதவித் தொகையாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடிப் பணப்பரிமாற்றம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை, ரூ.10,435.87 கோடி நிதியானது 21.39 இலட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் 16 தவணைகளாக நேரடி மானியமாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2024-25ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.21. வேளாண்மைத் துறை பணியாளர் அமைப்பு

வேளாண்மைத் துறையானது தொழில்நுட்ப அலுவலர்கள், அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள் பிரிவில், மொத்தம் 10,525 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

**அட்டவணை: 1.16 – தொழில்நுட்ப அலுவலர்கள்**

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | வேளாண்மை கூடுதல் | 5 |
| 2 | வேளாண்மை இணை | 37 |
| 3 | வேளாண்மை துணை இயக்குநர் | 132 |
| 4 | வேளாண்மை உதவி இயக்குநர் | 424 |
| 5 | வேளாண்மை அலுவலர் | 1,060 |
| 6 | துணை வேளாண்மை அலுவலர் | 337 |
| 7 | உதவி விதை அலுவலர் | 509 |
| 8 | உதவி வேளாண்மை அலுவலர் | 2,320 |
| | மொத்த தொழில்நுட்ப அலுவலர்கள் | 4,824 |

## அட்டவணை : 1.17 – அமைச்சு, இதர பணியாளர்கள்

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | துணை இயக்குநர் (நிர்வாகம்) | 2 |
| 2 | ஆட்சி அலுவலர் | 34 |
| 3 | கண்காணிப்பாளர் | 185 |
| 4 | உதவியாளர் | 642 |
| 5 | இளநிலை உதவியாளர் | 388 |
| 6 | தட்டச்சர் | 366 |
| 7 | கண்காணிப்பாளர் (பிணையம்) | 148 |
| 8 | உதவியாளர் (பிணையம்) | 249 |
| 9 | இளநிலை உதவியாளர் (பிணையம்) | 572 |
| 10 | சுருக்குத் தட்டச்சர் (தரம்–1) | 1 |
| 11 | சுருக்குத் தட்டச்சர் (தரம்–2) | 39 |
| 12 | சுருக்குத் தட்டச்சர் (தரம்–3) | 95 |
| 13 | ஓட்டுநர் | 292 |
| 14 | ஆய்வக உதவியாளர் | 143 |
| 15 | பதிவறை எழுத்தர் | 157 |
| 16 | அலுவலக உதவியாளர் | 586 |
| 17 | காவலர் | 1,133 |
| 18 | தொலைபேசி இயக்குபவர் | 2 |
| 19 | இதர பணியாளர்கள் | 667 |
| | **மொத்த தொழில்நுட்பமல்லாத இதர பணியாளர்கள்** | 5,701 |

## 2. சர்க்கரைத்துறை

### "கரும்பின் எந்திரம் களிற்று எதிர் பிளிற்றும்"

ஐங்குறுநூறு (55)

"கரும்பினைப் பிழியும் எந்திரமானது களிறு பிளிறும் குரலுக்கு எதிராக ஒலிக்கும்" என்று கரும்பாலை செயல்பாடு குறித்து ஐங்குறுநூறு கூறுகிறது.

கரும்பு விவசாயிகளின் நலனில் சிறப்புக் கவனம் செலுத்தும் நோக்குடனும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை அதிகரிக்கும் பொருட்டும் 2022ஆம் ஆண்டு முதல் சர்க்கரைத்துறை வேளாண்மை – உழவர் நலத்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டு தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சர்க்கரைத்துறையின் கீழ் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் லிமிடெட், தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் ஆகியன செயல்பட்டு வருகின்றன. சர்க்கரைத்துறையின் மூலம், புதிய சர்க்கரை ஆலைகள் அமைத்தல், சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கம், கரும்பு வளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு, கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகளைக் கண்காணித்தல், கரும்புப் பகுதிகளை சர்க்கரை ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்தல் போன்ற பணிகளுடன் கரும்பு உற்பத்தித்திறனை அதிகப்படுத்தவும், சாகுபடி

செலவினங்களைக் குறைக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சர்க்கரை, மதிப்புக் கூட்டப்பட்ட சர்க்கரை, எரிசாராயம், எத்தனால், காகிதம், மின்சாரம், இயற்கை உரம் ஆகியவை தயாரிப்பதற்கு கரும்பு மூலப்பொருளாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றுள், 2023-24 அரவைப் பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 16 தனியார் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன.

### 2.1. கரும்பு சாகுபடி

தமிழ்நாட்டில் சுமார் 1.50 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர். கிராமப்புர மக்களின் முன்னேற்றத்தில் கரும்புப் பயிரும், சர்க்கரை ஆலைகளும் பெரும்பங்கு வகிக்கின்றன. சர்க்கரைத் தொழில் நேரடியாகவும் மறைமுகமாகவும் அதிக வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது. இந்தியாவில் சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாடு 4-வது இடத்தில் உள்ளது. தொடர்ந்து சர்க்கரை உற்பத்தியில் தொடர்சரிவு என்ற நிலை மாறி 2022-23 அரவைப் பருவத்தில் 14.74 இலட்சம் மெ.டன் சர்க்கரை உற்பத்தி செய்து மாநிலத்தின்

சர்க்கரைத் தேவையான 15 இலட்சம் மெட்ரிக் டன் என்பதைப் பூர்த்தி செய்யும் நிலைக்கு முன்னேறி உள்ளது.

தமிழ்நாட்டில் சராசரியாக 1.59 இலட்சம் எக்டர் பரப்பளவில் எக்டருக்கு 111 மெட்ரிக் டன் சராசரி மகசூலுடன் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கரும்பில் சுமார் 65 முதல் 75 சதவீதம் சர்க்கரை ஆலைகளுக்கு மூலப்பொருளாக பயன்படுகிறது.

**அட்டவணை: 2.1. கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படும் பத்து முக்கிய மாவட்டங்கள்**


| வ. எண் | மாவட்டம் | கரும்பு சாகுபடி பரப்பு (எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெ. டன்) | உற்பத்தி திறன் (மெ. டன்/எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | 25,731 | 28.86 | 112 |
| 2 | ஈரோடு | 19,644 | 22.66 | 115 |
| 3 | திருவண்ணாமலை | 17,699 | 17.19 | 97 |
| 4 | விழுப்புரம் | 15,992 | 18.35 | 115 |
| 5 | கடலூர் | 15,918 | 20.10 | 126 |
| 6 | நாமக்கல் | 10,625 | 12.75 | 120 |
| 7 | சேலம் | 5,828 | 6.98 | 120 |
| 8 | அரியலூர் | 4,403 | 3.29 | 75 |
| 9 | திருவள்ளூர் | 4,264 | 4.90 | 115 |
| 10 | தருமபுரி | 4,217 | 5.44 | 129 |

*(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, 2022–23, தமிழ்நாடு அரசு)*

**2.1.1. சர்க்கரை ஆலைகளுக்கான கரும்பு சாகுபடிப் பரப்பு**

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்காக சாகுபடி செய்யப்படும் கரும்பு பதிவு பரப்பு, 2022-23 அரவைப் பருவத்தில் 55,000 எக்டரிலிருந்து 2023-24 அரவைப் பருவத்தில் 50,000 எக்டராகக் குறைந்துள்ளது. கரும்பு சாகுபடிப் பரப்பை அதிகரிக்க அரசு தொடர் நடவடிக்கைகள் எடுத்து வரும் சூழ்நிலையில், கடந்த ஆண்டை ஒப்பிடும் போது பெறப்பட்ட குறைவான மழை அளவு, எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட பூச்சி, நோய் தாக்குதல்கள் காரணமாக 2023-24 அரவைப் பருவத்திற்கு பதிவு செய்யப்பட்ட கரும்பு சாகுபடிப் பரப்பு முந்தைய பருவத்தை விட சற்று குறைந்துள்ளது. எனினும் இப்பரப்பு,2020-2021ஆம் ஆண்டின் பரப்பை விட அதிகம்.

**படம்: 2.1. கடந்த நான்கு நடவுப் பருவங்களில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு பதிவு விவரம்**





### 2.1.2. கரும்பு இரகங்கள்

தமிழ்நாட்டில், கோ 86032 இரகம் 47 சதவீத பரப்பிலும், கோ உ 09356 இரகம் 35 சதவீத பரப்பிலும், கோ 11015 இரகம் 8 சதவீத பரப்பிலும், இதர இரகங்கள் 10 சதவீத பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் கோ 11015, கோ க 13339, கோ கு 6, கோ கு 7, கோ 18009 (புன்னகை) மற்றும் புத்தாக்கம் செய்யப்பட்ட கோ 86032 போன்ற புதிய கரும்பு

இரகங்களை விவசாயிகளுக்கிடையே பரவலாக்கம் செய்திட கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் நாற்றங்கால் திட்டம் மூலமாக விதைப் பெருக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

படம்: 2.2. **தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் கரும்பு இரகங்கள்**





## 2.1.3. கரும்பு விலை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகை

2015–16 அரவைப் பருவம் முதல் 2019–20 அரவைப் பருவம் வரை கரும்பிற்கான விலை உயர்த்தப்படாமல் டன் ஒன்றுக்கு ரூ.2,750/– என்றிருந்தது. இதனைக் கருத்தில் கொண்டு 2020–21 அரவைப் பருவத்தில் மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் தமிழ்நாடு

அரசால் டன் ஒன்றுக்கு ரூ.192.5 ஊக்கத்தொகையாக கூடுதலாக வழங்கப்பட்டது. 2021-22 & 2022-23 அரவைப் பருவங்களில் டன் ஒன்றுக்கு ரூ.195 ஊக்கத்தொகையாக உயர்த்தி வழங்கப்பட்டது. இதனால் 2022-23 அரவைப்பருவத்தில் கரும்பு விலை டன் ஒன்றிற்கு ரூ.3,016/- ஆக உயர்த்தப்பட்டது. 2023-24 அரவைப் பருவத்தில் டன் ஒன்றுக்கு மத்திய அரசின் விலைக்கு மேல் ஊக்கத்தொகையாக ரூ. 215 அறிவிக்கப்பட்டு ரூ. 250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால், கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு டன் ஒன்றிற்கு ரூ.3,135/- கிடைக்கப்பெறும்.

**படம்: 2.3. தமிழ்நாட்டில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கரும்பு விலை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகை (ரூ.)**



மேலும், கரும்பிற்கான மாநில அரசின் ஊக்கத்தொகை விவசாயிகளின் வங்கிக்கணக்கிற்கு நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை: 2.2. விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்ட ஊக்கத்தொகை விபரம்**

| ஆண்டு | வழங்கப்பட்டதொகை (ரூ.கோடி) | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2021-22 | 150.90 | 91,120 |
| 2022-23 | 214.23 | 1,20,769 |
| 2023-24 | 258.86 | 1,41,968 |
| **மொத்தம்** | 623.99 | 3,53,857 |

### 2.1.4. கரும்பு சாகுபடி மேம்பாட்டுத்திட்டம்

#### 2.1.4.1 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP)

கரும்பு சாகுபடிப் பரப்பு மற்றும் சர்க்கரைக் கட்டுமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் (NADP) உயர் மகசூல், அதிக சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்களின் வல்லுநர் விதைக்கரும்பு, திசு வளர்ப்பு நாற்றுக்கள், பருசீவல் நாற்றுக்கள், ஒருபரு விதைக்கரும்பு போன்ற இனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டில் ரூ.3.70 கோடி

செலவில் செயல்படுத்தப்பட்டது. மேலும், இத்திட்டம் 2024–25 ஆம் ஆண்டிலும் ரூ.7.91 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

### 2.1.4.2. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (KAVIADP)

இத்திட்டத்தில், தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் கரும்பு சாகுபடி பரப்பு மற்றும் கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் உயர் மகசூல், அதிக சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்களின் பருசீவல் நாற்றுக்கள், ஒருபரு விதைக்கரும்பு ஆகியவை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் 2023–24 ஆம் ஆண்டில் ரூ. 25 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது. மேலும், இத்திட்டம் 2024–25 ஆம் ஆண்டிலும் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

### 2.1.5. நுண்ணீர்ப்பாசனம் (Micro Irrigation)

கரும்பு சாகுபடியில் சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதற்கு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75

சதவீத மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. கரும்பு விவசாயிகளுக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதற்குத் தேவைப்படும் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு மாநில நிதியிலிருந்து ஒரு எக்டருக்கு ரூ.32,715 லிருந்து ரூ.43,534 வரை சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறைந்த நீரைப் பயன்படுத்தி கரும்பு சாகுபடி மேற்கொள்ளும் வகையில் 2023-24 ஆம் ஆண்டு 1,432 எக்டர் பரப்பளவில் புதிதாக நுண்ணீர்ப்பாசனம் அமைக்கப்பட்டு 1,335 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். கரும்பு அறுவடை இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்ய ஏதுவாக விவசாயிகளுக்கிடையே அகலப்பார் முறையில் நடவு செய்து சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க 200 பயிற்சிகள் நடத்த 2024-25ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.1.6. கரும்பு அறுவடை இயந்திரங்கள்

கரும்பு அறுவடையின் போது ஏற்படும் இடர்பாடுகளுக்குப் படிப்படியாகத் தீர்வு காணும் பொருட்டும், குறைந்த செலவில் கரும்பு அறுவடை செய்திட ஏதுவாகவும், 2023-24ஆம் ஆண்டு வரை மொத்தம் 119 கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக கரும்பு

அறுவடை இயந்திரங்கள் வழங்க வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிலம் தயாரிப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்கும் பொருட்டு கரும்பு விவசாயிகளுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை இயந்திரம் மூலம் அறுவடை செய்திட ஏதுவாக, 34 சதவீத கரும்புப் பரப்பு அகலப்பார் முறையில் நடவு செய்யப்பட்டுள்ளது.

### 2.1.7. காட்டுப்பன்றி விரட்டி

கரும்பு சாகுபடியில் காட்டுப்பன்றியால் ஏற்படும் பயிர் சேதங்கள் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. கரும்பு விவசாயிகளின் தொடர்ச்சியான கோரிக்கையினைப் பரிசீலனை செய்து, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் 2023-24 ஆம் ஆண்டு நடவுப் பருவத்தில் கரும்பு பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் "காட்டுப் பன்றி விரட்டி" எக்டர் ஒன்றுக்கு ரூ.2,250/- மானியத்தில் 2,000 எக்டர் பரப்பளவிற்கு மொத்தம் ரூ.45 இலட்சம் மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### 2.1.8. கரும்பு விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்

2024–25ஆம் ஆண்டில் அட்மா திட்டத்தின் கீழ் 8,000 கரும்பு விவசாயிகளுக்கு நிலம் தயாரிப்பு முதல் கரும்பு அறுவடை வரை இயந்திரமயமாக்கலுக்கு ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கவும் நிழல்வலைக் கூடம் அமைத்து பருசீவல் நாற்றுகள் உற்பத்தி செய்ய முன்னோடி கரும்பு விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் குழு, மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2. சர்க்கரை ஆலைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் மேம்பாட்டுத் திட்டங்கள்

தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டு வரும் பல்வேறு செயல்திறன் மேம்பாட்டுத் திட்டங்களினால் கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் சரிவு நிலையிலிருந்து மீண்டு வருகின்றன, 2022–23 அரவைப் பருவத்தில் கள்ளக்குறிச்சி–2, சுப்ரமணிய சிவா, தருமபுரி, பெரம்பலூர், செங்கல்ராயன் ஆகிய ஐந்து சர்க்கரை ஆலைகள் இலாபம் ஈட்டும் நிலையை அடைந்துள்ளன.

### 2.2.1 தானியங்கி எடைமேடை

13 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தானியங்கி எடைமேடை அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கரும்பு விவசாயிகள் வழங்கும் கரும்பிற்கு துல்லியமான முறையில் எடையிடப்பட்டு உடனுக்குடன் எடை விவரங்கள் குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்படுகின்றன.

### 2.2.2 நவீன ஆய்வகம்

13 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் நவீன ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் கரும்பில் உள்ள சர்க்கரையின் அளவு துல்லியமாகவும், விரைவாகவும் ஆய்வு செய்யப்பட்டு சர்க்கரை சதவீதம் கணக்கீடு செய்யப்படுகிறது.

### 2.2.3 சிமெண்ட் கான்கிரீட் கரும்பு தளம் அமைத்தல்

2023-24 ஆம் ஆண்டில் செய்யாறு, செங்கல்ராயன், மதுராந்தகம், சேலம், திருத்தணி, அறிஞர் அண்ணா, பெரம்பலூர், ஆகிய சர்க்கரை ஆலைகளில் கரும்பு ஏற்றிச் செல்லும் வாகனங்கள் எளிதில் செல்ல ஏதுவாகவும், கூடுதல் வாகனங்களை நிறுத்திடவும், ரூ.2.12 கோடி செலவில் சிமெண்ட் கான்கிரீட் கரும்பு தளம் அமைக்கப்பட்டுள்ளன.

2024–25ஆம் ஆண்டில், 10 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ரூ.8.78 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் கரும்பு தளம் அமைக்கப்படவுள்ளது. மேலும், சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் கழிவு மண்ணைச் சேமித்து, மக்கச் செய்து உரமாகத் தயாரித்து கரும்பு விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் வழங்கும் நோக்குடன் நான்கு கூட்டுறவு, ஒரு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ரூ.2.67 கோடி மதிப்பீட்டில் கழிவு மண் மட்கும் களம் ஆகியன அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.4. சுழல்கவிழ்ப்பான்கள்

இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்படும் கரும்புகளை விரைவாகவும், எளிதாகவும் அரவைக்குப் பயன்படுத்தும் வகையில் வேலூர், எம்.ஆர்.கே, அறிஞர் அண்ணா ஆகிய சர்க்கரை ஆலைகளில் 2023–24 ஆம் ஆண்டில் ரூ.1.50 கோடி செலவில் சுழல்கவிழ்ப்பான்கள் நிறுவப்பட்டன. மேலும் 2024–25 ஆம் ஆண்டில், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ. 56 இலட்சம் மதிப்பீட்டில் சுழல்கவிழ்ப்பான் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.5. சர்க்கரை ஆலைக் கழிவு மண்ணை ஊட்டம் ஏற்றிய உரமாக மாற்றும் திட்டம்

மண் வளத்தைப் பாதுகாக்கவும், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் கணிசமாகக் குறைக்கவும், கழிவு மண்ணை ஊட்டமேற்றிய உரமாகத் தயார் செய்து கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலையில் வழங்கும் நோக்குடன் 2023-24 ஆம் ஆண்டில் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

### 2.2.6. சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு


கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் பணியாளர்கள், தொழிலாளர்கள் 01.10.2018 முதல் ஊதிய உயர்வு கோரி தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த நிலையில் தொழிலாளர்களின் கோரிக்கையினை அரசு கனிவுடன் பரிசீலனை செய்து 35 விழுக்காடு ஊதிய உயர்வு வழங்கியுள்ளது.

## 2.3. சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள்

### 2.3.1. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரவை

தமிழ்நாடு அரசு தொடர்ச்சியாக எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் அரவை செய்யப்பட்ட கரும்பின் அளவு 2020-21 அரவைப் பருவத்தில் 25.96 இலட்சம் மெ.டன்களிலிருந்து 2022-23 அரவைப் பருவத்தில் 40.97 இலட்சம் மெ.டன்களாக அதிகரித்துள்ளது. 2023-24 அரவைப் பருவத்தில் சுமார் 32.48 இலட்சம் மெ.டன்கள் அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கரும்பு சாகுபடிப் பரப்பை அதிகரிக்க அரசு தொடர் நடவடிக்கைகள் எடுத்து வரும் சூழ்நிலையில் கடந்த காலங்களை ஒப்பிடும் போது பெறப்பட்ட குறைவான மழை அளவு, எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட பூச்சி நோய்த் தாக்குதல்கள் காரணமாக 2023-24 அரவைப் பருவத்தில் அரவை செய்யப்படும் கரும்பின் அளவு முந்தைய பருவத்தை விட சற்றுக் குறைந்துள்ளது.

படம்: 2.4 . கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரவை விவரம்





## 2.3.2. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் சர்க்கரைக் கட்டுமானம்

தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளின் சர்க்கரைக் கட்டுமானம் தொடர்ச்சியாக 9 சதவீதத்திற்கும் குறைவாக இருந்து வந்த நிலையில் அரசின் நடவடிக்கைகள் காரணமாக பதினோரு ஆண்டுகளுக்குப் பிறகு 2022–23 அரவைப் பருவத்தில் 9.29 சதவீதம் என்ற அதிகபட்ச சர்க்கரைக் கட்டுமானத்தை அடைந்துள்ளன. 2023–

24 அரவைப் பருவத்தில் ஏற்பட்ட குறைவான மழை அளவு, காலநிலை மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் சராசரி சர்க்கரைக் கட்டுமானம் 8.90 சதவீதம் என்ற அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.


**படம்: 2.5 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் சர்க்கரைக் கட்டுமானம் (%)**



### 2.3.3. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் பயன்பாட்டுத்திறன் (Capacity Utilization)

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் பயன்பாட்டுத்திறன் 2019–20 அரவைப் பருவத்தில் 32 சதவீதத்திலிருந்து 2022–23 அரவைப் பருவத்தில் 56 சதவீதமாக உயர்ந்துள்ளது. 2023–24 அரவைப் பருவத்தில் 53 சதவீதமாக **இருக்கும்** என எதிர்பார்க்கப்படுகிறது.

படம்:2.6. **கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரைஆலைகளின்பயன்பாட்டுத்திறன்**(%)





### 2.3.4. இணைமின் திட்டம்

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் உற்பத்தி செலவைக் குறைத்து, வருவாயை உயர்த்திடும் நோக்கில் மறு சீரமைப்புப்

பணிகள் மேற்கொண்டு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) மூலம் மொத்தம் 183 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட 12 இணை மின் உற்பத்தித் திட்ட பணிகளில், தற்போது வரை 7 ஆலைகளில் (செங்கல்ராயன், வேலூர், செய்யாறு, அறிஞர் அண்ணா, பெரம்பலூர், தருமபுரி மற்றும் எம்.ஆர்.கே) 108 மெ.வாட் திறன் கொண்ட இணைமின் திட்ட நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள ஐந்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இணை மின் திட்டப்பணிகள் 2024-25ஆம் ஆண்டில் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மூலமாக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயன்பாட்டிலுள்ள இணைமின் நிலையங்களில் 2023-24 அரவைப் பருவத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 8.45 கோடி யூனிட் மிகை மின்சாரம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் (TANGEDCO) கட்டமைப்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**படம்: 2.7. செயல்பாட்டிலுள்ள 7 இணைமின் திட்டங்கள் மூலம் மின்சார ஏற்றுமதி செய்யப்பட்ட விவரங்கள்**




### 2.3.5. எத்தனால் உற்பத்தி

அமராவதி, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 1993–94 ஆம் ஆண்டில் 55 KLPD உற்பத்தித் திறன் கொண்ட எரிசாராய வடிப்பாலைகள் (Distilleries) நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், இவ்வாலைகளில் 2007 ஆம் ஆண்டு முதல் 30 KLPD உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் ஆலைகள் நிர்மாணிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

2023-24ஆம் ஆண்டில் 84.49 இலட்சம் லிட்டர் எரிசாராயம், 44.29 இலட்சம் லிட்டர் எத்தனால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மேலும், கள்ளக்குறிச்சி-1, எம்.ஆர்.கே ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கரும்புச்சாறு மற்றும் பி ஹெவி மொலாசஸ் ஆகியவற்றை மூலப்பொருளாகக் கொண்டு நாள் ஒன்றுக்கு 60 கிலோ லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் ஆலை நிறுவிட விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பு மூலம் பெறப்பட்டு, சுற்றுச்சூழல் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. எத்தனால் ஆலை நிறுவிடத் தேவைப்படும் நிதியினை நிதி நிறுவனங்களிடமிருந்து பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.4. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் 1974 ஆம் ஆண்டில், நிறுமச் சட்டம் (1956)ன் கீழ் ஒரு அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. இக்கழகம் தமிழ்நாட்டில் புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுதல், ஏற்கனவே உள்ள சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கம், கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் உபபொருட்களைக் கொண்டு

திட்டங்களைச் செயல்படுத்துதல், தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குவது போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில் உள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை மற்றும் பெரம்பலூர் மாவட்டம் எறையூரிலுள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலை ஆகியன தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் நிறுவனங்களாகும்.

**அட்டவணை: 2. 3. தமிழ்நாடு சர்க்கரைக் கழக ஆலைகளின் செயல்பாடுகள்**

| வ. எண் | பொருள் | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை | | பெரம்பலூர் சர்க்கரை ஆலை | |
|---|---|---|---|---|---|
| | | 2022-23 | 2023-24 | 2022-23 | 2023-24 |
| 1 | கரும்பு பதிவு (எக்டர்) | 2,274 | 874 | 4,272 | 1,415 |
| 2 | கரும்பு அரவை (மெ. டன்) | 2,46,001 | 2,04,123 | 3,43,722 | 2,39,152 |
| 3 | சர்க்கரைக் கட்டுமானம் (%) | 8.96 | 7.90 | 9.66 | 8.51 |
| 4 | சர்க்கரை உற்பத்தி (மெ.டன்) | 21,972 | 16,091 | 33,137 | 20,289 |
| 5 | அரவைத்திறன் (%) | 57.21 | 47.47 | 66.61 | 46.35 |

## 2.5. தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் லிமிடெட் (TNCSF)

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் 11.11.1961 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு 31.05.1962 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர் ஆலைகளின் பணிகளை ஒருங்கிணைத்தல், தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல், மையப்படுத்தப்பட்ட கொள்முதல் செய்தல், சர்க்கரை உபபொருட்களை விற்பனை செய்தல், தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் இணையம், இதர நிறுவனங்களில் உறுப்பினர் ஆலைகளின் பிரதிநிதியாக செயல்படுதல், ஆலைகளின் செயல்பாட்டுத் திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### 2.5.1. உயிரியல் ஆய்வு மையம்

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் ஒரு அலகாக 1982 ஆம் ஆண்டு முதல் உயிரியல் ஆய்வு மையம், செங்கல்பட்டில் செயல்பட்டு வருகிறது. இந்த ஆய்வுக்கூடத்தில், கரும்பு சாகுபடிக்கேற்ற உயிர் உரங்கள், உயிரியல் பூச்சிக்

கொல்லிகள் உற்பத்தி செய்யப்பட்டு கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைப் பகுதிகளில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இந்த ஆய்வுக்கூடத்தில் அசிட்டோபாக்டர், பாஸ்போபாக்டீரியா, ஆர்பஸ்குலர் மைகோரைசா ஆகிய உயிர் உரங்களும், டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ், மெட்டாரைசியம், பேசிலஸ் துரிஞ்ஜியன்சிஸ் போன்ற உயிரி பூச்சிக் கொல்லிகளும் உற்பத்தி செய்யப்பட்டு கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைப் பகுதிகளில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

உயிரியல் ஆய்வு மையம் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.1.15 கோடியும் 2023-24 ஆம் ஆண்டில் ரூ.0.66 கோடியும் நிகர வருவாய் ஈட்டியுள்ளது.

### 2.5.2. சர்க்கரை, உபபொருட்கள் விற்பனை – வருவாய்

கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளினால் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை, ஒன்றிய அரசின் மாதாந்திர ஒதுக்கீட்டின்படியும், ஆலைகளின் தேவைக்குப்பின் எஞ்சிய கரும்பு சக்கையானது தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் மற்றும் இதர நிறுவனங்களுக்கும், கரும்புக்

கசண்டு அமராவதி, சேலம் வடிப்பாலைகளின் தேவைக்குப்பின் எஞ்சிய கரும்பு கசண்டு தனியார் வடிப்பாலைகள், கால்நடைத் தீவன உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட பயன்பாட்டாளர்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

**அட்டவணை:2.4. 2023–24 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட சர்க்கரை மற்றும் உபபொருட்கள் (01.04.2023 முதல் 31.03.2024வரை)**

| வ. எண் | பொருட்கள் | விற்பனை செய்யப்பட்ட அளவு | மதிப்பு (ரூபாய். கோடியில்) |
|---|---|---|---|
| 1 | சர்க்கரை (Sugar) (இலட்சம் மெட்ரிக் டன்) | 3.61 | 1,346.05 |
| 2 | கரும்புச் சக்கை– (Bagasse) (மெட்ரிக் டன்) | 1,01,818 | 25.56 |
| 3 | கரும்புக் கசண்டு– (Molasses) (மெட்ரிக் டன்) | 1,95,475 | 176.61 |
| 4 | எரிசாராயம்– (Alcohol) (இலட்சம் லிட்டர்) | 131.61 | 66.14 |
| 5 | எத்தனால்–(இலட்சம் லிட்டர்) | 57.11 | 28.54 |

## 3. தோட்டக்கலை – மலைப்பயிர்கள் துறை

தோட்டக்கலை என்பது சாகுபடி மட்டுமில்லாமல் ஊட்டச்சத்து, ஆரோக்கியம், எழிலூட்டல், பொழுதுபோக்கு போன்ற மனித வாழ்விற்குத் தேவையான பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது. தோட்டக்கலை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் அவற்றை நமது அன்றாட வாழ்வியல் நடைமுறைகளுடன் இணைப்பதும் ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்க்கையை வழிநடத்த உதவுகின்றன.

மேலும், சுற்றுச்சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்து சாகுபடி செய்யும் வாய்ப்பு தோட்டக்கலைப் பயிர்களில் அதிகம் உள்ளதால் விவசாயிகள், தங்கள் விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும், வருமானத்தை அதிகரிப்பதற்கும், நிலையான விவசாய நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைகிறது. அதிக இலாபம்தரும் பயிர்களைப் பயிரிடுதல், நீர்ப்பாசன நுட்பங்களைச் செயல்படுத்துதல், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் போன்றவற்றினால் விவசாயிகள் பயிர்களின் உற்பத்தித்திறனையும், இலாபத்தையும் அதிகரிக்க முடியும்.

தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், மலைத்தோட்டப் பயிர்கள், அலங்காரத் தாவரங்கள், மருத்துவப் பயிர்கள் ஆகியவற்றின் தேவை அதிகரித்து வருவதால் தோட்டக்கலை, தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சியின் முக்கிய உந்து சக்தியாக உள்ளது.

இந்த நோக்குடன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளுக்கு உதவுவதிலும், உற்பத்தியை அதிகரிப்பதிலும், உணவு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும், தோட்டக்கலை விளைபொருட்களின் மதிப்புச் சங்கிலியை மேம்படுத்துவதிலும் இந்தத் திட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

2024-25-ஆம் ஆண்டில், தோட்டக்கலை மேம்பாடு, விவசாயிகளின் நலன், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வறண்ட நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்சாகுபடி, மூலிகைப் பயிர் சாகுபடி, நீர்ப்பாசனத்தை தானியங்கிமயமாக்கல், பந்தல் சாகுபடி, பூச்சி மேலாண்மை, பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல், பண்ணைகள், பூங்காக்கள் உருவாக்குதல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## 3.1. தமிழ் நாட்டின் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி, தேசிய அளவிலான பங்களிப்பு


தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், தோட்டப்பயிர்கள், சுவைதாளிதப் பயிர்கள், மருத்துவப் பயிர்கள், நறுமணப் பயிர்கள், மலர்கள் ஆகியவை 16.03 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்படுகின்றன. மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 233 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். தமிழ்நாட்டில் 2023-24ஆம் ஆண்டில், தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு 3.32 சதவீதமும், உற்பத்தி 4.35 சதவீதமும் முந்தைய ஆண்டைக் காட்டிலும் அதிகரித்துள்ளன.

**அட்டவணை 3.1: தோட்டக்கலைப் பயிர்களின் – சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித் திறன்**

| வ. எண் | தோட்டக்கலைப் பயிர் வகை | 2022-23 (இறுதி மதிப்பீடு) | | | 2023-24 (இரண்டாம் முன் மதிப்பீடு) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சாகுபடிப் பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ. டன்கள் / எக்டர்) | சாகுபடிப் பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ. டன்கள் / எக்டர்) |
| 1 | பழங்கள் | 3.34 | 74.43 | 22.31 | 3.34 | 75.29 | 22.52 |
| 2 | காய்கறிகள் | 3.62 | 91.96 | 25.38 | 3.63 | 92.36 | 25.46 |

| வ. எண் | தோட்டக்கலைப் பயிர் வகை | 2022-23 (இறுதி மதிப்பீடு) | | | 2023-24 (இரண்டாம் முன் மதிப்பீடு) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சாகுபடிப் பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ. டன்கள் / எக்டர்) | சாகுபடிப் பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ. டன்கள் / எக்டர்) |
| 3 | தோட்டப்பயிர்கள் | 7.33 | 56.08 | 7.65 | 7.59 | 56.28 | 7.41 |
| 4 | சுவை தாளிதப் பயிர்கள் | 1.16 | 3.31 | 2.84 | 1.11 | 3.30 | 2.97 |
| 5 | மருத்துவ, நறுமணப் பயிர்கள் | 0.14 | 1.43 | 10.14 | 0.16 | 1.68 | 10.52 |
| 6 | மலர்கள் | 0.44 | 5.87 | 13.29 | 0.47 | 6.31 | 13.55 |
| | **மொத்தம்** | 16.03 | 233.08 | | 16.30 | 235.22 | |


## வரைபடம் 3.1: தமிழ்நாடு – தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி பரப்பு – 2022–23



## அட்டவணை 3 .2: தமிழ்நாடு – பல்வேறு தோட்டக்கலைப் பயிர் சாகுபடி பரப்பில் தேசிய அளவிலான நிலை

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| 1. மரவள்ளி<br>2.கிராம்பு<br>3. புளி<br>4.மல்லிகை<br>(குண்டுமல்லி) | 1. வாழை<br>2. தர்பூசணி<br>3. கொக்கோ<br>4. செவ்வந்தி<br>5. சம்பங்கி | 1. தென்னை<br>2. நெல்லி<br>3. கருணைக் கிழங்கு<br>4. மிளகு |
| **ஆதாரம்**: இறுதி மதிப்பீடு 2022–23, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை – உழவர்நலத்துறை, புது தில்லி | | |


## வரைபடம் 3.2: தமிழ்நாடு – தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தி – 2022– 23



## அட்டவணை 3.3: தமிழ்நாடு – பல்வேறு தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியில் தேசிய அளவிலான நிலை

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| 1. கிராம்பு<br>2. புளி<br>3.மல்லிகை<br>(குண்டுமல்லி)<br>4. சம்பங்கி<br>5. மரவள்ளி | 1. கொக்கோ<br>2.செவ்வந்தி | 1. தென்னை<br>2.நெல்லி<br>3. வாழை<br>4. தர்பூசணி<br>5. கருணைக்கிழங்கு |
| **ஆதாரம்**: இறுதி மதிப்பீடு 2022–23, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை – உழவர்நலத்துறை, புது தில்லி | | |

## 3 .1 .1 : பழப்பயிர்கள்



**அட்டவணை 3.4: பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் – 2022–23**


| வ. எண் | பழங்கள் | பரப்பு (எக்டர்) | பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மா | 1,45,886 | கிருஷ்ணகிரி (32,302), திண்டுக்கல் (15,865), தருமபுரி (14,589), திருவள்ளூர் (11,337), தேனி (9,236). |
| 2 | வாழை | 1,09,366 | ஈரோடு (20,075), கோயம்புத்தூர் (9,123), தூத்துக்குடி (8,648), தேனி (6,732), திருநெல்வேலி (6,326) |
| 3 | தர்பூசணி | 20,975 | செங்கல்பட்டு (10,996), விழுப்புரம் (2,968), திருவள்ளூர் (1,647), திருவண்ணாமலை (1,183), சேலம் (787) |
| 4 | கொய்யா | 14,628 | திண்டுக்கல் (2,259), மதுரை (1,707), விருதுநகர் (1,371), கடலூர் (1,254), விழுப்புரம் (1,006). |
| 5 | எலுமிச்சை | 12,025 | தென்காசி (3,079), திண்டுக்கல் (2,354), திருச்சிராப்பள்ளி (1,024), தூத்துக்குடி (758), விருதுநகர் (717). |
| 6 | இதர பழங்கள் | 30,688 | திண்டுக்கல் (5,720), தேனி (2,846), சேலம் (1,765), நாமக்கல் (1,685), திருநெல்வேலி (1,640), |
| **பழப்பயிர்கள் மொத்த சாகுபடிப் பரப்பு = 3,33,567 எக்டர்** | | | |

### 3.1.1.1 முக்கனிகள் சிறப்புத்திட்டம்:

2024–25–ஆம் ஆண்டு, மா வில் தென்னாட்டு இரகங்கள், ஏற்றுமதிக்கு உகந்த இரகங்கள் ஆகியவற்றைப் பிரபலப்படுத்துதல், வாழையில் திசு வளர்ப்பு, கரணைகள் மூலம் பரப்பு விரிவாக்கம், இயற்கை இடர்பாடுகளால் சேதமடைவதைத் தடுப்பதற்கு வாழைக்கு முட்டுக்கொடுத்தல்,

வாழைத்தார் உறைகள், பலாவில் உள்ளூர், புதிய இரகங்களைப் பயிரிடச் செய்தல் ஆகிய செயல்பாடுகளுடன் முக்கனிகளுக்கான சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். நீர்த் தேவையினை குறைத்து வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய டிராகன் பழம், அத்தி, விளாம்பழம், இலந்தை, பெருநெல்லி, கொடுக்காப்புளி ஆகிய பழப்பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

### 3 .1 .2: காய்கறிகள்




## அட்டவணை. 3.5: காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2022–23)

| வ. எண் | காய்கறிகள் | பரப்பு (எக்டர்) | காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | மரவள்ளி | 88,683 | நாமக்கல் (17,755), கள்ளக்குறிச்சி (15,604), தருமபுரி (13,860), சேலம் (13,117), ஈரோடு (6,021) |
| 2. | சின்ன வெங்காயம் | 43,972 | பெரம்பலூர் (8,732), திருச்சிராப்பள்ளி (5,992), தூத்துக்குடி (5,104), நாமக்கல் (4,654), திண்டுக்கல் (3,559). |
| 3. | தக்காளி | 41,526 | தருமபுரி (12,668), கிருஷ்ணகிரி (11,018), சேலம் (3,958), திண்டுக்கல் (2,544), திருப்பூர் (2,112). |
| 4. | வெண்டை | 21,904 | தருமபுரி (3,614), சேலம் (2,736), திருவண்ணாமலை (1,827), கிருஷ்ணகிரி (1,067), இராணிப்பேட்டை (884). |
| 5. | கத்தரி | 20,444 | தருமபுரி (3,342), சேலம் (2,548), திருவண்ணாமலை (1,696), கிருஷ்ணகிரி (1,541), திருப்பத்தூர் (905). |
| 6 | இதர காய்கறிகள் | 1,45,750 | கிருஷ்ணகிரி (28,697), திண்டுக்கல் (16,655), சேலம் (8,930), தருமபுரி (8,793), நீலகிரி (7,977). |
| **காய்கறிகள் மொத்த சாகுபடிப் பரப்பு = 3,62,279 எக்டர்** | | | |

2024–25–ஆம் ஆண்டில், பகுதி சார்ந்த காய்கறிப் பயிர்களான உருளைக்கிழங்கு, கொடைக்கானல் மலைப்பூண்டு ஆகியவற்றின் பரப்பு, உற்பத்தி அதிகரிக்கப்படும். பாரம்பரிய காய்கறிகளின் சாகுபடியினை அதிகரித்திடவும், பந்தல் காய்கறிகளின் சாகுபடியை அதிகரித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 3 .1 .3 : தோட்டப்பயிர்கள் (Plantation Crops)





## அட்டவணை 3.6: தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2022–23)

| வ. எண் | தோட்டப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தென்னை | 4,72,711 | கோயம்புத்தூர் (91,809), திருப்பூர் (73,311), தஞ்சாவூர் (41,414), திண்டுக்கல் (30,270), கன்னியாகுமரி (25,092). |
| 2 | முந்திரி | 84,484 | அரியலூர் (30,562), கடலூர் (29,240), புதுக்கோட்டை (5,904), விழுப்புரம் (3,325), தேனி (3,202). |
| 3 | தேயிலை | 69,353 | நீலகிரி (55,522), கோயம்புத்தூர் (11,1194), தேனி (1,621), திருநெல்வேலி (804), கன்னியாகுமரி (208). |
| 4 | காப்பி | 33,142 | திண்டுக்கல் (11,044), நீலகிரி (7,321), சேலம் (7,100), தேனி (2,994), கோயம்புத்தூர் (2,247). |
| 5 | இரப்பர் | 29,191 | கன்னியாகுமரி (29,096), நீலகிரி (50), தென்காசி (42) |
| 6 | இதர தோட்டப் பயிர்கள் | 43,974 | கிருஷ்ணகிரி (4,400), கோயம்புத்தூர் (3,503), சேலம் (3,236), இராமநாதபுரம் (2,801), தூத்துக்குடி (2,701) |
| **தோட்டப்பயிர்கள் மொத்த சாகுபடிப் பரப்பு = 7,32,855 எக்டர்** | | | |

2024–25–ஆம் ஆண்டில் தென்னையில் பரப்பு விரிவாக்கம், தென்னையில் கொக்கோ ஊடுபயிர் சாகுபடி, முந்திரிக் காடுகள் பரப்பு அதிகரித்தல், பழைய முந்திரித் தோட்டங்களைப் புதுப்பித்து உற்பத்திறனை அதிகரித்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

### 3 .1.4 : சுவை தாளிதப் பயிர்கள்





### அட்டவணை 3.7 : சுவை தாளிதப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2022–23)

| வ. எண் | சுவை தாளிதப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | சுவை தாளிதப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மிளகாய் | 52,703 | இராமநாதபுரம் (14,945), தூத்துக்குடி (14,403), சிவகங்கை (3,239), திருவண்ணாமலை (1,923), சேலம் (1,862), |

| வ. எண் | சுவை தாளிதப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | சுவை தாளிதப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 2 | மஞ்சள் | 24,746 | தருமபுரி (6,876), சேலம் (5,259), ஈரோடு (4,694), கள்ளக்குறிச்சி (2,500), நாமக்கல் (1,762). |
| 3 | புளி | 13,904 | திண்டுக்கல் (3,227), தேனி (1,520), மதுரை (1,132), கிருஷ்ணகிரி (963), தருமபுரி (951). |
| 4 | மிளகு | 7,465 | நாமக்கல் (2,517), திண்டுக்கல் (1,460), சேலம் (1,454), நீலகிரி (992), கன்னியாகுமரி (311). |
| 5 | கொத்தமல்லி | 6,809 | தூத்துக்குடி (2,813), இராமநாதபுரம் (1,448), விருதுநகர் (1,433), திருப்பத்தூர் (285), திருப்பூர் (238). |
| 6 | இதர சுவை தாளிதப் பயிர்கள் | 10,773 | கோயம்புத்தூர் (2,327), நீலகிரி (1,830), தேனி (1,669), திண்டுக்கல் (1,252), கிருஷ்ணகிரி (901). |
| சுவை தாளிதப் பயிர்கள் மொத்த சாகுபடிப் பரப்பு = 1,16,400 எக்டர் | | | |

2024–25 ஆம் ஆண்டில், இலவங்கப்பட்டை, மிளகு, ஏலக்காய், ஜாதிக்காய் ஆகிய பகுதி சார்ந்த சுவைதாளிதப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும், மிளகாய் பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டு மிளகாய் காடுகள் பரப்பு விரிவாக்கம், சீமைக்கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடியின் கீழ் கொண்டு வருதல் ஆகியவற்றிற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## 3 .1 .5: மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள்





### அட்டவணை 3.8 : மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2022–23)

| வ. எண் | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | கண்வலிக்கிழங்கு | 6,075 | திண்டுக்கல் (3,111), திருப்பூர் (2,255), கரூர் (628), திருச்சிராப்பள்ளி (41), நாமக்கல் (13). |
| 2 | வேம்பு | 2,701 | விருதுநகர் (668), தூத்துக்குடி (377), மதுரை (245), திருநெல்வேலி (228), நாமக்கல் (161). |
| 3 | பால்மரோசா புல் | 1,763 | தருமபுரி (1,248), திருவண்ணாமலை (470), கள்ளக்குறிச்சி (25), விழுப்புரம் (20). |
| 4 | புதினா | 917 | கிருஷ்ணகிரி (880) |
| 5 | எலுமிச்சைபுல் | 809 | திருவண்ணாமலை (792), தேனி (11). |
| 6 | இதர பயிர்கள் | 1,869 | விருதுநகர் (383), திருவண்ணாமலை (249), சேலம் (238), கள்ளக்குறிச்சி (212), திண்டுக்கல் (163) |
| மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் மொத்த சாகுபடிப் பரப்பு = 14,134 எக்டர் | | | |

செங்காந்தள், சென்னா, மருந்துக்கூர்க்கன், நித்யகல்யாணி ஆகிய மூலிகைப் பயிர்களின் சாகுபடியினை ஊக்குவித்திட மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் மூலம் இவ்வாண்டு திட்ட இனங்கள் செயல்படுத்தப்படும்.

### 3.1.6: மலர்கள்




## அட்டவணை 3.9: மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2022–23)

| வ. எண் | மலர்கள் | பரப்பு (எக்டர்) | மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மல்லிகை (குண்டுமல்லி) | 11,903 | மதுரை (1,565), திருவள்ளூர் (1,082) தருமபுரி (1,071), ஈரோடு (998), சேலம் (809). |
| 2 | சாமந்தி | 8,958 | கிருஷ்ணகிரி(3,545),தருமபுரி(1,948) சேலம்(1,697), திருவண்ணாமலை (578), திருச்சிராப்பள்ளி (175) |

| வ. எண் | மலர்கள் | பரப்பு (எக்டர்) | மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 3 | சம்பங்கி | 6,108 | தருமபுரி (1,871), திருவண்ணாமலை (1,361), ஈரோடு (552), திண்டுக்கல் (276), சேலம் (219) |
| 4 | செண்டு மல்லி | 4,383 | கிருஷ்ணகிரி (2,305), திருவண்ணாமலை (459), தருமபுரி (320), திருச்சிராப்பள்ளி (139), திருவள்ளூர் (131). |
| 5 | ரோஜா | 3,160 | கிருஷ்ணகிரி (1,491), தருமபுரி (310), திருவண்ணாமலை (202), நாமக்கல் (161), சேலம் (158). |
| 6 | இதர மலர்கள் | 9,641 | திருவண்ணாமலை (1,686), சேலம் (1,377), தருமபுரி (1,227), திண்டுக்கல் (751), நாமக்கல் (497). |
| **மலர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 44,153 எக்டர்** | | | |

## 3.2. ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 3.2.1. துளி நீரில் அதிக பயிர் – தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – நுண்ணீர்ப் பாசனம்

நீரின் பயன்பாட்டுத் திறனை அதிகப்படுத்தி, சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித் திறனை உயர்த்தும் நோக்கில் துளி நீரில் அதிக பயிர்– நுண்ணீர்ப் பாசனத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீரின் தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதால், நீர் பயன்பாட்டுத் திறனை அதிகப்படுத்தி

சாகுபடிப் பரப்பை உயர்த்த வேண்டியது அவசியமாகிறது.

இதன் முக்கியத்துவத்தை அறிந்து, மாநில அரசு கூடுதல் நிதியுதவி அளித்து சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கி வருகிறது. நுண்ணீர்ப்பாசன அமைப்புகளுக்கான 12 சதவீத சரக்கு சேவை வரியையும் அனைத்து விவசாயிகளுக்கும் மாநில அரசே ஏற்கிறது.

2023-24-ஆம் ஆண்டு முதல் நுண்ணீர்ப் பாசனத்திட்டம், "துளி நீரில் அதிக பயிர்" என்ற இனத்தின் கீழ் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 1,29,020 எக்டரில், ரூ.1,084.80 கோடி நிதியில், 1,32,087 விவசாயிகளுக்கு நுண்ணீர்ப்பாசன அமைப்புகள் நிறுவப்பட்டன.

2024-25-ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.888.69 கோடி நிதியில், 1,02,748 எக்டரில், 1,17,000 விவசாயிகள் பயனடையும் வகையில் கீழ்க்கண்ட பணிகளுடன் செயல்படுத்தப்படும்:-

1. 90,000 எக்டரில் நுண்ணீர்ப்பாசன அமைப்புகள் நிறுவுதல்
2. 11,868 எக்டரில் நுண்ணீர்ப்பாசனத்தை இயக்கிட தானியங்கி அமைப்புகள் நிறுவுதல்
3. நுண்ணீர்ப்பாசன அமைப்புகளை நிறுவுவதை ஊக்குவிக்கும் வகையில் ஆழ்துளைக்கிணறு, நீர் செலுத்தும் குழாய், மின் மோட்டார், நீர் சேகரிப்புத் தொட்டி போன்றவற்றிற்கு மானியம் வழங்குதல்.
4. கீழ்பவானி அணையின் பாசனப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நுண்ணீர்ப்பாசனக் கட்டமைப்புகளை உருவாக்குதல்.

### 3.2.2. தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)

2022-23-ஆம் ஆண்டு முதல் வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் (Krishionnati Yojana) கீழ் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்தின் துணை திட்டமாக 26 மாவட்டங்களில் தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023-24-ஆம் ஆண்டில், ரூ.200 கோடி நிதியில் 98,090 விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் ரூ.36.23 கோடி நிதியில் 19,888 எக்டரில் தோட்டக்கலைப் பயிர்களில் பரப்பு விரிவாக்கமும், 750 எக்டரில் இயற்கை முறையில் பயிர் சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூன்று காளான் உற்பத்திக்கூடங்கள் ரூ.0.24 கோடி நிதியில் அமைக்கப்பட்டுள்ளன. 1,150 தனிநபருக்கான நீர் சேமிப்பு அமைப்புகள் ரூ.8.63 கோடி நிதியில் உருவாக்கப்பட்டுள்ளன. பாதுகாக்கப்பட்ட சூழல் பயிர் சாகுபடி ரூ.45.92 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டுள்ளது. அறுவடைக்குப் பிந்தைய இழப்பினைக் குறைப்பதற்காக ஒருங்கிணைந்த அறுவடை பின்செய் மேலாண்மை சார்ந்த கட்டமைப்புகள் ரூ.53.52 கோடி நிதியில் உருவாக்கப்பட்டுள்ளன.

2024-25-ஆம் ஆண்டில், தோட்டக்கலைப் பயிர்களான மலைப்பூண்டு, மிளகு, மிளகாய், ஏலக்காய், கிராம்பு, இலவங்கப்பட்டை, ஜாதிக்காய், கொக்கோ போன்ற பயிர்களை பகுதி சார்ந்த இடங்களில் ஊக்குவிக்க முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், ஒருங்கிணைந்த உரம், பூச்சி மேலாண்மை, நெகிழி

நிலப்போர்வை ஆகிய தொழில்நுட்பங்களை மேற்கொண்டு வறண்ட நிலப்பகுதிகளில் டிராகன் பழம், அத்தி, நெல்லி, விளாம்பழம், இலந்தை போன்ற குறைந்த நீர் தேவைப்படும் பயிர்களை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மா, வாழை, மிளகாய், முந்திரி, பலா ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சிக்கான செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படும். இத்திட்டம் ரூ.218.75 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

### 3.2.3. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (NADP)

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டமானது, வேளாண்மை, வேளாண் சார்ந்த முழுமையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023–24–ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.19.64 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களில் பரப்பு விரிவாக்கம் 3,332 எக்டரிலும், சிறப்பு தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவித்தல் இனம் 3,060 எக்டரிலும் செயல்படுத்தப்பட்டன. 1,400 எக்டரில் நிரந்தரப் பந்தல், குச்சி கட்டுதல் போன்ற துணைக் கட்டமைப்புகள்

நிறுவப்பட்டன. 1,564 எக்டருக்கான நெகிழி நிலப்போர்வைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

2024-25-ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.45 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது. தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் 7,418 எக்டரிலும், சிறப்பு தோட்டக்கலைப் பயிர்களான டிராகன் பழம், கொடுக்காப்புளி, அத்தி, விளாம்பழம், இலந்தை ஆகியவை 74 எக்டரிலும் பரப்பு விரிவாக்கம் செய்யப்படும். தரமான வாழைப்பழங்களைப் பெற, வாழைத்தார் உறைகள் 750 எக்டருக்கு விநியோகித்தல், 1,500 எக்டரில் வாழைமரங்களுக்கு முட்டுக்கொடுத்தல் மேற்கொள்ளப்படும். 500 எக்டருக்கு நிரந்தர பந்தல், 19,000 சதுர மீட்டர் அளவில் பசுமைக்குடில், நிழல்வலைக் கூடாரங்கள் அமைத்தல். 290 எக்டரில் மா, முந்திரியின் பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல் போன்ற திட்ட இனங்கள் செயல்படுத்தப்படும்.

### 3.2.4. மானாவாரிப் பகுதி மேம்பாடு (RAD)

மானாவாரிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், ஒருங்கிணைந்த பண்ணைய முறையில், தோட்டக்கலைப்பயிர் சாகுபடி, கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு, மரம் வளர்ப்பு போன்றவற்றை ஒருங்கிணைத்து, பருவ மாற்றத்தால் பயிர் இழப்புகள்

ஏற்படாமல் பாதுகாத்து, உற்பத்தியினை உறுதி செய்து, நிலையான வருவாய் ஈட்ட விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

2023–24–ஆம் ஆண்டில், மானாவாரிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், ஒருங்கிணைந்த பண்ணையம், அரியலூர், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தென்காசி, தேனி, திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருச்சி, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம், விருதுநகர் ஆகிய 30 மாவட்டங்களில் ரூ.29 கோடி நிதியில் மேற்கொள்ளப்பட்டு, கறவை மாடு / ஆடு , மண்புழு உரப்படுக்கைகள், தேனீ பெட்டி, காய்கறி விதைகள், பழச்செடிகள் போன்றவை அடங்கிய அலகுகள் வழங்கப்பட்டு 9,693 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2024–25–ஆம் ஆண்டில், ரூ.12 கோடி நிதியில் 4,000 அலகுகள் அமைத்து 4,000 விவசாயிகள் பயன்பெற இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 3.2.5. வேளாண் காடுகள்

2023–24–ஆம் ஆண்டு முதல் வேளாண் காடுகள் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தரமான நடவுப் பொருட்களை உற்பத்தி செய்வதும், அதன் மூலம் வேளாண் சாகுபடியோடு மரப்பயிர் சாகுபடியினை ஒருங்கிணைப்பதை ஊக்குவித்து உற்பத்தித் திறன் அதிகரிப்பு, கூடுதல் வருமானம் ஆகியவற்றின் மூலம் ஊரக மக்களின், குறிப்பாக சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

2023–24–ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.3.17 கோடி நிதி ஒதுக்கீட்டில் உயர் தொழில் நுட்ப நாற்றங்கால், பெரிய நாற்றங்கால், சிறிய நாற்றங்கால், ஏற்கனவே உள்ள நாற்றங்கால் பண்ணைகளில் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குதல், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, விழிப்புணர்வு ஆகிய இனங்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2024–25–ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.2.38 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 3.2.6. பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம்:

2023–24–ஆம் ஆண்டில் ஏற்கனவே இயற்கை விவசாயம் செய்து வரும் அல்லது இயற்கை விவசாயம் செய்ய உத்தேசித்துள்ள விவசாயிகளுக்கு

முதலாம் ஆண்டு உயிர்மச் சான்றிதழ் பெறுவதற்கான கட்டணத்திற்கென ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. ஒரு எக்டருக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.2,000 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.6,000 வழங்கப்படும்.

2024–25–ஆம் ஆண்டிலும் இரண்டாம் வருட உயிர்மச் சான்றிதழ் கட்டணத்திற்கென ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.7 தேசிய மூங்கில் இயக்கம் (NBM)

மூங்கில் தோட்டங்களின் பரப்பளவை வனமல்லாத அரசு நிலங்களிலும், தனியார் நிலங்களிலும் அதிகரிக்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பங்களை ஊக்குவித்தல், மூங்கில் பயிர் வளர்ப்பதற்கான திறன் மேம்பாடு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் பிற நோக்கங்களாகும் .

2023–24–ஆம் ஆண்டில் ரூ.2.50 கோடி நிதியில் 579 எக்டரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 2024–25–ஆம் ஆண்டில் ரூ.2.26 கோடி நிதியில் 925 எக்டரில் செயல்படுத்தப்படும்.

**3.2.8. தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் – எண்ணெய்ப்பனை (NMEO–OP)**

தமிழ்நாட்டில், சமையல் எண்ணெய்ப் பயிர்களின் பரப்பு, உற்பத்தியினை அதிகரித்திட, தேசிய சமையல் எண்ணெய் இயக்கம்– எண்ணெய்ப்பனை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023–24–ஆம் ஆண்டில், ரூ.1.28 கோடி நிதி செலவில் 303 எக்டரில் எண்ணெய்ப்பனை சாகுபடி ஊக்குவிக்கப்பட்டுள்ளது. முதல் நான்கு வருடங்கள் வரை எண்ணெய்ப்பனை பராமரிப்பிற்காகவும், எண்ணெய்ப்பனையில் ஊடுபயிருக்காகவும் இத்திட்டத்தில் மானியம் வழங்கப்படுகிறது. மேலும், ஆழ்துளைக்கிணறு அமைத்தல், டீசல்/ மின்சாதன பம்புசெட்டுகள், எண்ணெய்ப்பனை பழக்குலைகளை அறுவடை செய்யக் கருவிகள், உபகரணங்கள் ஆகியவற்றிற்கு இத்திட்டத்தில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் ஐந்தாம் வருடத்திலிருந்து எட்டு மெட்ரிக் டன் அல்லது அதற்கு மேல் பழக்குலை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு

உற்பத்தி மானியமாக ஒரு மெட்ரிக் டன்னிற்கு ரூ.1,000/- ஊக்கத்தொகை வழங்கப்படும்.

இத்திட்டம் 2024-25-ஆம் ஆண்டில் ரூ.6.58 கோடி நிதியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2.9. ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம்

தென்னையில் உற்பத்தி, உற்பத்தித் திறனை உயர்த்தும் நோக்கில் தென்னை வளர்ச்சி வாரிய, மாநில திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 2023-24ஆம் ஆண்டு தென்னை வளர்ச்சி வாரிய திட்டத்தில் மண்டல தென்னை நாற்றுப்பண்ணைகள் தோற்றுவித்தல், செயல் விளக்கத்திடல்கள் அமைத்தல், எருக்குழி அமைத்தல், தென்னந்தோப்பில் மறுநடவு, புத்தாக்கம் போன்ற இனங்கள் ரூ.13.89 கோடி செலவினத்தில் செயல்படுத்தப்பட்டன. தென்னை வளர்ச்சி வாரிய திட்டங்கள் வரும் 2024-25-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தென்னையில் பல்வேறு பூச்சி, நோய்த்தாக்குதல் ஏற்பட்டு மகசூல் குறைவதால், அதன் உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகியவை குறைகின்றன. அதில் முக்கியமானது "தென்னை

வேர்வாடல் நோய்" ஆகும். இந்நோய் கேரள மாநிலத்திற்கு அருகில் உள்ள மாவட்டங்களில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியது. தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தென்னை வேர்வாடல் நோய் மீட்பு திட்டத்தினை 2023-24 மற்றும் 2024-25ஆம் ஆண்டுகளில் 4,500 எக்டரில் ரூ.21.14 கோடி நிதி செலவினத்தில் செயல்படுத்திட அறிவிப்பு செய்தார்கள். இத்திட்டத்தில் நோய் தாக்கிய மரங்களை வெட்டி அகற்றுதல், தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்குதல், நோய் தாக்கிய தென்னந்தோப்புகளைப் புத்தாக்கம் செய்ய இடுபொருட்கள் வழங்குதல் போன்ற இனங்கள் இதுவரை 2,275 எக்டரில் ரூ.9.39 கோடி நிதி செலவினத்தில் கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3.3. மாநிலத் திட்டங்கள்

### 3.3.1. மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS)

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கவும், விளைச்சலைப் பெருக்கவும், தோட்டக்கலை விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் 100 சதவீத மாநில அரசின் பங்களிப்புடன் 2023–24–ஆம் ஆண்டு மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் ரூ.35.69 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், ஹைட்ரோபோனிக்ஸ், செங்குத்துத் தோட்டம், பாதுகாக்கப்பட்ட சூழலில் சாகுபடி, மாடித் தோட்டம் அமைப்பதற்கான தளைகள், பழச்செடி தொகுப்புகள் விநியோகம், வாழை, மரவள்ளியில் ஊடுபயிராகக் காய்கறிகள் சாகுபடி, பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களில் காய்கறிகள் ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவித்தல், வெற்றிலையில் ஒருங்கிணைந்த உரம், பூச்சி மேலாண்மை, நெகிழிக் கூடைகள் வழங்குதல், குறைந்த செலவிலான வெங்காய சேமிப்புக் கிடங்குகள் அமைத்தல், காளான் வளர்ப்புக் கூடம் அமைத்தல், அரசு கல்வி

நிலையங்கள், ஆதரவற்றோர் காப்பகங்களில் தோட்டம் அமைத்தல், கறிவேப்பிலைத் தொகுப்பு, மல்லிகைத் தொகுப்பு, மிளகாய் மண்டலம், முருங்கை தொகுப்பு ஊக்குவிப்பு போன்ற திட்டக்கூறுகளுடன் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டம் 2024–25–ஆம் ஆண்டில் ரூ.24.05 கோடி நிதியில் பல்வேறு இனங்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.3.2 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (KAVIADP)

தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் பல்வேறு துறை சார்ந்த திட்டங்களை ஒருங்கிணைத்து, தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வந்து, ஒட்டுமொத்த வளர்ச்சி, விவசாயத்தில் தன்னிறைவு பெற்ற கிராமங்களாக மாற்றும் பொருட்டு, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2021–22ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் தோட்டக்கலை சார்ந்த இனங்கள் 2021–22–ஆம் ஆண்டில், 1,997

கிராமங்களில் ரூ.25.88 கோடி நிதியிலும், 2022–23–ஆம் ஆண்டில், 3,204 கிராமங்களில் ரூ.28.81 கோடி நிதியிலும், 2023–24–ஆம் ஆண்டில், 2,504 கிராமங்களில் ரூ.17.20 கோடி நிதியிலும் செயல்படுத்தப்பட்டன. சந்தைகளில் காய்கறிகள் வரத்தினை அதிகரிக்க காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல், பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், ஊட்டச்சத்து தன்னிறைவை மேம்படுத்த பழச்செடித் தொகுப்புகள் வழங்குதல் போன்ற திட்டக்கூறுகள் இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்டன.

மேலும், இத்துறை மூலம் செயல்படுத்தப்படும் நுண்ணீர்ப்பாசனத் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், மானாவாரிப்பகுதி மேம்பாடு, மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் போன்ற திட்டங்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டன.

2024–25–ஆம் ஆண்டில் 2,482 கிராமங்களில் ரூ.15.20 கோடி நிதியில் தோட்டக்கலை சார்ந்த இனங்கள் இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.3.3. பனை மேம்பாட்டு இயக்கம் (PDM)

2023–24–ஆம் நிதியாண்டில் பனை மேம்பாட்டு இயக்கம் ரூ.2.63 கோடி நிதியில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் பனை விதைகள், பனங்கன்றுகள் விநியோகம், பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல், பனை ஏறும் விவசாயிகளுக்குக் கருவிகள் வழங்குதல் போன்ற திட்டக்கூறுகள் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டன.

மேலும், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க பயிற்சியும், உபகரணங்களும் வழங்குதல், பெண்களுக்கு பனை ஓலையில் இருந்து பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும், கருவிகளும் வழங்குதல் போன்ற திட்டக்கூறுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2024–25–ஆம் ஆண்டில் ரூ.1.21 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 3.4. உலகவங்கித் திட்டம்: தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் உலக வங்கி நிதியில், தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்படும் ஒரு பல்நோக்குத் திட்டமாகும். தேர்வு செய்யப்பட்ட உபவடி நிலப்பகுதிகளில் அதிக நீர் தேவைப்படும் பயிர்களில் இருந்து குறைந்த நீர் தேவைப்படும் அதிக வருவாய் தரக்கூடிய தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியை உயர் தொழில்நுட்பங்கள், நீர் மேலாண்மைத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதிகப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2018–19 முதல் 2024–25–ஆம் ஆண்டு வரை 45,025 எக்டர் பரப்பளவில் பழங்கள், வீரிய ஒட்டு இரகக் காய்கறிகள், நறுமணப்பயிர்கள், பூக்கள், தோட்டப்பயிர்கள், நிழல்வலைக்குடில், நிலப்போர்வை, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, கண்டுணர் சுற்றுலா, விளம்பரம் ஆகிய இனங்களும், ரூ.110 கோடி நிதியில் நுண்ணீர்ப் பாசனமும் மொத்தம் ரூ.217 கோடி நிதியில் 7 ஆண்டுகளில் 34 மாவட்டங்களை உள்ளடக்கிய 47 உபவடி நிலப்பகுதிகளில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது.

இத்திட்டம் 2023–24–ஆம் ஆண்டில் ரூ.12.54 கோடி நிதியில் 38 உபவடி நிலப்பகுதிகளில் 34 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 5,540 எக்டரில் பயிர் செயல்விளக்கங்கள், 1,000 எக்டரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, 8,500 ச.மீட்டர் பரப்பில் நிழல்வலைக்குடில், 100 எக்டரில் நிலப்போர்வை, 209 கண்டுணர் சுற்றுலாக்கள், மாதிரி கிராமங்கள் உருவாக்குதல் ஆகிய இனங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

2024–25–ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.25.29 கோடி நிதியில் 38 உபவடி நிலப்பகுதிகளில் 34 மாவட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 7,867 எக்டரில் பயிர் செயல்விளக்கங்கள், 960 எக்டரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, 7,500 ச.மீட்டர் பரப்பில் நிழல்வலைக்குடில், 100 எக்டரில் நிலப்போர்வை, மாதிரி கிராமங்கள் உருவாக்குதல் ஆகிய இனங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.5. தோட்டக்கலைத் துறையின் கட்டமைப்பு வசதிகள்

### 3.5.1 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

தமிழ்நாட்டில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் 37 மாவட்டங்களில், 73 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

**அட்டவணை 3.8: அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்**

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலைப் பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட ஆண்டு | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | கீழப்பழுவூர் | 2018 | 7.580 |
| 2 | சென்னை | மாதவரம் | 1980 | 2.000 |
| 3 | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 1986 | 12.000 |
| 4 | கோயம்புத்தூர் | கண்ணம்பாளையம் | 2001 | 11.200 |
| 5 | கடலூர் | விருதாச்சலம் | 1975 | 10.430 |
| 6 | கடலூர் | நெய்வேலி | 1985 | 39.525 |
| 7 | தருமபுரி | போலயம்பள்ளி | 2013 | 2.730 |
| 8 | தருமபுரி | வட்டார நாற்றங்கால் மையம், தருமபுரி | 2020 | 0.250 |
| 9 | திண்டுக்கல் | சந்தையூர் | 2018 | 15.190 |
| 10 | திண்டுக்கல் | சிறுமலை | 1980 | 56.400 |
| 11 | ஈரோடு | பகுத்தம்பாளையம் | 2018 | 10.000 |
| 12 | செங்கல்பட்டு | ஆத்தூர் | 1961 | 12.240 |
| 13 | கள்ளக்குறிச்சி | அ. சாத்தனூர் | 2018 | 10.000 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலைப் பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட ஆண்டு | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 14 | காஞ்சிபுரம் | விச்சந்தாங்கல் | 1982 | 23.250 |
| 15 | காஞ்சிபுரம் | மேல்கதிர்பூர் | 1982 | 42.630 |
| 16 | காஞ்சிபுரம் | மேலொட்டிவாக்கம் | 1982 | 20.600 |
| 17 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் | 1982 | 34.000 |
| 18 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 1922 | 6.570 |
| 19 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை | 1967 | 6.000 |
| 20 | கரூர் | முதலைப்பட்டி | 1978 | 24.250 |
| 21 | கிருஷ்ணகிரி | திம்மாபுரம் | 1952 | 9.620 |
| 22 | கிருஷ்ணகிரி | ஜீனூர் | 1980 | 123.445 |
| 23 | மதுரை | பூஞ்சுத்தி | 2012 | 5.765 |
| 24 | நாகப்பட்டினம் | வண்டுவாஞ்சேரி | 2018 | 6.540 |
| 25 | நாகப்பட்டினம் | புஷ்பவனம் | 2021 | 9.920 |
| 26 | நாமக்கல் | செம்மேடு | 1974 | 11.100 |
| 27 | நாமக்கல் | படசோலை | 1989 | 22.670 |
| 28 | பெரம்பலூர் | வெங்கலம் | 2018 | 4.720 |
| 29 | புதுக்கோட்டை | குடுமியான்மலை | 1974 | 118.680 |
| 30 | புதுக்கோட்டை | வல்லத்திராக்கோட்டை | 1977 | 521.200 |
| 31 | புதுக்கோட்டை | நாட்டுமங்கலம் | 1985 | 53.020 |
| 32 | இராமநாதபுரம் | ஓரியூர் | 2013 | 14.770 |
| 33 | இராணிப்பேட்டை | நவ்லாக் | 1981 | 85.400 |
| 34 | சேலம் | மாபெரும் பழப்பண்ணை, கருமந்துறை | 1981 | 419.770 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலைப் பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட ஆண்டு | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 35 | சேலம் | மணியார்குன்றம் | 1982 | 100.000 |
| 36 | சேலம் | அ.தோ.ப. கருமந்துறை | 1981 | 39.350 |
| 37 | சேலம் | முள்ளுவாடி | 1985 | 48.400 |
| 38 | சேலம் | சிறுமலை | 1987 | 8.000 |
| 39 | சேலம் | ஏற்காடு | 1975 | 4.052 |
| 40 | சிவகங்கை | தேவக்கோட்டை | 1985 | 81.190 |
| 41 | சிவகங்கை | நேமம் | 1979 | 38.770 |
| 42 | சிவகங்கை | கிளாதரி | 2019 | 12.810 |
| 43 | தஞ்சாவூர் | ஆடுதுறை | 1988 | 8.800 |
| 44 | தஞ்சாவூர் | மருங்குளம் | 1966 | 10.770 |
| 45 | தேனி | பெரியகுளம் | 1950 | 9.310 |
| 46 | தூத்துக்குடி | கீழவல்லநாடு | 2019 | 2.668 |
| 47 | திருநெல்வேலி | வன்னிக்கோனேந்தல் | 2018 | 9.850 |
| 48 | திருப்பூர் | சங்கராமநல்லூர் | 2018 | 10.120 |
| 49 | திருவாரூர் | மூவாநல்லூர் | 2018 | 5.825 |
| 50 | திருவள்ளூர் | ஈக்காடு கண்டிகை | 2020 | 3.620 |
| 51 | திருவண்ணாமலை | புதூர்செக்கடி | 2018 | 12.760 |
| 52 | திருவண்ணாமலை | வட்டார நாற்றங்கால் பண்ணை, ஜமுனாமரத்தூர் | 2019 | 0.680 |
| 53 | திருவண்ணாமலை | வட்டார நாற்றங்கால் பண்ணை, போளூர் | 2020 | 1.520 |
| 54 | திருப்பத்தூர் | கூடப்பட்டு | 1961 | 10.080 |
| 55 | திருப்பத்தூர் | தகரக்குப்பம் | 1985 | 34.400 |

| வ. எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலைப் பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட ஆண்டு | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 56 | திருச்சிராப்பள்ளி | தொரக்குடி | 2013 | 12.340 |
| 57 | வேலூர் | அகரம்சேரி | 2020 | 34.530 |
| 58 | விருதுநகர் | பூவானி | 1967 | 9.460 |
| 59 | விருதுநகர் | ஸ்ரீவில்லிப்புத்தூர் | 1982 | 46.270 |
| 60 | விருதுநகர் | ஆதித்தநேந்தல் | 2020 | 0.810 |
| 61 | விழுப்புரம் | எலவளப்பாக்கம் | 2021 | 7.000 |
| 62 | கொடைக்கானல் | தாண்டிக்குடி | 1985 | 5.450 |
| 63 | கொடைக்கானல் | அ.தோ.ப. கொடைக்கானல் | 1961 | 1.650 |
| 64 | நீலகிரி | கல்லார் | 1900 | 8.920 |
| 65 | நீலகிரி | பர்லியார் | 1871 | 6.250 |
| 66 | நீலகிரி | தேவாலா | 1978 | 80.000 |
| 67 | நீலகிரி | பழவியல் நிலையம், குன்னூர் | 1948 | 10.460 |
| 68 | நீலகிரி | தும்மனட்டி | 1956 | 9.800 |
| 69 | நீலகிரி | நஞ்சநாடு | 1917 | 64.000 |
| 70 | நீலகிரி | கோல்கிரைன் | 1989 | 20.400 |
| 71 | நீலகிரி | பழம் பதனிடும் நிலையம், குன்னூர் | 1965 | 0.100 |
| 72 | நீலகிரி | காட்டேரி | 1974 | 16.956 |
| 73 | நீலகிரி | தொட்டபெட்டா | 1969 | 2.520 |
| | | **மொத்தம்** | | **2543.356** |

**தோட்டக்கலைப் பயிர்களின் இனத் தூய்மையான, தரமான நடவுச்செடிகளை உரிய நேரத்தில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்வதே அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் முக்கிய**

நோக்கமாகும். இப்பண்ணைகள், விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை விளக்கும் மாதிரி செயல்விளக்கப் பயிற்சிப் பண்ணைகளாகவும் திகழ்வதுடன், நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்தும் வருகின்றன.

2023–24–ஆம் ஆண்டில், 18.78 கோடி நடவுச்செடிகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இதில் 16.18 கோடி குழித்தட்டு காய்கறி நாற்றுகளும், மலர் நாற்றுகளும் அடங்கும். நடவுச்செடிகள் உற்பத்தி தவிர, 241.92 மெட்ரிக் டன் உண்மை நிலை (Truthfuly labelled) விதைகள், ஆதாரநிலை (F1) விதைகள், பாரம்பரிய (Traditional) விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விதைகளாகவும், விதைத் தளைகளாகவும் விநியோகம் செய்யப்படுகின்றன. 829 மெ.டன் மண்புழு உரம், 73.99 மெ.டன் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், உயிர் உரங்கள் ஆகியவையும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டு அப்பண்ணைகளிலே பயன்படுத்தப்படுகின்றன, மேலும், விவசாயிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

2024–25–ஆம் ஆண்டில் 19.55 கோடி நடவுச்செடிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 17.27 கோடி குழித்தட்டு காய்கறி நாற்றுகளும், மலர் நாற்றுகளும் அடங்கும். மேலும், 11.81 மெட்ரிக் டன் உண்மை நிலை (Truthfuly labelled) விதைகள், ஆதாரநிலை (F1) விதைகள், பாரம்பரிய (Traditional) விதைகள், 1,112 மெ.டன் மண்புழு உரம், 125.67 மெ.டன் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், உயிர் உரங்கள் ஆகியவற்றையும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், பூங்காக்களில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.5.2. பூங்காக்கள், தோட்டங்கள்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, எட்டு மாவட்டங்களில் 23 பூங்காக்களைப் பராமரித்து வருகிறது. இவை பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு மையங்களாகத் திகழ்வதுடன், தாவரவியல் மாணவர்களுக்கு பயிலும் களமாகவும் விளங்குகின்றன

## அட்டவணை 3.9: அரசு தோட்டக்கலைப் பூங்காக்கள்

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | தோட்டக்கலைப் பூங்கா, மாதவரம் | 2018 | 8.700 |
| 2 | சென்னை | செம்மொழிப் பூங்கா, சென்னை | 2010 | 3.640 |
| 3 | சென்னை | பாரம்பரியப் பூங்கா, வண்ணாரப்பேட்டை | 2021 | 1.560 |
| 4 | சென்னை | செங்காந்தள் பூங்கா | 2021 | 2.750 |
| 5 | கன்னியாகுமரி | சுற்றுச்சூழல் பூங்கா, கன்னியாகுமரி | 2018 | 6.070 |
| 6 | இராமநாதபுரம் | பாலை மரபணுப் பூங்கா, அச்சடிபிரம்பு | 2015 | 10.000 |
| 7 | சேலம் | ரோஜா தோட்டம், ஏற்காடு | 2005 | 2.000 |
| 8 | சேலம் | குறிஞ்சி மரபியல் பூங்கா, ஏற்காடு | 2012 | 9.608 |
| 9 | சேலம் | அண்ணா பூங்கா, ஏற்காடு | 1999 | 1.844 |
| 10 | சேலம் | ஏரி பூங்கா, ஏற்காடு | 2018 | 1.252 |
| 11 | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா – 1. ஏற்காடு | 2012 | 8.520 |
| 12 | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா – 2, ஏற்காடு | 2012 | 7.600 |
| 13 | தென்காசி | சுற்றுச்சூழல் பூங்கா, குற்றாலம் | 1986 | 14.890 |
| 14 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை பூங்கா | 2021 | 3.640 |
| 15 | திண்டுக்கல் | ரோஜா பூங்கா மற்றும் கொய்மலர் செயல் விளக்க மையம், | 2012 | 4.080 |

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| | | கொடைக்கானல் | | |
| 16 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா மற்றும் அண்ணா பூங்கா, கொடைக்கானல் | 1900 | 8.200 |
| 17 | திண்டுக்கல் | செட்டியார் பூங்கா, கொடைக்கானல் | 1980 | 2.020 |
| 18 | நீலகிரி | காட்டேரி பூங்கா | 2012 | 2.000 |
| 19 | நீலகிரி | தேயிலை பூங்கா தொட்டபெட்டா | 2015 | 1.600 |
| 20 | நீலகிரி | சிம்ஸ் பூங்கா, குன்னூர் | 1874 | 11.340 |
| 21 | நீலகிரி | அரசு ரோஜா பூங்கா, ஊட்டி | 1995 | 14.400 |
| 22 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா, ஊட்டி | 1848 | 22.000 |
| 23 | நீலகிரி | மரவியல் பூங்கா, உதகை | 2008 | 1.520 |
| | | மொத்தம் | | 149.234 |

சென்னையில் டாக்டர். இராதாகிருஷ்ணன் சாலையில் ரூ.25 கோடியில் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா, நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் இரண்டு கோடி ரூபாய் நிதியில் நெய்தல் பூங்கா, கடலூர் மாவட்டம் வடலூரில் ஒரு கோடி ரூபாய் நிதியில் தோட்டக்கலைப் பூங்கா ஆகியவை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024-25-ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம் திருமலைச் சமுத்திரத்தில் மருதம் பூங்கா, கன்னியாகுமரியில் சூரியத்தோட்டம், கன்னியாகுமரி மாவட்டம் வேளிமலையில் முல்லைப்பூங்கா, செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில் செம்பருத்தி நடவுச்செடிகள் உற்பத்தி மையம் ஆகியவை அமைக்கப்பட உள்ளன.

### 3.5.3. நில எழிலூட்டல் பிரிவு (Landscaping Wing)

மாநகரங்களில் வசிக்கும் மக்களின் நிலஎழிலூட்டுதல் தேவைகளைப்பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, திட்ட வடிவமைப்பு, செயலாக்கத்திற்கு தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்டு நில எழிலூட்டும் பிரிவை உருவாக்கியுள்ளது. பொதுமக்கள், அரசுத்துறை அலுவலகங்கள், தனியார் நிறுவனங்களில் புதிய நிலஎழில் வடிவமைப்பை உருவாக்குவதிலும், ஏற்கனவே உள்ள எழில் வடிவமைப்பை மேலும் அழகுபடுத்துவதிலும், மாடித் தோட்டம் போன்ற அமைப்புக்களைத் தேவைக்கேற்ப அமைத்துக் கொடுப்பதிலும் இப்பிரிவு ஈடுபட்டு வருகிறது.

நில எழிலூட்டல் பிரிவின் மூலம், 2023-24ஆம் ஆண்டில், தஞ்சாவூர்

விமானப்படைத்தளத்தில் நில எழிலூட்டல் பணிகள் ரூ.1.74 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.5.4. மகத்துவ மையங்கள்

விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் அளிக்கவும், உயர் தொழில் நுட்பங்களுடன் கூடிய செயல் விளக்கத்திடல்கள் அமைக்கவும் பயிர்களுக்கு ஏற்ப மகத்துவ மையங்கள் ஐந்து இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஐந்து இடங்களில் மகத்துவ மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**அட்டவணை 3.10: மகத்துவ மையங்கள் விவரம்**

| வ. எண் | மகத்துவ மையம் | இடம் |
|---|---|---|
| **செயல்பாட்டில் உள்ள மகத்துவ மையங்கள்** | | |
| 1. | கொய் மலர்கள் | தளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 2. | காய்கறிகள் | ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் மாவட்டம். |
| 3. | மலை காய்கறிப் பயிர்கள் | நஞ்சநாடு, நீலகிரி மாவட்டம். |
| 4. | வெப்ப மண்டலப் பழப்பயிர்கள் | கஞ்சநாயக்கன்பட்டி, திருச்சி மாவட்டம் |
| 5 | பாரம்பரிய மலர்கள் | திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம். |

| வ. எண் | மகத்துவ மையம் | இடம் |
|---|---|---|
| பணிகள் நடைபெற்று வரும் மகத்துவ மையங்கள் | | |
| 6. | தேனீ வளர்ப்பு | பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம். |
| 7. | மா | வெதரம்பட்டி, தருமபுரி மாவட்டம். |
| 8. | நெல்லி | களக்காடு, திருநெல்வேலி மாவட்டம். |
| 9. | மித வெப்பமண்டல தோட்டக்கலைப்பயிர்கள் | கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம் |
| 10. | மலர்களுக்கான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் | தளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |

## 3.6. தென்னை நாற்றுப் பண்ணைகள்

### 3.6.1. தென்னங்கன்றுகள் விநியோகம்

2023–24–ஆம் ஆண்டில் 20.04 இலட்சம் தென்னங்கன்றுகள் 23 மாநில தென்னை நாற்றுப்பண்ணைகள், 16 தென்னை ஒட்டு மையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2024–25–ஆம் ஆண்டில் 10 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.6.2. தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்கள்

தருமபுரி, ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் செயல்படும்

தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்கள் மூலம் தென்னை கருந்தலைப்புழுவை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த பிராக்கானிட் ஒட்டுண்ணிகள் 3,184 எக்டருக்கு வழங்கப்பட்டது. இத்திட்டம் 2024-25ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3. 7.1. தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையில் தமிழ் நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம், மாதவரம்-சென்னை, தோட்டக்கலை பயிற்சி நிலையம், குடுமியான்மலை-புதுக்கோட்டை, உழவர் பயிற்சி நிலையம், உதகமண்டலம்-நீலகிரி, தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், தளி-கிருஷ்ணகிரி ஆகிய நான்கு பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், திண்டுக்கல்-ரெட்டியார்சத்திரத்தில் காய்கறி மகத்துவ மையம், மதுரை- திருப்பரங்குன்றத்தில் பாரம்பரிய மலர்ப் பயிர்களுக்கான மகத்துவ மையம், திருச்சி-கஞ்சநாயக்கன்பட்டியில் வெப்ப மண்டலப் பழப்பயிர்களுக்கான மகத்துவ மையம் ஆகியவனவும் இயங்கி வருகின்றன.

விவசாயிகளுக்கு தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி வழங்குவதே மேற்கூறிய பயிற்சி நிலையங்கள் மற்றும் மகத்துவ மையங்களின் நோக்கமாகும்.

### 3.7.2 தோட்டக்கலைப் பட்டயப் படிப்பு

தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம், மாதவரம்–சென்னை, தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், தளி–கிருஷ்ணகிரி, காய்கறி மகத்துவ மையம் ரெட்டியார்சத்திரம்– திண்டுக்கல் ஆகிய நிலையங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்து அங்கீகாரம் பெற்று, ஆண்டு தோறும் தலா 50 மாணவர்களுக்கு ஈராண்டு தோட்டக்கலைப் பட்டயப்படிப்பு பயிற்றுவிக்கின்றன.

### 3.8 பணியாளர்கள் விவரம்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையில் வட்டார, மாவட்ட, மாநில அளவில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## அட்டவணை 3.11 : அலுவலர்கள், பணியாளர்கள்

| வ.எண் | பணியிட விபரம் | மொத்த பணியிடம் |
|---|---|---|
| **அ.** | **தொழில்நுட்ப அலுவலர்கள்** | |
| 1. | தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் | 2 |
| 2. | தோட்டக்கலை இணை இயக்குநர் | 6 |
| 3. | தோட்டக்கலை துணை இயக்குநர் | 43 |
| 4. | தோட்டக்கலை உதவி இயக்குநர் | 398 |
| 5. | தோட்டக்கலை அலுவலர் | 443 |
| 6. | துணை தோட்டக்கலை அலுவலர் | 123 |
| 7. | உதவி தோட்டக்கலை அலுவலர் | 1,674 |
| 8. | உதவி விதை அலுவலர் | 5 |
| | **மொத்தம்** | **2,694** |
| **ஆ.** | **அமைச்சுப் பணியாளர்கள்** | |
| 9. | இதர அலுவலர் பணியிடங்கள் விவரம் (துணை இயக்குநர் (நிர்வாகம்), முதன்மை கணக்கு அலுவலர், ஆட்சி அலுவலர், கணக்கு அலுவலர், உதவிக் கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர பணியிடங்கள் | 1,345 |
| | **மொத்தம்** | **4,039** |

## 4. வேளாண்மைப் பொறியியல் துறை

வேளாண்மையில் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு பல்வேறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தீர்வு காணும் வகையில் வேளாண் இயந்திரமயமாக்கல், வேளாண்மையில் சூரியசக்தி, மண், நீர்வளப் பாதுகாப்பு, நீர் மேலாண்மை, வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் பரவலாக்கம், கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் போன்ற இனங்களில் திட்டங்களைச் செயல்படுத்தி விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேளாண்மைப் பொறியியல் துறை செயல்பட்டு வருகிறது.

### 4.1. வேளாண் இயந்திரமயமாக்கல்

வேளாண் பணியாளர்களின் பற்றாக்குறையால் விவசாயத்தை நலிவுறாமல் சிறப்பாக மேற்கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு, நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட வேளாண் இயந்திரங்கள், கருவிகளின் தேவை இன்றியமையாததாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தில் கீழ்க்காணும் இனங்கள் 60 சதவீதம் ஒன்றிய அரசின் பங்களிப்புடனும், 40

சதவீதம் மாநில அரசின் பங்களிப்புடனும் செயல்படுத்தப்படுகின்றன.

## 4.1.1. வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானியத்தில் வழங்குதல்

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் விளையும் பல்வேறு பயிர்களுக்கு ஏற்ற உழவு, நடவு, களையெடுத்தல், பயிர் மேலாண்மை, அறுவடை, பயிர்க்கழிவு மேலாண்மை போன்ற பணிகளை மேற்கொள்ள டிராக்டர், பவர்டில்லர், நெல் அறுவடை இயந்திரம், ட்ரோன், நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், புதர் அகற்றும் கருவி, தட்டை வெட்டும் கருவி, விசைக் களையெடுப்பான், மின்களையெடுக்கும் கருவி, ரோட்டவேட்டர், டிராக்டர் டிரெய்லர், வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி, உளிக்கலப்பை, கொத்துக்கலப்பை, ரோட்டோ படுலர், விசை பலுகு, லேசரால் இயங்கும் நிலம் சமன் செய்யும் கருவி, நிலப்போர்வை அமைக்கும் கருவி, திருப்பும் வசதி கொண்ட வார்ப்பு இறகுக் கலப்பை, உயர் மட்டப்பாத்தி அமைத்து விதை விதைக்கும் கருவி, காற்று அழுத்தத்தால் இயங்கும் விதை விதைக்கும் கருவி, விதையுடன் உரமிடும் கருவி, ரோட்டரி மல்ச்சர், நிலக்கடலை தோண்டும் இயந்திரம், கரும்புசோகை உரிக்கும் இயந்திரம், தென்னை

ஓலை துகளாக்கும் இயந்திரம், வைக்கோல் கூட்டும் கருவி, வைக்கோல் கட்டுகட்டும் இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், கரும்பு கரணை வெட்டும் கருவி, மனித ஆற்றலில் இயங்கும் விதை மற்றும் உரமிடும் கருவி, நேரடிநெல் விதைக்கும் கருவி, மனித ஆற்றலில் இயங்கும் பருத்தி பறிக்கும் கருவி, கைத்தெளிப்பான்கள், விசைத் தெளிப்பான்கள், டிராக்டரால் இயங்கக்கூடிய தெளிப்பான், சூரியசக்தி, மின்சக்தியால் இயங்கும் விலங்கு விரட்டும் கருவி, சூரியசக்தியால் இயங்கும் விளக்குப் பொறி, தொலைவில் இருந்து மின்சார மோட்டார் இயக்கும் கருவி, தேயிலை பறிக்கும் கருவி, நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் போன்ற வேளாண் இயந்திரங்கள், கருவிகள், விளைபொருட்களை உலரவைத்து மதிப்புக் கூட்டிட, சூரிய கூடார உலர்த்திகள் ஆகியவை விவசாயிகள் பயனடையும் வகையில் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தில் சிறு, குறு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் விலையில் 50 சதவீதம், இதர பயனாளிகளுக்கு 40 சதவீதம் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட

அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2023-24ஆம் ஆண்டில், தனிப்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், 23,510 வேளாண் இயந்திரங்கள், கருவிகள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள், சூரிய கூடார உலர்த்திகள் ஆகியவை ரூ.213.27 கோடி மானியத்தில் வழங்கப்பட்டு, இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பு 2024-25-ஆம் ஆண்டில், சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் 4,000 பவர்டில்லர்கள், 4,000 பவர்வீடர்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன. மேலும், மின்சார இணைப்பு பம்புசெட்டுகளை எங்கிருந்தாலும் எளிமையாக இயக்கவும், அவற்றின் இயக்கத்தினைக் கண்காணிக்கவும், 10,000 விவசாயிகளுக்கு கைபேசியால் இயங்கும் தானியங்கி பம்புசெட்டு கட்டுப்படுத்தும் கருவிகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படவுள்ளன.

2024-25-ஆம் ஆண்டில், மொத்தம் 26,179 விவசாயிகள் வேளாண் இயந்திரங்கள், கருவிகள்,

சூரியக் கூடார உலர்த்திகள் ஆகியவை வாங்கி பயன்பெறும் வகையில் மானியம் வழங்கிட ரூ.170 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.1.1.1. நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் மானியத்தில் வழங்குதல்

அறுவடை செய்யப்பட்ட நெல்லில், அதிக ஈரப்பதம், எதிர்பாராத மழையின் பொழுது முளைவிட்டு விற்பனை செய்ய இயலாமல் விவசாயிகள் சிரமப்படுவதைத் தவிர்க்கும் வகையில், டிராக்டரால் இயங்கும் 10 நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள், ரூ.90 இலட்சம் மானியத்தில் தனிப்பட்ட விவசாயிகள், விவசாய சுயஉதவிக் குழுக்கள், விவசாய கூட்டுறவுச் சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில்முனைவோர்கள் ஆகியோருக்கு நடப்பாண்டில் வழங்கப்பட உள்ளன.

### 4.1.1.2. சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் வாங்கிடக் கூடுதல் மானியம்

சிறு, குறு விவசாயிகள் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்கு உதவிடும் வகையில் நடைமுறையில் வழங்கப்படும் 50 சதவீத

மானியத்துடன், கூடுதலாக மாநில நிதியில் இருந்து 10 சதவீத மானியம் சேர்த்து 60 சதவீத மானியம் நடப்பாண்டில் வழங்கப்பட உள்ளது. இம்மானியம் ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லாத இதர பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்குத் தேவையான நெல் நாற்று நடவு செய்யும் கருவி, விசைக்களையெடுக்கும் கருவிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

மேலும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நடைமுறையில் வழங்கப்படும் 50 சதவீத மானியத்துடன் கூடுதலாக 20 சதவீத மானியமும் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வாங்கிட மாநில நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

### 4.1.2. எளியோர்க்கென வேளாண் இயந்திர வாடகை மையங்கள்

சிறு, குறு விவசாயிகள் வேளாண் இயந்திரங்களை வாடகைக்குப் பெற்று பயன்பெறும் வகையிலும், உயர் மதிப்பு வேளாண் இயந்திரங்கள் பயன்பாட்டினை ஊக்குவிக்க, ஊரகத் தொழில்முனைவோர்கள், பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், விவசாய கூட்டுறவு

சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு வட்டார, கிராம அளவிலான, வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்கவும், கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்கவும் மானியம் வழங்கப்படுகிறது.

கடந்த 2023-24-ஆம் ஆண்டில், 216 கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள், 53 வட்டார வேளாண் இயந்திர வாடகை மையங்கள், 47 கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் என மொத்தம் 316 வாடகை மையங்கள் ரூ.43.41 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 2024-25-ஆம் ஆண்டில், 140 கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள், 37 வட்டார வேளாண் இயந்திர வாடகை மையங்கள், 30 கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் என மொத்தம் 207 வாடகை மையங்கள் ரூ.32.90 கோடி மானியத்தில் அமைக்கப்பட உள்ளன.

## 4.2. இ-வாடகை கைபேசி செயலியின் மூலம் வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் திட்டம்

விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்கள், கருவிகளை தாங்கள் இருக்குமிடத்திலிருந்தே முன்பதிவு செய்யவும், வாடகைத் தொகையை செலுத்தவும், இ-வாடகை கைபேசி செயலி பயன்படுகிறது. இச்செயலியின் மூலம் தோராயமாக 30,000 விவசாயிகள் 2024-25-ஆம் ஆண்டில் பயனடைவர் என்றும், இதனால் அரசிற்கு வாடகை வருவாயாக ரூ.50 கோடி கிடைக்கப் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற வேளாண் இயந்திரங்கள், அவற்றின் வாடகை விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை.4.1. வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்கள் மற்றும் வாடகை விவரம்

| வ. எண். | இயந்திரத்தின் விவரம் | எண்ணிக் கை | வாடகை விவரம் |
|---|---|---|---|
| **நில மேம்பாட்டுத் திட்ட இயந்திரங்கள்** | | | |
| 1 | புல்டோசர் (Bull Dozer) | 85 | ரூ.1,230/- ஒரு மணிக்கு |
| 2 | டிராக்டர் (Tractor) | 513 | ரூ.500/- ஒரு மணிக்கு |
| 3 | டிராக்டர்களுக்கான இணைப்பு கருவிகள் (Tractor operated implements) | 2,161 | ரூ.500/- ஒரு மணிக்கு டிராக்டருடன் |
| 4 | சக்கர வகை நெல் அறுவடை இயந்திரம் ( Paddy Combine Harvester – Wheel Type) | 27 | ரூ. 1,160/- ஒரு மணிக்கு |
| 5 | டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் ( Paddy Combine Harvester – Track Type) | 36 | ரூ. 1,880/- ஒரு மணிக்கு |
| 6 | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் nd Backhoe with Front e) (loader | 80 | ரூ. 890/- ஒரு மணிக்கு |
| 7 | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் (Crawler Excavator) | 10 | ரூ. 1,910/- ஒரு மணிக்கு |
| 8 | சிறு டிராக்டர் (Mini Tractor) | 6 | ரூ. 460/- ஒரு மணிக்கு |
| 9 | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் இன்ஃபீல்டர்கள் (Sugarcane Harvester with infielders) | 6 | ரூ. 5,120/- ஒரு மணிக்கு |
| 10 | வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் (Truck Operated Coconut Hoist) | 20 | ரூ.450/- ஒரு மணிக்கு |

| வ. எண். | இயந்திரத்தின் விவரம் | எண்ணிக்கை | வாடகை விவரம் |
|---|---|---|---|
| 11 | கனரக மரம் அறுக்கும் கருவிகள் (Heavy Duty Chain Saws) | 805 | ரூ.85/– ஒரு மணிக்கு |
| 12 | டிராக்டரால் இயங்கக்கூடிய நீர் இறைக்கும் பம்புகள் (Tractor Operated Pumpsets) | 21 | ரூ.500/– ஒரு மணிக்கு டிராக்டருடன் |
| **சிறுபாசனத் திட்ட இயந்திரங்கள்** | | | |
| 13 | சுழல் விசைத்துளைக் கருவிகள் (Rotary Drills) | 24 | ரூ.130/– ஒரு மீட்டருக்கு |
| 14 | பெர்குஷன் துளைக் கருவிகள் (ussion DrillsPerc) | 2 | ரூ.300/– நாள் ஒன்றிற்கு |
| 15 | சிறு விசைத்துளைக் கருவிகள் (Mini Drills) | 18 | ரூ.70/– ஒரு மீட்டருக்கு |
| 16 | கைத்துளைக் கருவிகள் (Hand Boring Sets) | 13 | ரூ.30/– ஒரு மீட்டருக்கு |
| 17 | பாறை வெடிக் கருவிகள் (Rock Blasting Units) | 3 | ரூ.250/– ஒரு வெடிப்புக்கு |
| 18 | நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள் (Resistivity Meters) | 21 | ரூ.500/– ஒரு ஆய்விற்கு |
| 19 | மின்னியல் ஆய்வுக் கருவிகள் (Electrical Loggers) | 2 | ரூ.1000/– ஒரு குழாய் கிணறுக்கு |

- **வரிசை எண். 13 முதல் 19 வரையிலான இயந்திரங்களுக்கு தேவையான எரிபொருள் (டீசல்), வேலையாட்கள், குழாய்கள், கூழாங்கற்கள் மற்றும் பொருட்களை எடுத்துச்செல்வதற்கான வாகனச் செலவு ஆகியவை சம்பந்தப்பட்ட விவசாயிகளைச் சார்ந்தவை.**

### 4.2.1. பேரிடர் மேலாண்மை இயந்திரங்கள்

இயற்கைச் சீற்றம், கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கின்போது நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு டிராக்டரால் இயங்கக்கூடிய 21 நீர் இறைக்கும் பம்புகளும், 805 கனரக மரம் அறுக்கும் கருவிகளும் வேளாண்மைப் பொறியியல் துறையின் பயன்பாட்டில் உள்ளன.

கடந்த 2023–ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிக்ஜாம் புயலின்போது, வேளாண்மைப் பொறியியல் துறையின் பேரிடர் மேலாண்மை இயந்திரங்கள் 10,465 மணி நேரத்திற்கும், 2023–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது, 7,490 மணி நேரத்திற்கும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன. மேலும் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் கனமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக வேளாண் நிலங்களில் படிந்துள்ள மணல் படிவங்களை அகற்றும் பணியில் இதுவரை 1,021 எக்டர் நிலப்பரப்பளவிற்கு மணல்திட்டுகள் அகற்றப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 4.2.2. வட்டார அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள் இருப்பினை வலுப்படுத்துதல்

கடந்த மூன்று ஆண்டுகளில், விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கக்கூடிய உழவுப் பணிகள், இதர பணிகளை மேற்கொள்வதற்கு 275 டிராக்டர்கள், 325 ரோட்டவேட்டர்கள், 385 கொத்துக் கலப்பைகள், 120 கேஜ்வீல்கள், 32 நெல் அறுவடை இயந்திரங்கள், அவற்றை சுமந்து செல்வதற்காக 15 கனரக வாகனங்கள், 5 கரும்பு அறுவடை செய்யும் இயந்திரங்கள், அவற்றிற்கான இன்பீல்டர்கள், 20 நிலம் சமன் செய்யும் லேசர் கருவிகள், 15 நிலநீர் ஆய்வுக்கருவி தொகுப்புகள் மற்றும் துறையில் உள்ள இயந்திரங்களையும், கருவிகளையும் பழுது பார்த்திட 3 நடமாடும் பழுது நீக்கும் வாகனங்கள் ரூ.52.25 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசு நிர்ணயித்த குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### 4.2.3. வேளாண்மைப் பொறியியல் துறையின் பணிமனைகள்

வேளாண்மைப் பொறியியல் துறையின் அனைத்து வேளாண் இயந்திரங்களின் காலமுறை பராமரிப்புப் பணிகள், திடீர் பழுதுநீக்கும் பணிகள் ஆகியவை கோயம்புத்தூர், வேலூர், திருச்சி, திருவாரூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் அமைந்துள்ள இத்துறையின் பணிமனைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிமனைகளில் கிராமப்புர இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சியும், திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்பட்டு, கிராமப்புர இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கும் தொழில் முனைவோராவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

மேலும், இப்பணிமனைகளில் டிராக்டர் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைக்கப்பட்டு, டிராக்டர் பாவனைப் பயிற்சி சாதனம் (Simulator) உதவியுடன் டிராக்டர் இயக்குவதற்கான பயிற்சி அளித்து, பயிற்சி முடிந்ததும் டிராக்டர் ஓட்டுநர் உரிமம் வழங்கிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.2.4. அரசுப் பணிமனைகளில் நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் உருவாக்குதல்

இணையதளங்களில் அறிமுகப்படுத்தப்படும் பல்வேறு நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்களை அரசுப் பணிமனைகளில் 2024–25–ஆம் ஆண்டு உருவாக்கம் செய்ய ரூ.30 இலட்சம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றினை அரசுப் பணிமனைகளில் வடிவமைத்து உருவாக்கி, விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காண்பிப்பதோடு, அரசால் நிர்ணயித்த குறைந்த வாடகையில் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 4.2.5. இ–வாடகை செயலியில் பதிவேற்றப்பட்ட தனியார் இயந்திர உரிமையாளர்கள், பழுது நீக்குபவர்கள் விவரங்கள்

விவசாயிகளுக்கு உதவிடும் பொருட்டு தனியாருக்குச் சொந்தமான நெல், மக்காச்சோளம், பயறு வகைகள், பிற தானிய வகைகள் அறுவடை செய்யும் 4,456 இயந்திரங்களின் உரிமையாளர்கள், 45,849 டிராக்டர்களின் உரிமையாளர்கள், 4,322 இயந்திர பழுது நீக்குபவர்கள் ஆகியோரின் பெயர், முகவரி, கைபேசி எண் போன்ற விவரங்கள் வட்டாரம், மாவட்ட வாரியாகத் தொகுத்து, இ–வாடகை செயலியில் வேளாண்மைப் பொறியியல்

துறையின் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம், விவசாயிகள் தனியார் இயந்திர உரிமையாளர்களையும், தனியார் இயந்திர பழுது நீக்குபவர்களையும் நேரடியாகக் கைபேசி மூலம் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

### 4.2.6. புதிய வேளாண் இயந்திரங்கள், கருவிகள் கொள்முதல் செய்தல்

விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் திட்டத்தினை நடப்பாண்டில் மேலும் வலுப்படுத்துவதற்காக, 10 டிராக் வகை நெல் அறுவடை இயந்திரங்களும், அவற்றைச் சுமந்து செல்லும் 10 வாகனங்களும் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியைக் கொண்டு ரூ.5.84 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

மேலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில், வேளாண்மைப் பொறியியல் துறையின் மண் தள்ளும் இயந்திரங்களைச் சுமந்து செல்லும் 20 வாகனங்கள் ரூ.12 கோடி மதிப்பீட்டிலும், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் டிராக்டரால் இயங்கக்கூடிய பல்வேறு கருவிகள், தேவையான

உதிரி பாகங்கள் ரூ.5 கோடி மதிப்பீட்டிலும் கொள்முதல் செய்யப்படும்.

வேளாண் இயந்திரங்களை உடனுக்குடன் சுத்தப்படுத்தி பராமரித்திட, நீரினால் இயந்திரங்களை சுத்தம் செய்யும் உபகரணம், கிரீஸ் செலுத்தும் கருவி, காற்றழுத்தக் கருவி ஆகியவை தலா 20 எண்கள் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியைக் கொண்டு 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, வேளாண்மைப் பொறியியல் துறையின் அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**4.2.7. வேளாண் இயந்திரங்கள், கருவிகளின் பராமரிப்பு குறித்த மாவட்ட அளவிலான முகாம்கள் நடத்துதல்**

தனியார் வேளாண் இயந்திரங்கள், கருவிகளின் தயாரிப்பு நிறுவனங்களை ஒருங்கிணைத்து, வேளாண் இயந்திரங்கள், கருவிகளின் இயக்கம், பராமரிப்பு முறைகளை விவசாயிகள் அறிந்து கொள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மாவட்ட அளவிலான முகாம்கள் நடத்தப்படும்.

### 4.2.8. வேளாண் இயந்திரங்கள், கருவிகளை இயக்குதல், பராமரிப்பு தொடர்பான தொழில்நுட்பக் கையேடு தயார் செய்தல்

வேளாண் இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றின் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய தொழில்நுட்பக் கையேட்டினை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் விஞ்ஞானிகள், வேளாண்மைப் பொறியியல் துறையின் தொழில்நுட்ப வல்லுநர்கள், வேளாண் இயந்திரங்கள் தயாரிப்பாளர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டு விவசாயிகள், கள அலுவலர்களுக்கு வழங்கப்படும்.

### 4.2.9. விவசாயிகள் தனியார் வேளாண் இயந்திரங்களை வாடகைக்குப் பெற்றிட கைபேசி செயலி உருவாக்குதல்

வேளாண் இயந்திரங்கள், கருவிகளைத் திறம்படப் பயன்படுத்துவதற்கும் இடைத்தரகர்களின் கட்டணத் தலையீட்டினைத் தவிர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசின் "இ–வாடகை" கைபேசி செயலி போலவே, தனியாருக்குச் சொந்தமான வேளாண்

இயந்திரங்களை விவசாயிகள் வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்திட ஒரு புதிய கைபேசி செயலி உருவாக்கப்படும் .

இச்செயலி மூலம் தனியாருக்குச் சொந்தமான வேளாண் இயந்திரங்கள் வாடகை பயன்பாடு அதிகரித்து, அதன் மூலம் அவர்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கவும், எளிய விவசாயிகளுக்கு எளிதாக வாடகை இயந்திரங்கள் கிடைத்திடவும் வாய்ப்புள்ளது.

### 4.3.வேளாண்மையில் சூரிய சக்தி

### 4.3.1. முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம்

சூரிய சக்தியினைப் பயன்படுத்தி, விவசாயிகளின் இறவைப் பாசனத்திற்கான மின்சாரத் தேவையினைப் பூர்த்தி செய்திட, **"முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தில்"** மின் கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் 2021–22–ஆம் ஆண்டு முதல் 2023–24–ஆம் ஆண்டு வரை ரூ.43.10 கோடி

மானியத்தில் 2,000 விவசாயிகளுக்கு சூரியசக்தி பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சிறு, குறு விவசாயிகள், ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு 70 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 60 சதவீத மானியத்திலும், 1,000 விவசாயிகளுக்கு 15 குதிரைத்திறன் வரையிலான சூரியசக்தி பம்புசெட்டுகள் அமைத்திட ஒன்றிய அரசின் நிதி ரூ.10.68 கோடி மற்றும் மாநில அரசின் நிதி ரூ.13.53 கோடி ஆக மொத்தம் ரூ.24.21 கோடி மானியத்தில் நடப்பாண்டில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும், ஆதிதிராவிடர் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்குக் கூடுதலாக 10 சதவீத மானியம் வழங்கப்பட உள்ளது.

### 4.3.2. சூரிய சக்தி மின்வேலிகள்

வேளாண் பயிர்களை விலங்குகளிடமிருந்து பாதுகாத்திட, சூரியசக்தி மின்வேலி அமைப்புகள் 5 வரிசை, 7 வரிசை, 10 வரிசை வேலிக்கம்பிகளைக் கொண்டதாக யானைகள் தவிர்த்த பிற விலங்குகளுக்கான வேலி அமைப்பாகவும், யானைகளை விரட்டிட கூடுதலாக தொங்கும் மின்வேலி அமைப்புகளாகவும் வகைப்படுத்தப்பட்டு,

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் தனிப்பட்ட விவசாயிகளின் நிலங்களில் 50 சதவீத மானியத்தில் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட உள்ளன.

### 4.4. மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு

தமிழ்நாட்டில் நிலையான வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals) 2030-க்கு முன் அடைந்திட மாநில அரசால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலையான வளர்ச்சி இலக்குகளில், ஆறாவது இலக்கின் ஓர் அங்கமான நீர்வள மேலாண்மையைச் செயல்படுத்தி நீர் தொடர்பான சுற்றுச்சூழல் அமைப்புகளைப் மீட்டெடுத்துப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மழைநீர் சேகரிப்புத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, வேளாண்மைப் பொறியியல் துறையால் மண், நீர்வளப் பாதுகாப்பு, நீர் மேலாண்மை ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 4.4.1. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

இத்திட்டம் 2021-22-ஆம் ஆண்டு முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்துக் கிராம அண்ணா

மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் 100 சதவீத மாநில அரசின் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த மூன்றாண்டுகளில் இத்திட்டம் தமிழ்நாடு முழுவதிலும்உள்ள 7,705 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

பாசன வசதி இல்லாத தேர்ந்தெடுக்கப்பட்ட தரிசு நிலத் தொகுப்புகளில் நீர் ஆதாரங்களை உருவாக்குதல் இனத்தில் இதுவரை 916 கிணறுகள் புதிதாக உருவாக்கப்பட்டு அவற்றிற்கான மின்/சூரியசக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தனிப்பட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவைச்சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல் இனத்தில் இதுவரை கிணறுக 1,306ள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் தங்களது நிலத்திலேயே மழை நீரினை சேமித்திட இத்திட்டத்தின் மூலம் இதுவரை 1,759 பண்ணைக்குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு பாசனக் குளங்கள், வரத்துக் கால்வாய்கள், ஊருணிகள், கால்வாய்கள், இதர நீர் சேகரிப்பு

கட்டுமானங்களில் தூர்வாரும் பணிகள் இதுவரை 5,731 இடங்களில் மேற்கொள்ளப்பட்டு திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு 1,526 பவர் டில்லர்கள் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 2024–25–ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.61.02 கோடி நிதியில், 2,482 கிராமங்களில் செயல்படுத்திட ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**4.4.2. நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்**

நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரித்து நீர் பற்றாக்குறையினைச் சமாளிக்கும் பொருட்டு, மழை நீரை சேமித்திட 2021–22–ஆம் ஆண்டு முதல் இதுவரை, ஏற்கனவே உருவாக்கப்பட்ட 2,505 மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளில் பராமரிப்புப் பணிகள், வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வாடகைக் கட்டணம் ரூ.5.49 கோடி அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு, தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில் சமுதாயக் குளங்கள் போன்ற 100 புதிய நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைக்கப்படுவதோடு, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் பல்வேறு நீர் வடிப்பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்ட 500 நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளில் தூர்வாரி, ஆழப்படுத்திப் பராமரிக்கும் பணிகளும் ரூ.2.75 கோடி செலவில், வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட உள்ளன.

### 4.4.3. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி இயற்கை வளங்களைப் பாதுகாக்க ,நிலவளம், நீர்வளப்பாதுகாப்புப் பணிகள், நில மேம்பாட்டுப் பணிகள், விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியிலும், அதன் அருகிலுள்ள வனப்பகுதி கிராமங்களிலும், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தில் 2023-24-ஆம் ஆண்டில் நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் 153 நிலவள, நீர்வளப்பாதுகாப்புப் பணிகள், 12,971

மீட்டர் நீளத்திற்கு ஓடை பராமரிப்புப் பணிகள், நிலச்சரிவு தடுப்புப் பணிகள் என மொத்தமாக ரூ.16.24 கோடி மதிப்பில் மாநில அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தில், ரூ.15.43கோடி மதிப்பில், 121 மண், நீர்வளப்பாதுகாப்புப் பணிகள், 5,328 மீட்டர் நீளத்திற்கு ஓடை பராமரிப்புப் பணிகள், நிலச்சரிவு தடுப்புப் பணிகள் தொடங்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### 4.4.4. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்குதல் திட்டம்

பாசனப் பகுதிகளில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கிடும் நோக்கத்துடன் பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்குதல் திட்டமானது, 2017–18 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பண்ணைக் குட்டைகள் அமைத்திட வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ரூ.15.53 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நான்காம் தொகுப்பிற்கான முதலாம் ஆண்டு வரை 1,397 பண்ணைக் குட்டைகள் ரூ.10.42 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த 2023-24-ஆம் ஆண்டில் தஞ்சாவூர், திருவாரூர், இராமநாதபுரம், சிவகங்கை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், திருவள்ளூர், அரியலூர், கரூர், கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 275 பண்ணைக்குட்டைகள் ரூ.3.02 கோடி செலவில் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 215 பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டு ரூ.98.35 இலட்சம் செலவிடப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### 4.4.5. குறைந்த செலவில் நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைத்தல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வடிவமைக்கப்பட்ட குறைந்த செலவிலான நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள், முன்மாதிரி அடிப்படையில் கலைஞர் திட்டத் தொகுப்புகளிலுள்ள 250 ஆழ்துளைக் கிணறுகள் / குழாய்க் கிணறுகள், திறந்தவெளிக் கிணறுகள் ஆகியவற்றில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 2024-25-ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

### 4.4.6. விவசாயிகளுக்கு மழைநீர் சேகரிப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்தும் மழைநீரைச் சேமிக்கும் வகையிலான நீர் சேகரிப்புத் தொழில்நுட்பங்களான கோடை உழவு, சம உயரவரப்பு அமைத்தல், வயல் வரப்புகள் அமைத்தல், படிமட்டங்கள், கற்சுவர்கள், பண்ணைக்குட்டைகள், அமிழ்வுநீர் குட்டைகள், ஊருணி, கிராமக் குளம், தடுப்பணை, செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள், நீர் சேகரிப்பு கட்டமைப்புகளின் பராமரிப்பு போன்ற மழை நீர் சேகரிப்பு முறைகளின் முக்கியத்துவம், தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்துடன் இணைந்து வேளாண்மைப் பொறியியல் துறையால் நடத்தப்படும்.

## 4.5. நீர் மேலாண்மை

### 4.5.1. டெல்டா மாவட்டங்களில் "சி","டி" பிரிவு வாய்க்கால்களைத் தூர்வாருதல்

பாசன வாய்க்கால்களில் கடைமடை வரை பாசனநீர் செல்வதை உறுதி செய்வதற்காக, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் ஆகிய மாவட்டங்களின் காவிரி, வெண்ணாறு

வடிநிலப்பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில், 2,38,000 ஏக்கர் பயன்பெறும் வகையில் ரூ.9.97 கோடி செலவில் 2,946 கிலோ மீட்டர் நீளத்திற்கு "சி", "டி" பிரிவு வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நடப்பு 2024-25ஆம் ஆண்டில், மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுடன் திருச்சி, அரியலூர் ஆகிய மாவட்டங்களிலும் உள்ள "சி", "டி" பிரிவு வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகள் 1,57,000 ஏக்கர் பயன்பெறும் வகையில், ரூ.10 கோடி மதிப்பீட்டில் 2,235 கிலோ மீட்டர் நீளத்திற்கு செயல்படுத்திட ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 1,594 கிலோ மீட்டர் நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 4.5.2. விவசாயிகளுக்கு மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட் வழங்குதல்

புதிய மின்மோட்டார் வாங்க வசதி இல்லாத ஏற்கனவே மின்வசதி கொண்ட ஐந்து ஏக்கர் வரை நிலம் உள்ள விவசாயிகள் அனைவருக்கும் பாசன நீரை இறைத்திட உதவும் வகையில், மானியத்தில் புதிய திறன்மிகு நான்கு நட்சத்திர தரச்சான்றுடைய மின்மோட்டார் பம்பு செட்டுகள் வாங்கவும், திறன் குறைந்த பழைய மின்மோட்டார் பம்பு செட்டுகளை

மாற்றி புதிய திறன்மிகு நான்கு நட்சத்திர தரச்சான்றுடைய மின்மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தவும், 5,000 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.7.50 கோடி ஒன்றிய, மாநில அரசின் நிதி பங்களிப்புடன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மின்மோட்டார் பம்புசெட் வாங்கிட ஆகும் மொத்த தொகையில் 50 சதவீதம் என்ற அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.15,000/- விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. கடந்த 2023-24-ஆம் ஆண்டில் 2,107 விவசாயிகளுக்கு ரூ.2.83 கோடி மானியம் வழங்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.6 வேளாண்மைப் பொறியியல் தொழில் நுட்பங்கள் பரவலாக்கம்

#### 4.6.1. நவீன வேளாண்மைப் பொறியியல் தொழில் நுட்பங்கள் செயல்விளக்கம்

நவீன வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்திட ஊக்குவிக்கும் பொருட்டு, அத்தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, வேளாண்மைப் பொறியியல்

துறையின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில், 93 புதுமையான தொழில்நுட்பங்களின் 101 செயல்விளக்கங்கள், 8,244 விவசாயிகள் பயன்பெறும் வண்ணம் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், இந்நிதியாண்டில் 50 செயல்விளக்கங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன.

**4.6.2 படித்த இளைஞர்களை விவசாயத்திற்கு ஈர்த்திட வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி**

சென்னை நந்தனத்திலுள்ள மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையத்தில் இளைஞர்களுக்கு வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களான வேளாண் இயந்திரமயமாக்கல், நீர் மேலாண்மை, அறுவடைக்குப்பிந்தைய தொழில்நுட்பங்கள், வேளாண்மையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலைச் சார்ந்த தொழில்நுட்பங்கள் போன்றவற்றினைப் பற்றிய விழிப்புணர்வு, அவை செயல்படும் விதங்கள் பற்றிய ஐந்து நாட்கள் பயிற்சி அளிக்கப்படும். 2024-25-ஆம் ஆண்டில், ஒரு குழுவிற்கு 20 இளைஞர்கள் என்ற வீதத்தில் 25 பயிற்சிகள் 500

இளைஞர்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்படவுள்ளன.

மேலும் கிராமப்புர இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன், "வேளாண் இயந்திரங்கள் குறித்த செயல்விளக்கப் பயிற்சி", "டிராக்டர் ஓட்டுநர் பயிற்சி" ஆகியவற்றில் 22 திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வேலூர், திருவாரூர், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் அமைந்துள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் அரசு இயந்திரக் கலப்பைப் பணிமனைகளில் நடப்பாண்டில் வழங்கப்பட உள்ளன.

### 4.7. கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

வேளாண்மைப் பொறியியல் துறையானது, துறையின் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதுடன், சகோதரத் துறைகளின் கட்டமைப்புப் பணிகளுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் மதுரை, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில்

வேளாண்மைத் துறைக்காக இரண்டு உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகக் கட்டடங்கள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2023–24–இல், 15 வேளாண் இயந்திரக் கூடங்கள் ரூ.2.85 கோடி மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டு, 10 வேளாண் இயந்திரக் கூடங்கள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு கட்டப்பட்டு வருகின்றன. மேலும், 25 வட்டார அளவிலான வேளாண் இயந்திரக் கூடங்கள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் இந்நிதியாண்டில் அமைக்கப்பட உள்ளன.

வேளாண்மைப் பொறியியல் துறையின் அரசு வேளாண் இயந்திரக் கலப்பைப் பணிமனைகளில் கட்டட பராமரிப்புப் பணிகளும், புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகளும், ரூ.9.65 கோடி மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2023–24–இல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கட்டமைப்பினை வலுப்படுத்தும் விதமாக வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தின் முதல் தளத்தில் நவீன பயிற்சி அரங்கம், கூட்ட அரங்கம் ஆகியவை தேசிய வேளாண்மை வளர்ச்சித்

திட்டம் 2023-24இல் ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

## 4.8. நிர்வாக அமைப்பு

**அட்டவணை.4.2. வேளாண்மைப் பொறியியல் துறை பணியாளர்களின் விவரம்**

| வ. எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட எண்கள் |
|---|---|---|
| 1 | தலைமைப் பொறியாளர் (வே.பொ.) | 1 |
| 2 | தலைமைப் பொறியாளர் (வே.பொ.), நபதி | 1 |
| 3 | கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ.) | 14 |
| 4 | செயற் பொறியாளர் (வே.பொ.) | 38 |
| 5 | உதவி செயற் பொறியாளர் (வே.பொ.) | 125 |
| 6 | உதவிப் பொறியாளர் (வே.பொ.)/ இளநிலைப் பொறியாளர் (வே.பொ.) | 850 |
| 7 | அமைச்சுப் பணியாளர்கள் | 1,120 |
| 8 | களப் பணியாளர்கள் | 1,866 |
| | **மொத்தம்** | **4,015** |

## 5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

வேளாண்மையில் அதிகரித்து வரும் சவால்கள், தேவைகளைக் கருத்தில் கொண்டு அரசு சந்தை சார்ந்த வேளாண்மையை ஊக்குவித்து வருவதால் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து, நீடித்த நிலையான வேளாண் வளர்ச்சி அடைய ஏதுவாகிறது. வேளாண் சந்தைகளை அமைத்தல், அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள், கட்டமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற உத்திகளைக் கையாளுவதன் மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.1 வேளாண்மை விற்பனை

#### 5.1.1 விற்பனைக்குழுக்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

விவசாயிகளும், வியாபாரிகளும் வேளாண் விளைபொருள் பரிவர்த்தனையை மறைமுக ஏல முறையில் மேற்கொள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஒரு பாலமாக செயல்படுகின்றன.

தமிழ்நாட்டில் வேளாண் விளைபொருட்களின் விற்பனையினை சிறந்த வகையில் முறைப்படுத்திட 27 விற்பனைக் குழுக்களின் கீழ் 284 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம், 1987 மற்றும் அதன் விதிகள் 1991 –இன் படி செயல்பட்டு வருகின்றன.

வேளாண் விளைபொருள்கள் பரிவர்த்தனைக்காக விவசாயிகளிடமிருந்து சந்தை/ உரிமக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.

வணிகர்களிடமிருந்து விற்பனை செய்த விளைபொருட்களின் மதிப்பில் ஒரு சதவீதம் சந்தைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. மேலும், வியாபாரிகள், எடையாளர்களிடம் உரிமக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. 2023–24–ஆம் ஆண்டில் 30.59 இலட்சம் மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு ரூ.154.20 கோடி வரவினம் பெறப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 525 சேமிப்புக்கிடங்குகள் (6.68 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு), 395 பரிவர்த்தனைக் கூடங்கள், 421 உலர்களங்கள், 863 வணிகர் கடைகள், 268

குளிர்பதனக் கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகளுடன் கூடிய வணிக வளாகங்கள், விவசாயிகள் ஓய்வறை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### அட்டவணை: 5.1. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகள் (எண்களில்)

| வ. எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனைக் கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | குளிர்பதனக் கிடங்குகள் | குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | சிறப்பு வணிக வளாகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 3 | 5 | 6,200 | 2 | 2 | 6 | 3 | 15 | -- |
| 2 | செங்கல்பட்டு | 4 | 2 | 2,600 | 1 | -- | 2 | 1 | 5 | -- |
| 3 | திருவள்ளூர் | 8 | 8 | 11,500 | 4 | -- | 7 | 1 | 5 | -- |
| 4 | கடலூர் | 11 | 19 | 29,000 | 27 | 73 | 14 | 10 | 1,102 | -- |
| 5 | விழுப்புரம் | 11 | 21 | 52,600 | 28 | 32 | 12 | 4 | 50 | -- |
| 6 | கள்ளக்குறிச்சி | 8 | 18 | 24,000 | 18 | 13 | 8 | 3 | 55 | -- |
| 7 | வேலூர் | 3 | 6 | 4,400 | 4 | 36 | 3 | 5 | 39 | -- |
| 8 | இராணிப்பேட்டை | 6 | 8 | 7,300 | 13 | 16 | 6 | 1 | 5 | -- |
| 9 | திருப்பத்தூர் | 3 | 8 | 6,800 | 2 | 4 | 2 | 2 | 30 | -- |
| 10 | திருவண்ணாமலை | 18 | 39 | 46,900 | 49 | 54 | 28 | 11 | 195 | -- |
| 11 | தருமபுரி | 7 | 5 | 5,800 | 7 | 10 | 9 | 9 | 1,320 | 1 |
| 12 | கிருஷ்ணகிரி | 9 | 7 | 7,800 | 6 | 18 | 11 | 25 | 1,567 | 1 |
| 13 | சேலம் | 14 | 17 | 15,200 | 20 | 20 | 22 | 15 | 275 | -- |
| 14 | நாமக்கல் | 6 | 10 | 8,600 | 3 | 0 | 6 | 6 | 84 | 1 |
| 15 | ஈரோடு | 18 | 47 | 66,514 | 49 | 37 | 46 | 14 | 1,290 | 3 |
| 16 | திருப்பூர் | 15 | 64 | 86,500 | 30 | 10 | 52 | 8 | 162 | 2 |
| 17 | கோயம்புத்தூர் | 10 | 31 | 26,405 | 16 | 46 | 30 | 22 | 1,704 | 3 |
| 18 | நீலகிரி | 4 | -- | -- | 2 | 5 | -- | 10 | 597 | 1 |
| 19 | பெரம்பலூர் | 2 | 2 | 2,500 | 1 | -- | 1 | 4 | 85 | 1 |
| 20 | அரியலூர் | 4 | 7 | 6,200 | 10 | -- | 6 | 1 | 25 | -- |

| வ. எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனைக் கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | குளிர்பதனக் கிடங்குகள் | குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | சிறப்பு வணிக வளாகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21 | திருச்சிராப்பள்ளி | 10 | 12 | 15,375 | 12 | 20 | 11 | 15 | 3,297 | 4 |
| 22 | கரூர் | 4 | 2 | 1,000 | 4 | 0 | 1 | 1 | 25 | -- |
| 23 | தஞ்சாவூர் | 13 | 28 | 41,250 | 18 | 16 | 19 | 8 | 155 | 2 |
| 24 | திருவாரூர் | 8 | 19 | 21,500 | 8 | 20 | 16 | 3 | 15 | -- |
| 25 | நாகப்பட்டினம் | 4 | 3 | 4,500 | 4 | -- | -- | - | - | -- |
| 26 | மயிலாடுதுறை | 4 | 10 | 11,320 | 7 | -- | 5 | - | - | -- |
| 27 | புதுக்கோட்டை | 10 | 4 | 3,500 | 3 | -- | 5 | 5 | 140 | 1 |
| 28 | மதுரை | 6 | 14 | 18,000 | 4 | 43 | 6 | 5 | 42 | 1 |
| 29 | திண்டுக்கல் | 8 | 17 | 23,200 | 8 | 105 | 18 | 14 | 2,135 | 1 |
| 30 | தேனி | 7 | 12 | 12,500 | 5 | 0 | 10 | 12 | 722 | 2 |
| 31 | விருதுநகர் | 7 | 14 | 16,200 | 4 | 57 | 6 | 11 | 190 | -- |
| 32 | சிவகங்கை | 7 | 16 | 15,850 | 1 | 0 | 8 | 2 | 30 | -- |
| 33 | இராமநாதபுரம் | 6 | 13 | 17,100 | 4 | 140 | 10 | 7 | 2,160 | 1 |
| 34 | திருநெல்வேலி | 4 | 7 | 9,600 | 4 | 18 | 7 | 9 | 310 | 1 |
| 35 | தென்காசி | 7 | 8 | 16,000 | 3 | 55 | 9 | 7 | 1,725 | 1 |
| 36 | தூத்துக்குடி | 9 | 15 | 17,800 | 10 | 5 | 13 | 12 | 282 | 1 |
| 37 | கன்னியாகுமரி | 6 | 7 | 6,500 | 4 | 8 | 6 | 2 | 27 | 2 |
| | **மொத்தம்** | **284** | **525** | **6,68,014** | **395** | **863** | **421** | **268** | **19,865** | **30** |

விவசாயிகளின் உடனடி பணத் தேவைக்காகவும், வரத்துக் காலங்களில் குறைந்த விலையில் விளைபொருட்களை விற்பனை செய்வதைத் தவிர்த்திடவும், பொருளீட்டுக் கடனாக அதிக பட்சமாக ரூ.5 இலட்சம் வரை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. விவசாயிகள் கடன் பெற்ற நாள் முதல் 15 நாட்களுக்கு வட்டி வசூலிக்கப்படுவதில்லை. அதன் பின்னர் 5 சதவீத

வட்டி வசூலிக்கப்படுகிறது. வியாபாரிகள் அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை 9 சதவீத வட்டியில் பொருளீட்டுக் கடன் பெறலாம். 2023-24-ஆம் ஆண்டில் 1,505 விவசாயிகள் ரூ.35.80 கோடியும், 260 வியாபாரிகள் ரூ.4.61 கோடியும் பொருளீட்டுக் கடனாகப் பெற்றுள்ளனர்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் (WDRA) அங்கீகாரம் பெற்ற 150 சேமிப்புக் கிடங்குகளில் விவசாயிகளும், வியாபாரிகளும் தாங்கள் சேமித்து வைத்துள்ள விளைபொருட்களின் மதிப்பிற்கு ஏற்றவாறு வங்கிகளில் பொருட்களின் மதிப்பில் 80 சதவீதம் கடனுதவி பெற மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது (e-Negotiable Warehouse Receipt) வழங்கப்படுகிறது. இதுவரை கடனுதவியாக ரூ.77.58 கோடி பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் மூலம் 80 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2024-25-ஆம் ஆண்டில் கூடுதலாக 100 சேமிப்புக்கிடங்குகளுக்கு, கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது.

2023-24-ஆம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் ரூ.17.60 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 6 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பரிவர்த்தனைக்கூடம், சேமிப்புக் கிட்டங்கி, உலர்களம் போன்ற கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் 2023-24-ஆம் ஆண்டில் 100 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கட்டமைப்புகளைப் புதுப்பிக்க ரூ.47.30 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024-25-ஆம் ஆண்டிலும் கூடுதலாக 100 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் கட்டமைப்பு வசதிகளை ரூ.50 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் 2024-25-ஆம் ஆண்டில் ஈரோடு, தருமபுரி, கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மஞ்சள் விவசாயிகளுக்கென மஞ்சளைப் பதப்படுத்தி அதன் சேமிப்புக் காலத்தை அதிகரித்து மஞ்சள் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க ஏதுவாக ஐந்து மஞ்சள் மெருகேற்றும் இயந்திரங்களும், எட்டு

மஞ்சள் வேகவைக்கும் இயந்திரங்களும் ரூ.2.11 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளன.

2024-25-ஆம் ஆண்டில் திருவள்ளூர், இராணிப்பேட்டை, செய்யாறு, கடலூர், விழுப்புரம், தருமபுரி, தஞ்சாவூர், கம்பம், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய 10 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நடமாடும் தானிய உலர்த்திகளை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.1.2 மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM)

தமிழ்நாட்டில் அக்டோபர் 2017 முதல் பல்வேறு கட்டங்களில் 157 சந்தைகள் மின்னணு தேசிய வேளாண் சந்தையில் இணைக்கப்பட்டு, மின்னணு வர்த்தகம் நடைபெற்று வருகிறது.

மின்னணு தேசிய வேளாண் சந்தைகளில், தேங்காய் உட்பட 219 வேளாண் விளைபொருட்கள் வர்த்தகம் செய்யப்பட்டு வருகின்றன. அவ்வகையில் 2023-24-ஆம் ஆண்டில் ரூ.2,532 கோடி மதிப்பிலான 104.85 இலட்சம் எண்கள் தேங்காயும், 7.72 இலட்சம் மெட்ரிக் டன் இதர விளைபொருட்களும் வர்த்தகம் செய்யப்பட்டு, 5.50

இலட்சம் விவசாயிகளுக்கு மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தின் வழியாக ரூ.1,791 கோடி நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகளின் போக்குவரத்து செலவினம், அறுவடைக்குப்பின் ஏற்படும் கையாளும் இழப்பினைக் குறைத்து அவர்கள் பயன்பெறும் வகையில், 2023–24ஆம் ஆண்டில் பண்ணை அளவிலான வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டில் ரூ.52.92 கோடி மதிப்புடைய 33.41 இலட்சம் எண்கள் தேங்காய், 26,383 மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்கள் 12,354 விவசாயிகளின் விளைநிலங்களிலிருந்து நேரடியாக eNAM வலைதளத்தின் வாயிலாக வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும் வர்த்தகம் செய்ய ஏதுவாக இதுவரை, 7,816 வர்த்தகர்களுக்கு ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் (Unified Single Licence) வழங்கப்பட்டுள்ளது.

சந்தைகளுக்கு இடையில் (Inter–Mandi) ரூ.1,117 கோடி மதிப்புடைய 3.69 இலட்சம் மெ.டன் வேளாண் விளைபொருட்கள் 4,071 வர்த்தகர்கள்

மூலம் 2023–24–ஆம் ஆண்டில் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநிலங்களுக்கு இடையில் (Inter–State) மின்னணு தேசிய வேளாண் சந்தைகளிலிருந்து 2023–24–ஆம் ஆண்டில் புதுச்சேரி யூனியன் பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், கேரளா, மகாராஷ்டிரா, தெலுங்கானா, மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களுடன் ரூ.9.98 கோடி மதிப்புடைய 2,036 மெட்ரிக் டன் பருத்தி, உளுந்து, துவரை, கொப்பரை, எள், மணிலா, பச்சைப்பயறு, உருளைக்கிழங்கு ஆகிய வேளாண் விளைபொருட்களின் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது.

மின்னணு தேசிய வேளாண் சந்தையில் இணைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கையினை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கில் (SDG–Goal 2) தேசிய அளவிலான குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் உள்ள 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 157 விற்பனைக் கூடங்கள் (55 சதவீதம்) மின்னணு தேசிய வேளாண் சந்தையில் இணைக்கப்பட்டுள்ளன.

## 5.2 வேளாண் வணிகம்

### 5.2.1. உழவர் சந்தை

விவசாயிகளால் விளைவிக்கப்படும் காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள் போன்ற விளைபொருட்களை இடைத்தரகர்களின் இடையூறின்றி நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்து பயனடையும் வகையில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது உழவர் சந்தை என்னும் உன்னதத் திட்டம்.

விவசாயிகளும், நுகர்வோர்களும் ஒரு சேரப் பயனடையும் இத்திட்டமானது தற்போது 192 உழவர் சந்தைகளுடன் வெள்ளி விழா (25வது) ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

**அட்டவணை: 5.2. மாவட்ட வாரியாக உழவர் சந்தைகள்**

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தைகள் |
|---|---|---|
| 1 | அரியலூர் (2) | அரியலூர், ஜெயங்கொண்டம் |
| 2 | கோயம்புத்தூர் (8) | ஆர்.எஸ்.புரம், சிங்காநல்லூர், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், குறிச்சி, சூலூர், வடவள்ளி, சுந்தராபுரம் |
| 3 | கடலூர் (6) | கடலூர், சிதம்பரம், விருத்தாச்சலம், பண்ருட்டி, வடலூர், காட்டுமன்னார்கோவில் |
| 4 | தருமபுரி (6) | தருமபுரி, பென்னாகரம், பாலக்கோடு, ஏ.ஜெட்டிஹள்ளி, அரூர், காரிமங்கலம் |

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தைகள் |
|---|---|---|
| 5 | திண்டுக்கல் (6) | திண்டுக்கல், பழனி, சின்னாளப்பட்டி, கொடைக்கானல், வத்தலக்குண்டு, வேடசந்தூர் |
| 6 | ஈரோடு (6) | சம்பத்நகர், கோபிச்செட்டிப்பாளையம், சத்தியமங்கலம், பெரியார்நகர், பெருந்துறை, தாளவாடி |
| 7 | காஞ்சிபுரம்(4) | காஞ்சிபுரம், படப்பை, சுங்குவார்சத்திரம், குன்றத்தூர் |
| 8 | செங்கல்பட்டு (9) | பல்லாவரம், செங்கல்பட்டு, மேடவாக்கம், நங்கநல்லூர், மதுராந்தகம், கீழ்க்கட்டளை, ஜமீன்ராயப்பேட்டை, கூடுவாஞ்சேரி, திருக்கழுக்குன்றம் |
| 9 | கன்னியாகுமரி (2) | வடசேரி, மயிலாடி |
| 10 | கரூர் (6) | கரூர், குளித்தலை, வேலாயுதம்பாளையம், பள்ளப்பட்டி, வெங்கமேடு, காந்திகிராமம் |
| 11 | கிருஷ்ணகிரி(5) | ஓசூர், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், தேன்கனிக்கோட்டை, ஆவலப்பள்ளி |
| 12 | மதுரை(7) | அண்ணாநகர், சொக்கிக்குளம், பழங்காநத்தம், உசிலம்பட்டி, திருமங்கலம், மேலூர், ஆனையூர், |
| 13 | நாகப்பட்டினம் (2) | நாகப்பட்டினம், வேதாரண்யம் |
| 14 | மயிலாடுதுறை(2) | மயிலாடுதுறை, சீர்காழி |
| 15 | நாமக்கல்(6) | நாமக்கல், திருச்செங்கோடு, இராசிபுரம், குமாரபாளையம், பரமத்திவேலூர், மோகனூர் |
| 16 | நீலகிரி(4) | உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர் |
| 17 | பெரம்பலூர்(2) | பெரம்பலூர், வேப்பந்தட்டை |
| 18 | புதுக்கோட்டை (7) | புதுக்கோட்டை, அறந்தாங்கி, ஆலங்குடி, கந்தர்வகோட்டை, கறம்பக்குடி, விராலிமலை, பொன்னமராவதி |
| 19 | இராமநாதபுரம்(3) | இராமநாதபுரம், பரமக்குடி, கமுதி |
| 20 | சேலம் (13) | சூரமங்கலம், அம்மாபேட்டை, ஆத்தூர், தாதகாப்பட்டி, மேட்டூர், ஆட்டையாம்பட்டி, அஸ்தம்பட்டி, இளம்பிள்ளை, தம்பம்பட்டி, ஜலகண்டாபுரம், எடப்பாடி, வாழப்பாடி, மேச்சேரி |
| 21 | சிவகங்கை(5) | சிவகங்கை , தேவகோட்டை, காரைக்குடி, திருப்பத்தூர், சிங்கம்புணரி |
| 22 | தஞ்சாவூர்(5) | தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருக்காட்டுப்பள்ளி, பாபநாசம் |

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தைகள் |
|---|---|---|
| 23 | தேனி(7) | தேனி, கம்பம், போடிநாயக்கனூர், பெரியகுளம், தேவாரம், ஆண்டிப்பட்டி, சின்னமனூர் |
| 24 | திருநெல்வேலி(5) | பாளையங்கோட்டை, கண்டியப்பேரி, மேலப்பாளையம், அம்பாசமுத்திரம், என்.ஜி. ஓ. காலனி |
| 25 | தென்காசி(2) | சங்கரன்கோவில், தென்காசி |
| 26 | திருப்பூர்(6) | உடுமலைப்பேட்டை, திருப்பூர் (வடக்கு), திருப்பூர் (தெற்கு), பல்லடம், காங்கேயம், தாராபுரம் |
| 27 | திருவள்ளூர்(6) | திருத்தணி, திருவள்ளூர், அம்பத்தூர், பருத்திப்பட்டு, நாரவாரிக்குப்பம், பேரம்பாக்கம் |
| 28 | திருவண்ணாமலை (8) | திருவண்ணாமலை, போளூர், ஆரணி, செய்யாறு, செங்கம், வந்தவாசி, கீழ்பென்னாத்தூர், தாமரைநகர் |
| 29 | திருவாரூர்(7) | திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி–1, திருவாரூர், நீடாமங்கலம், முத்துப்பேட்டை, மன்னார்குடி–2, வலங்கைமான் |
| 30 | திருச்சிராப்பள்ளி (8) | அண்ணாநகர், கே.கே.நகர், துறையூர், மணப்பாறை, முசிறி, துவாக்குடி, லால்குடி, மண்ணச்சநல்லூர் |
| 31 | தூத்துக்குடி(2) | தூத்துக்குடி , கோவில்பட்டி |
| 32 | வேலூர் (6) | வேலூர், காட்பாடி, குடியாத்தம், காகிதப்பட்டறை, பேரணாம்பட்டு, பள்ளிகொண்டா |
| 33 | இராணிப்பேட்டை (2) | இராணிப்பேட்டை , ஆற்காடு |
| 34 | திருப்பத்தூர்(3) | திருப்பத்தூர், நாட்றாம்பள்ளி, வாணியம்பாடி |
| 35 | விழுப்புரம்(3) | திண்டிவனம், விழுப்புரம், செஞ்சி |
| 36 | கள்ளக்குறிச்சி (3) | சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி |
| 37 | விருதுநகர்(8) | அருப்புக்கோட்டை, இராஜபாளையம்,. ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், சிவகாசி, சாத்தூர், காரியாப்பட்டி, தளவாய்புரம் |

உழவர் சந்தையின் அன்றாட விலை விவரங்களை "உழவர் செயலியில்" (Uzhavar App) தெரிந்துகொள்ளும் வகையில் வழிவகை

செய்யப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு சராசரியாக 8,000 விவசாயிகளால் ரூ.8.50 கோடி மதிப்புள்ள 2,300 மெட்ரிக் டன் காய், கனிகள் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

காலத்திற்கேற்ப உழவர் சந்தைகளைப் புதுப்பிப்பது இன்றியமையாதது. அதனடிப்படையில் 2021-22, 2022-23-ஆம் ஆண்டுகளில் ரூ.27.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 100 உழவர் சந்தைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, 2023-24-ஆம் ஆண்டில் 25 உழவர் சந்தைகள் ரூ.8.18 கோடி செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர 2021-22, 2022-23-ஆம் ஆண்டுகளில் 14 புதிய உழவர் சந்தைகள் அமைப்பதற்கும், திருவாரூரில் உள்ள ஒரு உழவர் சந்தையினை புதுப்பொலிவுடன் மறுகட்டமைப்பு செய்வதற்கும் ரூ.8.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றுள் 14 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியில் உழவர் சந்தை அமைக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

விவசாயிகளும், நுகர்வோர்களும் உள்ளூர் சந்தை, உழவர் சந்தை ஆகியவற்றில் நிலவும் விலை நிலவரங்களை அறிந்திடும் வகையில் ரூ.1.15 கோடி செலவில் மின்னணு விலைப்பலகைகள் 50 உழவர் சந்தைகளில் அமைக்கப்பட்டுள்ளன. 25 உழவர் சந்தைகளில் ரூ.2.75 கோடி செலவில் கழிவுகளை உரமாக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு 2023–24–ஆம் ஆண்டில் 49.13 மெட்ரிக் டன் மட்கும் உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

திருச்சி, கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், செங்கல்பட்டு, கடலூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் விவசாயிகள், நுகர்வோர்கள், படித்த இளைஞர்கள் ஆகியோர் பயனைடையும் வகையில் 30 நடமாடும் காய்கனி விற்பனை வாகனங்கள் வாங்க திட்டமிடப்பட்டு (வாகனம் ஒன்றிற்கு மானியமாக ரூ.2 இலட்சம் வழங்கப்படுகிறது) இதுவரை 29 வாகனங்களுக்கு ரூ.51.50 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு சந்தைவாய்ப்பினை ஏற்படுத்திடும் பொருட்டும், தோட்டக்கலைத்துறையின் இடுபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்திடும்

பொருட்டும் 50 உழவர் சந்தைகளில் கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

உழவர் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் காய்கனிகளின் தரத்தினை உறுதி செய்திடும் பொருட்டு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் (FSSAI) தரமதிப்பீட்டுச் சான்று பெறப்பட்டு வருகிறது. 2023-24-ஆம் ஆண்டில் 50 உழவர் சந்தைகளுக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீட்டில் தரமதிப்பீட்டுச் சான்று (FSSAI) பெறப்பட்டுள்ளது.

**5.2.2 குளிர்பதனக் கிடங்குகள்:**

அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்திடவும், காய்கனிகளின் தரம் குறையாமல் சேமிப்புக் காலத்தை நீட்டிக்கவும் 19,865 மெ.டன் கொள்ளளவு கொண்ட 268 குளிர்பதனக் கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2023-24-ஆம் ஆண்டில், 5,596 விவசாயிகளும், 33 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களும், 150 வர்த்தகர்களும் இவ்வசதியினைப் பயன்படுத்தி உள்ளனர்.

**அட்டவணை:5.3. கொள்ளளவு அடிப்படையில் மாநிலத்தில் உள்ள குளிர்பதனக் கிடங்குகள் விவரம்**

| கொள்ளளவு (மெ.டன்) | எண்ணிக்கை | மொத்த கொள்ளளவு (மெ.டன்) |
|---|---|---|
| 1000–2000 | 8 | 10,000 |
| 500–1000 | 8 | 4,000 |
| 100–200 | 18 | 2,155 |
| 50–100 | 17 | 850 |
| 10–50 | 92 | 2,216 |
| <10 | 125 | 644 |
| **மொத்தம்** | 268 | 19,865 |

இவை தவிர 20,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட ஏழு பெரிய குளிர்பதனக் கிடங்குகள் திருவள்ளூர், சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, தூத்துக்குடி, கடலூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு அவற்றைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று ஈரோடு மாவட்டத்தில் தாளவாடி, பர்கூர், சித்தோடு, வெள்ளாங்கோயில், வெப்பிலி ஆகிய ஐந்து இடங்களில் 1,750 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்குகள் ரூ.11.64 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் மூலம், குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு 42,115 மெட்ரிக் டன்னாக அதிகரிக்கும்.

**5.2.3 விவசாயிகளின் விளைபொருட்களுக்கான மதிப்புக்கூட்டு மையம்:**

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு இலாபகரமான விலையைப்பெற ஏதுவாக மதிப்புக் கூட்டு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் சிறுதானியங்கள் பதப்படுத்தும் மையம் ரூ. 35 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 2023-24ஆம் ஆண்டில் 20 மெட்ரிக் டன் சிறுதானியங்கள் பதப்படுத்தப்பட்டுள்ளன.

தென்னை மதிப்புக் கூட்டும் மையங்கள் தஞ்சாவூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ரூ.21.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வேளாண் தொழில் முனைவோர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டில் ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் தரம் பிரிப்புக்கூடம், மதிப்புக் கூட்டும் இயந்திரங்களுடன் கூடிய வாழை ஏல மையம் அமைக்கப்பட்டு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டம் தெள்ளானந்தல் பகுதியில் சமையல் எண்ணெய்க்கான நவீன சிப்பம் கட்டும் வசதியுடன் கூடிய சந்தை ஊக்குவிப்பு மையம் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், 2023–24–ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டம் அய்யன்கொல்லியில் காப்பிக் கொட்டை உடைத்துத் தரம் பிரிக்கும் இயந்திரம், மிளகு தரம்பிரித்து பொடி செய்யும் இயந்திரம் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பலாவிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை ஏற்றுமதித் தரத்தில் உற்பத்தி செய்து, அவற்றை சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, 2024–25–ஆம்

ஆண்டில் கடலூர் மாவட்டம், பண்ருட்டியில் பலா மதிப்புக்கூட்டு மையம் ரூ.16.13 கோடி செலவில் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம், சிறுதானியம் பயிரிடும் உழவர்களின் நலனுக்காக ரூ.4 கோடி மதிப்பீட்டில் மக்காச்சோளம்/சிறுதானிய தொழில்நுட்ப வணிக மேம்பாட்டு மையம் 2024–25–ஆம் ஆண்டில் அமைத்திட திட்டமிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 5.2.4 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

தமிழ்நாட்டில் 1,229 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வெவ்வேறு முகமைகள் மூலமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள மொத்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் எண்ணிக்கையானது நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்கு (SDG) குறியீடாக நிர்ணயம் செய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### 5.2.4.1 தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு

சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாக கம்பெனி சட்டம் 1956ன் கீழ் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் இயந்திரமயமாக்குதலுக்கான சாத்தியக்கூறுகள் அதிகரிப்பதுடன், குறைந்த இடுபொருட்கள் செலவு, நிதி உதவி பயன்கள், உரிய சந்தையை அணுகுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன. மேலும், இது விலை ஏற்ற இறக்கங்களிலிருந்து பாதுகாப்பினையும், திறன் வளர்ப்பு, கட்டமைப்பு வசதிகளை திறம்பட பயன்படுத்திடவும் வழிவகை செய்கின்றது.

தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு மூலம் 318 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம் (NADP), நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA), '10,000 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்குதல், ஊக்குவித்தல்' (10K FPOs) போன்ற திட்டங்களின் கீழ் 2014-15 முதல் 2021-22 வரை உருவாக்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

## அட்டவணை:5.4. மாவட்ட வாரியாக உருவாக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விவரம் (2014–15 முதல் 2021–22 வரை)

| வ. எண் | மாவட்டம் | தமிழ்நாடு சிறுவிவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு (எண்கள்) | தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (எண்கள்) |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 6 | 2 |
| 2 | செங்கல்பட்டு | 7 | 1 |
| 3 | திருவள்ளூர் | 10 | 2 |
| 4 | கடலூர் | 11 | 7 |
| 5 | விழுப்புரம் | 10 | 1 |
| 6 | கள்ளக்குறிச்சி | 7 | 3 |
| 7 | வேலூர் | 5 | 1 |
| 8 | இராணிப்பேட்டை | 6 | 4 |
| 9 | திருப்பத்தூர் | 6 | – |
| 10 | திருவண்ணாமலை | 16 | 4 |
| 11 | தருமபுரி | 11 | 3 |
| 12 | கிருஷ்ணகிரி | 12 | 2 |
| 13 | சேலம் | 13 | 1 |
| 14 | நாமக்கல் | 9 | 3 |
| 15 | ஈரோடு | 13 | 3 |
| 16 | திருப்பூர் | 8 | – |
| 17 | கோயம்புத்தூர் | 11 | 1 |
| 18 | நீலகிரி | 9 | – |
| 19 | பெரம்பலூர் | 7 | 1 |
| 20 | அரியலூர் | 8 | 3 |
| 21 | திருச்சிராப்பள்ளி | 9 | 6 |
| 22 | கரூர் | 8 | 1 |
| 23 | தஞ்சாவூர் | 13 | 4 |

| வ. எண் | மாவட்டம் | தமிழ்நாடு சிறுவிவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு (எண்கள்) | தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (எண்கள்) |
|---|---|---|---|
| 24 | திருவாரூர் | 8 | 3 |
| 25 | நாகப்பட்டினம் | 5 | 2 |
| 26 | மயிலாடுதுறை | 4 | 1 |
| 27 | புதுக்கோட்டை | 11 | 1 |
| 28 | மதுரை | 11 | 4 |
| 29 | திண்டுக்கல் | 10 | 2 |
| 30 | தேனி | 7 | 2 |
| 31 | விருதுநகர் | 10 | 1 |
| 32 | சிவகங்கை | 8 | 2 |
| 33 | இராமநாதபுரம் | 9 | 1 |
| 34 | திருநெல்வேலி | 4 | 4 |
| 35 | தென்காசி | 6 | 1 |
| 36 | தூத்துக்குடி | 5 | 2 |
| 37 | கன்னியாகுமரி | 5 | – |
| | **மொத்தம்** | 318 | 79 |
| | **ஆக மொத்தம்** | 397 | |

**5.2.4.1.1 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்கான மாநில அரசுத் திட்டம்**

உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை வலுப்படுத்தி, வணிக ரீதியாக முன்னேற்றும் வகையில், ஒரு விரிவான திட்டம் ரூ.266.70 கோடி ஒதுக்கீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, நாப்கிசான் (NABKISAN) நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் 375 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.32.38 கோடி மூலதன உதவியும், 47 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.6.73 கோடி கடன் உத்தரவாதமும், 175 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.23.20 கோடி சலுகையுடன் கூடிய சுழல் நிதியும் வழங்கப்பட்டுள்ளன.

### 5.2.4.1.2. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான ஆதரவுத்திட்டங்கள்

I. விதை சுத்திகரிப்பு நிலையம், சேமிப்புக் கிடங்கு அமைக்க 50 நிறுவனங்களுக்கு ரூ.30 கோடியும், பருப்பு ஆலை அமைக்க 10 நிறுவனங்களுக்கு ரூ.1.54 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.

II. இதுவரை 143 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் eNAM வலைதளத்தில் பதிவு செய்து, ரூ.14.81 கோடி மதிப்பிலான 13,404 மெ.டன் விளைபொருட்களை வர்த்தகம் செய்துள்ளனர். மேலும், 488 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் (Unified Single Licence) வழங்கப்பட்டுள்ளது.

III. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைபொருள்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய ஏதுவாக 50 சிறப்பு அங்காடிகள், 5 மாநகராட்சிகளில் அமைக்க ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

IV. விவசாயிகளைத் தொழில் முனைவோர்களாக மாற்ற 310 உழவர் உற்பத்தியாளர் நிறுவன உறுப்பினர்களுக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் வர்த்தகத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி, பட்டறிவுப் பயணம் ஆகியவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மூலமாக வழங்கப்பட்டுள்ளன.

V. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைப்பொருட்களை மதிப்புக்கூட்டி, சிப்பமிட்டு, முத்திரையிட்டு விற்பனை செய்வதற்கு ஏதுவாக Indian Institute of Packaging மூலமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 260 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

VI. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களுக்கான சந்தை இணைப்பு கண்காட்சியாக வேளாண் வணிகத்

திருவிழா 2023, ஜூலை 08 மற்றும் 09 அன்று சென்னையில் நடைபெற்றது.

VII. இவ்வேளாண் வணிகத் திருவிழாவில், 4,120 விவசாயிகள், 188 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், 1.83 இலட்சம் நுகர்வோர்கள் பங்கு பெற்றுப் பயனடைந்தனர். ரூ.2.50 கோடி மதிப்பீட்டிலான விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

VIII. தனியார் நிறுவனங்களுக்கு நிகராக விவசாயிகள்/ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி திறம்பட சந்தைப்படுத்திட ஏதுவாக தர நிர்ணயம் செய்து, பொது முத்திரை வழங்குவதற்கும் சென்னை, கோயம்புத்தூர் மண்டலத்தில் சிப்பம் கட்டுதலுக்கான பொது வசதிகள் ஏற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**5.2.4.2 தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்** (TNIAMP)

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம், ரூ.129.50 கோடி

மதிப்பீட்டில் 2017–18 முதல் 66 உபவடி நிலப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் 79 புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்குதல், ஏற்கனவே செயல்பட்டு வரும் 40 நிறுவனங்களுக்கு ஆதார நிறுவன உதவி அளித்தல், பதிவு செய்வதற்கான தொகை, உறுப்பினருக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய இனங்களில் ரூ.16.46 கோடி செலவிடப்பட்டுள்ளது.

5.2.4.2.1 **உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான மானியத் தொகை**

ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும் தொடக்க மானியமாக (Start up Grant) ரூ.10 இலட்சமும், உற்பத்தி முதலீட்டு மானியமாக (Productive Investment Grant) ரூ.20 இலட்சமும், திறம்பட செயல்படும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக விரிவாக்க மானியமாக (Business Expansion Grant) ஒரு நிறுவனத்திற்கு ரூ.30 இலட்சமும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தில் 2023–24–ஆம் ஆண்டில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு

பல்வேறு இனங்களில் நிதி உதவி வழங்கிட ரூ.13.65 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.12.81 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**5.2.4.2.2 வேளாண் தொழில் முனைவோருக்கான நிதி உதவி:**

வேளாண் தொழில் முனைவோருக்கு ரூ.4.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 124 வேளாண் தொழில் முனைவோர்களுக்கு ரூ.2.82 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**5.2.5 வேளாண் புத்தாக்க நிறுவனங்களை (Agritech Startup) ஊக்குவித்தல்**

2024–25–ஆம் ஆண்டில் வேளாண்மை, வேளாண்மை சார்ந்த தொழில் தொடங்கும் புத்தாக்க நிறுவனங்களைக் கண்டறிந்து தகுதியுள்ள புத்தாக்க நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக ரூ. 10 கோடி மதிப்பீட்டில் மானியம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**5.2.6 விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்.**

அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்து, விவசாயிகளை ஏற்றுமதி சந்தை,

பதப்படுத்துவோர், நுகர்வோர் ஆகியோருடன் ஒருங்கிணைத்து, உற்பத்தி உபரியினை மதிப்புக் கூட்டுப் பொருளாக மாற்றி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தில் முதற்கட்டமாக 11 மாவட்டங்களில் 64 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் ரூ.482.36 கோடி மதிப்பீட்டில் சிப்பம் கட்டும் அறை, குளிர்பதனக் கிடங்கு, சேமிப்புக் கிடங்குகள், சுத்தம் செய்தல், தரம் பிரித்தல், சிப்பம் கட்டுதலுக்கான முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள் போன்ற வசதிகளுடன் ஏற்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

இந்த முதன்மை பதப்படுத்தும் நிலையங்களில் இதுவரை, 1.61 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள், பழங்கள் பதப்படுத்தப்பட்டு, இதுவரை 2.14 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

பழங்கள், காய்கறிகளின் சேமிப்புக் காலத்தினை நீட்டிக்கவும், ஏற்றுமதி சந்தைக்கு ஏற்ப தரத்தினை உயர்த்திடவும், சிறப்பு கட்டமைப்புகளான காமா கதிரியக்கக் கூடம் (Gamma irradiation unit), துரித

உறைநிலைக் கூடம் (Individually Quick Freezing Unit), நீராவி வெப்பப் பதப்படுத்தும் நிலையம் (Vapour Heat treatment plant), அப்பீடா (APEDA) தரம் பெற்ற சிப்பம் கட்டும் கூடம் போன்ற வசதிகள் இத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக சேலம், ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கரூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் 20 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள், ரூ.102.47 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு அவற்றைச் செயல்பாட்டிற்கு கொண்டுவரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அட்டவணை:5.5. விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்_– முதன்மை பதப்படுத்தும் நிலையங்களின் விவரங்கள்**

**(கட்டம் – I )**

| வ. எண். | மாவட்டம் | முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் |
|---|---|---|
| 1. | கிருஷ்ணகிரி (10) | ஓசூர், காமன்தொட்டி, தேன்கனிக்கோட்டை, தட்டிகானப்பள்ளி, இராயக்கோட்டை, ஆலப்பட்டி, குந்தாரப்பள்ளி, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், போச்சம்பள்ளி |

| வ. எண். | மாவட்டம் | முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் |
|---|---|---|
| 2. | தருமபுரி (5) | பாலக்கோடு, தருமபுரி, அரூர், பாப்பாரப்பட்டி, பென்னாகரம் (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 3. | கோயம்புத்தூர் (7) | சூலூர், பூலுவாப்பட்டி, பிச்சனூர், வடக்கிபாளையம், பொள்ளாச்சி, ஆனைமலை, சிக்கதாசம்பாளையம். |
| 4. | நீலகிரி (9) | ஓசஹட்டி, அணிக்கொரை, தாவணை, புது அலஞ்சி, சுள்ளிக்கூடு, உப்பட்டி, அய்யங்கொல்லி, நீலகிரி (கூட்டுறவு விற்பனை சங்கம்), உதகை ரோஜா பூங்கா |
| 5. | திருச்சிராப்பள்ளி (12) | லால்குடி, எம்.புத்தூர், மண்ணச்சநல்லூர் – I, மண்ணச்சநல்லூர் – II, திருச்செந்துறை, பி.கே. அகரம், அரசலூர், பிடாரமங்கலம், உப்பிலியாபுரம் (தெற்கு), தாத்தையங்கார்பேட்டை, கள்ளிக்குடி, துறையூர் (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 6. | திண்டுக்கல் (5) | பழனி, கோபால்பட்டி, கவுஞ்சி, வேடசந்தூர், பழனி (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 7. | தேனி (5) | தேனி, சின்னமனூர், கம்பம்–I, கம்பம்–II, பெரியகுளம் |
| 8. | இராமநாதபுரம் (3) | பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 9. | தூத்துக்குடி (3) | ஸ்ரீவைகுண்டம், புதூர், விளாத்திக்குளம் |
| 10. | திருநெல்வேலி (2) | இராமையன்பட்டி, வள்ளியூர் |
| 11. | தென்காசி (3) | சங்கரன்கோவில், கடையநல்லூர், பாவூர்சத்திரம் |

**(கட்டம் – II )**

| வ. எண் | மாவட்டம் | முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் |
|---|---|---|
| 1. | சேலம் (5) | உத்தமசோழபுரம், தலைவாசல், வாழப்பாடி, எடப்பாடி, கொளத்தூர் |
| 2. | ஈரோடு (2) | அளுக்குளி, அந்தியூர் |
| 3. | திருவள்ளூர் (2) | திருவள்ளூர், ஆரணி |
| 4. | செங்கல்பட்டு (1) | மதுராந்தகம் |
| 5. | காஞ்சிபுரம் (1) | சுங்குவார்சத்திரம் |
| 6. | திருவண்ணாமலை (2) | படவேடு, குப்பநத்தம் |
| 7. | கடலூர் (2) | பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி |
| 8. | விழுப்புரம் (2) | ஒலக்கூர், வானூர் |
| 9. | கரூர் (3) | அரவக்குறிச்சி, மகாதானபுரம், வேலாயுதம்பாளையம் |

இந்த முதன்மை பதப்படுத்தும் நிலையங்களில் காய்கறிகள், பழங்கள் மட்டுமன்றி சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துகள் ஆகிய அனைத்து விளைபொருட்களையும் பதப்படுத்தி பயன்பாட்டினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 5.2.7 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVIADP):

கிராமங்கள்தோறும் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் நோக்கத்தோடு, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் 2021-22, 2022-2023-ஆம் ஆண்டுகளில் 185 உலர்களங்கள் ரூ.19.43 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு, பொது மக்கள், விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும், 2023-24-ஆம் ஆண்டில் 100 உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்பு கூடங்கள் ரூ.34 கோடி செலவில், விவசாயிகளின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டு வருகின்றன. 2024-25-ஆம் ஆண்டில், 200 உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்கள் ரூ.70 கோடி செலவில் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**அட்டவணை:5.6. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பு வசதிகள்**

| வ. எண் | மாவட்டம் | உலர்களங்கள் | | உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புகூடங்கள் |
|---|---|---|---|---|
| | | 2021-22 | 2022-23 | 2023-24 |
| | | எண்கள் | எண்கள் | எண்கள் |
| 1 | அரியலூர் | 1 | 3 | 2 |
| 2 | செங்கல்பட்டு | 1 | 3 | 4 |
| 3 | கோயம்புத்தூர் | 1 | 3 | 1 |
| 4 | கடலூர் | 5 | 10 | 5 |
| 5 | தருமபுரி | 1 | 4 | 1 |
| 6 | திண்டுக்கல் | 1 | 3 | 3 |
| 7 | ஈரோடு | 1 | 3 | 3 |
| 8 | கள்ளக்குறிச்சி | 1 | 4 | 4 |
| 9 | காஞ்சிபுரம் | 1 | 4 | 3 |
| 10 | கன்னியாகுமரி | - | 1 | - |
| 11 | கரூர் | 1 | 3 | 2 |
| 12 | கிருஷ்ணகிரி | 1 | 2 | 2 |
| 13 | மதுரை | 1 | 4 | 5 |
| 14 | மயிலாடுதுறை | 1 | 3 | 2 |
| 15 | நாகப்பட்டினம் | 1 | 3 | 2 |
| 16 | நாமக்கல் | 1 | 3 | 1 |
| 17 | நீலகிரி | 1 | 3 | 1 |
| 18 | பெரம்பலூர் | 1 | 3 | 2 |

| வ. எண் | மாவட்டம் | உலர்களங்கள் | | உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புகூடங்கள் |
|---|---|---|---|---|
| | | 2021-22 | 2022-23 | 2023-24 |
| | | எண்கள் | எண்கள் | எண்கள் |
| 19 | புதுக்கோட்டை | 3 | 4 | 4 |
| 20 | இராமநாதபுரம் | 1 | 4 | 2 |
| 21 | இராணிப்பேட்டை | 1 | 3 | 3 |
| 22 | சேலம் | 1 | 3 | 2 |
| 23 | சிவகங்கை | 2 | 4 | 3 |
| 24 | தென்காசி | 1 | 3 | 2 |
| 25 | தஞ்சாவூர் | 2 | 6 | 4 |
| 26 | தேனி | 1 | 3 | 2 |
| 27 | திருநெல்வேலி | 1 | 3 | 2 |
| 28 | திருப்பத்தூர் | 1 | 3 | 2 |
| 29 | திருவள்ளூர் | 1 | 4 | 5 |
| 30 | திருவாரூர் | 2 | 4 | 4 |
| 31 | தூத்துக்குடி | 1 | 4 | 4 |
| 32 | திருப்பூர் | 1 | 3 | 2 |
| 33 | திருவண்ணாமலை | 2 | 6 | 3 |
| 34 | திருச்சிராப்பள்ளி | 5 | 4 | 4 |
| 35 | வேலூர் | 1 | 3 | 2 |
| 36 | விழுப்புரம் | 1 | 5 | 4 |
| 37 | விருதுநகர் | 1 | 4 | 3 |
| **மொத்தம்** | | **50** | **135** | **100** |

**5.2.8 தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் சிறுதானியங்கள் பதப்படுத்தும் மையங்கள் அமைத்தல்:**

தமிழ்நாட்டில் சிறுதானியங்களின் உற்பத்தியினை அதிகரித்திடவும், அவற்றை மதிப்புக்கூட்டி, மக்களிடையே சிறுதானியங்களின் பயன்பாட்டை அதிகரித்து, அதன்மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கத்தில், 2023-24-ஆம் ஆண்டு முதல் 2027-28 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு "தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி, 2023-24ஆம் ஆண்டில், 50 சிறுதானிய பதப்படுத்தும் மையங்கள் ரூ.9.38 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்திட பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 2024-25-ஆம் ஆண்டில், 40 சிறுதானிய பதப்படுத்தும் மையங்கள் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட உள்ளன.

**5.2.9 வேளாண் கட்டமைப்பு நிதியின் (AIF) கீழ் கடன் வசதிபெறும் திட்டம்**

வேளாண் கட்டமைப்புகளை வலுப்படுத்த முன்வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் தொழில் முனைவோர், விவசாயிகள் போன்றோர்களுக்கு அதிகபட்சமாக ரூ. 2 கோடி வரையிலான கடனுக்கு ஏழு ஆண்டுகளுக்கு 3 சதவீத வட்டிக்குறைப்பும் கடன் உத்திரவாதம் வழங்குதல், முதன்மை பதப்படுத்துதல், விளைபொருட்கள் வீணாவதை தடுத்தல், விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்தல் ஆகியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து இதுவரை ரூ.1,614.63 கோடி மதிப்பிலான 6,580 கடன்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு ரூ.1,092.70 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

**5.2.10 அக்மார்க் தரம்பிரிப்பு**

"அக்மார்க்" என்பது இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட வேளாண் விளைபொருட்களுக்கான

தரச்சான்றாகும். இதுவரை இத்திட்டத்தில் அரிசி, பருப்பு வகைகள், நெய், தேன், மசாலாப் பொடி போன்ற 240 பொருட்களுக்கு தரநிலைக் குறியீடுகள் வகுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வகங்களும், ஒரு முதன்மை ஆய்வகமும் இயங்கி வருகின்றன.

**அட்டவணை: 5.7. மாவட்ட வாரியாக அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வக விவரம்**

| வ. எண் | மாவட்டம் | ஆய்வகம் அமைந்துள்ள இடங்களின் விவரம் |
|---|---|---|
| 1 | சென்னை | முதன்மை ஆய்வகம் |
| 2 | காஞ்சிபுரம் (2) (இருப்பு சென்னை) | சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு) |
| 3 | வேலூர் | வேலூர் |
| 4 | கடலூர் | பண்ருட்டி |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 6 | திருச்சிராப்பள்ளி (2) | திருச்சிராப்பள்ளி–I , திருச்சிராப்பள்ளி–II |
| 7 | கரூர் | கரூர் |
| 8 | மதுரை(2) | மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு) |
| 9 | தேனி | தேனி |
| 10 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 11 | விருதுநகர் | விருதுநகர் |
| 12 | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 13 | தென்காசி | தென்காசி |

| வ. எண் | மாவட்டம் | ஆய்வகம் அமைந்துள்ள இடங்களின் விவரம் |
|---|---|---|
| 14 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 15 | கன்னியாகுமரி(2) | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 16 | சேலம் | சேலம் |
| 17 | தருமபுரி | தருமபுரி |
| 18 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 19 | ஈரோடு(4) | பெருந்துறை, ஈரோடு–I, ஈரோடு–II, சித்தோடு |
| 20 | திருப்பூர்(5) | திருப்பூர், பல்லடம், காங்கேயம்I, காங்கேயம்–II, வெள்ளக்கோயில் |

2023–24–ஆம் ஆண்டில் 40.17 இலட்சம் குவிண்டால் உணவுப்பொருட்கள் தரம்பிரிப்பு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் அரசுக்கு ஆய்வுக் கட்டணமாக ரூ. 99.43 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. இத்திட்டம் 2024–25–ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5.2.11 அனைத்துக் கிராமப் பஞ்சாயத்துகளிலும் வேளாண் வர்த்தக மேம்பாட்டிற்கான விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்**

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கு தேவையான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்துதல், தரம் பிரித்தல்,

மதிப்புக்கூட்டுதல், அக்மார்க் தரச்சான்று, ஏற்றுமதி வழிமுறைகள் போன்றவை குறித்த விழிப்புணர்வு முகாம்கள் இந்த நிதியாண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் 2 கிராமங்கள் வீதம் மாதம் ஒன்றிற்கு 770 தீவிர விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு இரண்டாண்டுகளில் அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

### 5.2.12 வேளாண் கண்காட்சிகள்:

2024-25-ஆம் ஆண்டில் மூன்று மாவட்டங்களில் தமிழ்நாடு அரசுத்துறைகள், வேளாண்மை / கால்நடை / மீன்வளப் பல்கலைக் கழகங்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி மையங்கள், விளைபொருட்கள் வாரியங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், விதை உற்பத்தியாளர்கள், நாற்றுக்கள் உற்பத்தி செய்பவர்கள், இடுபொருட்கள் உற்பத்தியாளர்கள், வேளாண் கருவிகள் தயாரிப்பாளர்கள், நுண்ணீர்ப்பாசன நிறுவனங்கள், வேளாண் இயந்திர நிறுவனங்கள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தனியார்

நிறுவனங்கள் போன்ற அனைவரும் பங்கேற்கும் வேளாண் கண்காட்சிகள் ரூ.9 கோடி மதிப்பீட்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.2.13 துறைப் பணியாளர்கள் விவரம்

இத்துறையில் 1,343 துறைப் பணியாளர்கள், 1,675 விற்பனைக்குழுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**அட்டவணை: 5.8– துறைப் பணியாளர்கள் விவரம்**

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 1 |
| 2 | வேளாண்மை இணை இயக்குநர் | 2 |
| 3 | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) | 37 |
| 4 | வேளாண்மை உதவி இயக்குநர் | 5 |
| 5 | வேளாண்மை அலுவலர் | 170 |
| 6 | துணை வேளாண்மை அலுவலர் | 47 |
| 7 | உதவி வேளாண்மை அலுவலர் | 627 |
| 8 | ஆட்சி அலுவலர் | 1 |
| 9 | உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 10 | இதர பணியாளர்கள் | 452 |
| | மொத்தம் | **1,343** |

**அட்டவணை: 5.9– விற்பனைக்குழு பணியாளர்கள் விவரம்**

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முதுநிலை செயலாளர் / வேளாண்மை துணை இயக்குநர் | 2 |
| 2 | முதுநிலை செயலாளர் | 2 |
| 3 | செயலாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் | 11 |
| 4 | செயலாளர் | 11 |
| 5 | கண்காணிப்பாளர் | 202 |
| 6 | பொறியியல் மேற்பார்வையாளர் | 9 |
| 7 | மேற்பார்வையாளர் | 346 |
| 8 | இதர பணியாளர்கள் | 1,092 |
| | மொத்தம் | **1,675** |

## 5.3. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் 1970ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பின்பு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987–இன்படி சட்டப்பூர்வ வாரியமாக திருத்தி அமைக்கப்பட்டு, வேளாண் விற்பனை குழுக்களின் செயல்பாடுகளை முறைப்படுத்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

### 5.3.1. நிதி ஆதாரம்

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987–இன்படி, விற்பனைக் குழுக்கள் வசூலிக்கும் உரிமக்கட்டணம், சந்தைக் கட்டணத் தொகையிலிருந்து 15 சதவீதம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கு பங்குத் தொகையாக பெறப்பட்டு சந்தை மேம்பாட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 5.3.2. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் செயல்பாடுகள்

### 5.3.2.1. திறன் மேம்பாட்டுப் பயிற்சி

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் மாநில அளவிலான பயிற்சி மையம், சேலம் மாவட்டம் உத்தமசோழபுரத்தில் செயல்பட்டு வருகிறது. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்கள், பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும், விவசாயிகளுக்கு உணவு பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல், வேளாண் சந்தை

விரிவாக்கம், மின்னணு சந்தை தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

2023–24–ஆம் ஆண்டில் ரூ.17.86 இலட்சம் செலவில் 722 தொழில்நுட்ப அலுவலர்கள், விவசாயிகள், ஊரக இளைஞர்கள் பயன்பெறும் வகையில் 32 பயிற்சிகள் நடத்தப்பட்டன. 2024–25–ஆம் ஆண்டில் இப்பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

### 5.3.2.2. கட்டுமானப் பணிகள் / பராமரிப்புப் பணிகள்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிப்பணிகள், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் சார்ந்த கட்டமைப்புகளை உருவாக்கி அவற்றைப் பராமரிக்கும் வகையில் வாரியத்தில் பொறியியல் பிரிவு செயல்பட்டு வருகின்றது.

இப்பிரிவின் மூலம், 2023–24–ஆம் ஆண்டில் ரூ.264.96 கோடி மதிப்பிலான கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டன. 2024–25–ஆம் ஆண்டிலும் இத்திட்டப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**5.3.2.3. பன்னாட்டு மலர்கள் ஏல மையம்**

தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத்தின் கட்டுப்பாட்டில் விநியோகத் தொடர் மேலாண்மை முதற்கட்ட நிதியின் மூலம் ரூ.20.20 கோடி மதிப்பீட்டில் பன்னாட்டு மலர்கள் ஏல மையம் 7.56 ஏக்கர் நிலப்பரப்பில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றது.

இந்த ஏல மையத்தில், பூக்கள் சர்வதேச தரத்திற்கு மதிப்பாய்வு செய்யப்பட்டு, இணையதளம் மூலம் ஏலம் விடப்படுகின்றன.

இதுவரை 38,907 மலர்க்கொத்துகள், 7.30 இலட்சம் தண்டுகள் ஆகியன ரூ.36.70 இலட்சம் மதிப்பில் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

**5.3.2.4 வேளாண் சந்தைப்படுத்துதல் சேவைகளை மின்னணுமயமாக்குதல்**

விவசாயிகளும், வணிகர்களும் எளிமையான முறையில் விளைபொருட்களை வணிகம் செய்ய ஏதுவாக கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகளை இணையவழியில் பதிவு செய்யவும், வணிகர்களுக்கு உரிமம் வழங்கவும் மென்பொருள் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரும் பணிகள்

நடைபெற்று வருகின்றன. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வணிக செயல்பாடுகளை கண்காணிக்கவும், அவர்தம் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்யவும் முறையே, MIS, இ–வணிக தளம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) மூலமாக உருவாக்கப்பட்டு வருகின்றன.

வட்டார அளவிலுள்ள விவசாயிகளுக்கான வாட்சாப் (Whatsapp) குழுக்களுடன், வர்த்தகர்களுக்கான வாட்சாப் குழுக்களையும் இணைத்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வாயிலாக வர்த்தகம் மேற்கொள்ளும் பணி நடைபெற்றுவருகிறது.

### 5.3.2.5. உழவர் அங்காடி

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மூலம் தமிழ்நாட்டிலுள்ள முக்கிய மாநகராட்சிகள், நகராட்சிகளில் 100 உழவர் அங்காடிகள் அமைத்து, அதன் மூலம் விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்புகளை எளிதாக்கவும், நுகர்வோருக்கு தரமான உணவு கிடைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விவசாயிகள், உழவர் ஆர்வலர் குழுக்கள் போன்றோர்களிடமிருந்து பாரம்பரிய அரிசி வகைகள், சிறுதானிய வகைகள், சமையல் எண்ணெய், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் போன்றவற்றினை நேரடியாகக் கொள்முதல் செய்தும், விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்களை கொள்முதல் செய்தும் உழவர் அங்காடிகள் மூலம் நகர்ப்புர நுகர்வோருக்கு விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.3.2.6. விலை ஆதரவுத் திட்டம்

அறுவடைக் காலத்தில் ஏற்படும் சந்தை விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் குறைந்தபட்ச ஆதரவு விலையில் (Minimum Support Price) பயறு வகைகள் (உளுந்து, பச்சைப்பயறு), கொப்பரை ஆகியவற்றைக் கொள்முதல் செய்திட "விலை ஆதரவுத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து (2017–18) 2023–24–ஆம் ஆண்டு வரை 1.02 இலட்சம் விவசாயிகளிடமிருந்து மொத்தம் ரூ.1,440 கோடி மதிப்பிலான 23,491 மெட்ரிக் டன் பயறு

வகைகள், 1.19 இலட்சம் மெட்ரிக் டன் கொப்பரை ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

விலை ஆதரவுத் திட்டம் 2024–ஆம் ஆண்டில், 90,300 மெட்ரிக் டன் கொப்பரையும், 2023–24 இராபி பருவத்தில் 1.43 இலட்சம் மெட்ரிக் டன் உளுந்தும், 7,140 மெட்ரிக் டன் பச்சைப்பயறும் கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது.

### 5.3.2.7 வேளாண் ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள்:

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி அளவை அதிகரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

#### 5.3.2.7.1 வேளாண் ஏற்றுமதி தொடர்பான கருத்தரங்குகள் :

2023–24–ஆம் ஆண்டில் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPO), வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள் ஆகியோருக்கு ஏற்றுமதி ஊக்குவிப்பு அமைப்புகள், வல்லுநர்கள், ஏற்றுமதி நிறுவனப் பயிற்சியாளர்களுடன் இணைந்து வேளாண் ஏற்றுமதி தொடர்பான கருத்தரங்குகள்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தால் நடத்தப்பட்டன.

### 5.3.2.7.2 புவிசார் குறியீடு பெறுதல்:

புவிசார் குறியீடு பெறப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதால் அவற்றின் தேவை, ஏற்றுமதி அளவு ஆகியவை அதிகரிப்பதைக் கருத்தில் கொண்டு மாநிலத்தின் தனித்துவமான வேளாண் விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2022-23-ஆம் ஆண்டில் சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலா, பண்ருட்டி முந்திரி, சாத்தூர் சம்பா மிளகாய் உள்ளிட்ட 10 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கப்பட்டு, சோழவந்தான் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. மற்ற பொருட்களுக்கு புவிசார் குறியீடு விரைவில் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2023-24-ஆம் ஆண்டில், கிருஷ்ணகிரி அரசம்பட்டி தென்னை, கிருஷ்ணகிரி பன்னீர் ரோஜா, தஞ்சாவூர் பேராவூரணி தென்னை உள்ளிட்ட

15 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

2024-25-ஆம் ஆண்டில் சத்தியமங்கலம் செவ்வாழை (ஈரோடு), கொல்லிமலை மிளகு (நாமக்கல்), மீனம்பூர் சீரக சம்பா (இராணிப்பேட்டை) போன்ற 10 பொருட்களுக்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புவிசார் குறியீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**5.3.2.7.3. சுவைதாளிதப் பொருட்களை விளைவிக்கும் விவசாயிகளுக்கு ஏற்றுமதி தொடர்பான பயிற்சி, உற்பத்தியாளர்கள்– வர்த்தகர்கள் இணைப்பு**

சுவைதாளிதப் பொருட்களை விளைவிக்கும் விவசாயிகள் / உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தொழில்முனைவோர்களுக்கு நறுமணப்பொருட்கள் வாரியம் (Spices Board), வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (DGFT), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) போன்ற அமைப்புகளின் மூலம் வேளாண் ஏற்றுமதி நடைமுறைகள் குறித்த சிறப்புப் பயிற்சிகளை

கோயம்புத்தூரிலும், மதுரையிலும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் வாயிலாக 200 விவசாயிகள்/ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்/ வர்த்தகர்கள்/ ஏற்றுமதியாளர்கள் பயனடைவர்.

**5.3.2.7.4. ஏற்றுமதி தொடர்பான சான்றிதழ்கள் பெற வழிவகை செய்தல்**

மா, தென்னை, சிறுதானியங்கள், முருங்கை, மஞ்சள், சின்ன வெங்காயம், வெள்ளரி போன்றவற்றை சாகுபடி செய்யும், ஏற்றுமதியில் ஆர்வமுள்ள விவசாயிகள்/ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் இறக்குமதி – ஏற்றுமதி குறியீடு (IEC) பதிவு, உறுப்பினர் சான்றிதழ் (RCMC) / டிஜிட்டல் கையொப்பம் (Digital signature) / FSSAI உரிமம் (License) போன்ற சான்றிதழ்களைப் பெற ஏதுவாக ஒரு விவசாயி/உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு அதிகபட்சமாக ரூ.15,000/– வீதம் 100 பயனாளிகள் பயன்பெறும் வகையில் வழங்க ரூ.15 இலட்சம் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.3.2.7.5 உணவுப் பூங்காக்கள் அமைத்தல்:**

உணவுப்பொருட்கள் வீணாவதை குறைத்தல், பண்ணைப்பொருட்களை மதிப்புக் கூட்டல் போன்ற

செயல்பாடுகளால் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் உணவுப் பூங்காக்கள் செயல்படுத்தப்படுகின்றன.

i) **திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் 50 ஏக்கரில் பெரிய அளவிலான உணவுப் பூங்கா ரூ. 77 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு** தொழில் முனைவோர்களால் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்கும் விதமாக, இவ்வுணவுப் பூங்காவில் தொழில்மனைகள் ஏற்படுத்தப்பட்டு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

ii) கடலூர், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், மதுரை ஆகிய ஏழு இடங்களில் ரூ.191.88 கோடி மதிப்பீட்டில் தலா 10 ஏக்கரில் அடிப்படை, பொது கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய சிறிய உணவுப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்பூங்காக்களில் தொழில் மனைகள் ஏற்படுத்தப்பட்டு உணவு பதப்படுத்தும் முதலீட்டாளர்களுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 6. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

வேளாண்மையில் புதிய நுட்பங்களைப் புகுத்திட வேளாண் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய பணிகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகின்றது. வேளாண்மையில் மனித வளமேம்பாடு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு, மேம்பட்ட உற்பத்தியை அடைவது, விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு போன்றவற்றிற்கு வேளாண்மைக் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள் ஆகியவற்றின் மூலமும் கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு 2023-24-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.586 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. நடப்பு 2024-25-ஆம் ஆண்டில் ரூ.705 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 6.1 வேளாண்மைக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 14 இளநிலை, 33 முதுநிலை, 28 முனைவர் பட்டப் படிப்புகளை 18 உறுப்பு வேளாண்மைக் கல்லூரிகள் வாயிலாக வழங்கி வருகின்றது. அதுமட்டுமல்லாது

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் பட்டயப்படிப்பினை நான்கு உறுப்பு (பட்டயப்படிப்பு) நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. திறந்தவெளி, தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக வேளாண்மை, வேளாண் சார்ந்த பிரிவுகளில் 41 சான்றிதழ் பாடங்களும், ஆறு இணையவழி சான்றிதழ் பாடங்களும், ஒரு இடுபொருட்கள் விற்பனையாளர்களுக்கான பட்டயப்படிப்பும், ஒரு சிறப்புச் சான்றிதழ் பாடமும், 12 பிற பட்டயப்படிப்புகளும் வழங்கப்படுகின்றன.

இளநிலை பட்டப்படிப்பிற்காக 2011–12–ஆம் ஆண்டில் பெறப்பட்ட 9,652 விண்ணப்பங்களைவிட 2023–24–ஆம் ஆண்டில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 41,434 ஆக பன்மடங்கு உயர்ந்துள்ளது.

**அட்டவணை: 6.1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கை (2023–24)**

| படிப்பு விபரம் | சேர்க்கை |
|---|---|
| இளநிலை (Under Graduate) | 5,458 |
| முதுநிலை (Post Graduate) | 387 |
| **முனைவர்** (Doctorate) | 146 |
| பட்டயப்படிப்பு (Diploma) | 504 |
| திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி (ODL) | 1,221 |
| **மொத்தம்** | **7,716** |

### 6.1.1 புதுமைப் பெண் திட்டம்

அரசுப் பள்ளிகளில் (6 முதல் 12 ஆம் வகுப்பு வரை) கற்கும் மாணவிகளின் உயர்கல்விச் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தின் (**புதுமைப்பெண் திட்டம்**) மூலம் அவர்களின் மேற்படிப்பிற்கு உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ.1,000/- வழங்கப்படுகிறது. 2023-24ஆம் கல்வியாண்டில் இளமறிவியல் வேளாண், வேளாண் சார்ந்த படிப்புகளைப் பயிலும் உறுப்புக் கல்லூரிகளைச் சார்ந்த 198 மாணவிகளுக்கும், இணைப்புக் கல்லூரிகளில் பயிலும் 313 மாணவிகளுக்கும், பட்டயப்படிப்பில் பயிலும் 23 மாணவிகளுக்கும் இவ்வுதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

### 6.1.2 மாணவர்களுக்கான கல்வி உதவி

2023-24-ஆம் கல்வியாண்டிற்கான சமுதாயம் சார்ந்த கல்வி நிதிகளுக்காக இளநிலை மாணவர்களின் விண்ணப்பங்கள் (பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர், பழங்குடியினர்) மாணவர்களுக்கான சமூக கல்வி

உதவித் தொகை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

2023-24-ஆம் கல்வியாண்டில் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் 384 மாணவர்கள் சேர்க்கை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

### 6.1.3 கட்டமைப்பு வசதிகள்

2021-22-ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம் பையூரில் (ஜீனூருக்குப் பதில்) புதிய தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், கரூர் மாவட்டம் கரூர், நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு ஆகிய இடங்களில் மூன்று வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களும் தொடங்கப்பட்டன. பையூர் தோட்டக்கலைக் கல்லூரிக்கு ரூ. 2.51 கோடியும், மூன்று வேளாண்மைக் கல்லூரிகளுக்கு மொத்தம் ரூ.8 கோடியும் வழங்கப்பட்டு அடிப்படைக் கட்டமைப்புகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 6.1.4 மாணவர் நலம், வேலை வாய்ப்பு ஆலோசனை மையம்

ஆற்றல் மிக்க மாணவர்களை உருவாக்கி இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதை நோக்கமாகக் கொண்டு மாணவர் நலம், வேலைவாய்ப்பு ஆலோசனை மையம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகின்றது. இம்மையத்தில், மாணவர்களை ஊக்குவிக்கும் உரைகள், பயிற்சி வகுப்புகள், மாதிரி குழு கலந்துரையாடல்கள், பயிற்சி நேர்காணல் தேர்வுகள், தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் போன்றவை நடத்தப்படுகின்றன.

2023-24ஆம் ஆண்டில் 221 மாணவர்கள் வேளாண் தொழில் நிறுவனங்கள், வங்கிகள், உணவு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், விதை, உர நிறுவனங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 6.2 வேளாண்மை ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 18 உறுப்புக் கல்லூரிகள், 42

வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள பயிர்களுக்கேற்ற ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஆய்வுகளுக்குத் தேவையான நிதி மாநில அரசு, பன்னாட்டு நிதி வழங்கும் நிறுவனங்கள், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகத்தின் வாயிலாகப் பெறப்படுகின்றன.

2023–24ஆம் ஆண்டில் தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளத்தில் உள்ள வ.உ.சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் குட்டைப்பனை இரகங்களின் ஆராய்ச்சி, மேம்பாடு, மதிப்புக்கூட்டப்பட்ட பனை பொருட்களின் வளர்ச்சிக்காக புதிய பனை ஆராய்ச்சி நிலையம் அமைக்க ரூ.15 கோடியும், அதே நிறுவனத்தில் வாழை சாகுபடியை மேம்படுத்த, வாழை ஆராய்ச்சி மையம் அமைக்க ரூ.15 கோடியும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்த பூச்சிகளைக் கண்டறிந்து அத்தகவல்களை மின்னணு மயமாக்குவதற்காக பூச்சி அருங்காட்சியகத்திற்கு ரூ.3 கோடியும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவரவியல் பூங்காவில் சிறப்பு வகைத் தோட்டங்களை உருவாக்குதல், பலப்படுத்துதல், நிறுவுதல் ஆகியவற்றிற்காக ரூ. 5 கோடியும் நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024-25-ஆம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்களுக்கு வேளாண் இடுபொருட்களைத் துல்லியமாகத் தெளிக்கச் செய்வதற்கான ட்ரோன் தெளிக்கும் தொழில்நுட்பம், நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற சர்க்கரை சத்து குறைந்த நெல் இரகங்களை உருவாக்குதல், மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு, வெங்காய சாகுபடியினை இயந்திரமயமாக்குவதற்கான சாத்தியக்கூறு சோதனை, இயந்திரங்கள் உற்பத்தி, செயல்விளக்கங்கள், நிலசம்பங்கி, செவ்வந்தி, ரோஜாவில் புதிய இரகங்களுக்கான ஆராய்ச்சி ஆகிய ஆராய்ச்சித் திட்டங்களுக்காக, ரூ.5.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.2.1 வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கிராம அளவிலான மத்தியகால வானிலை முன்னறிவிப்பினை மூன்று சதுர கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒவ்வொரு மணி நேர கால இடைவெளியில் அடுத்த ஆறு நாட்களுக்கான

வேளாண் முன்னறிவிப்பாக வழங்கி வருகின்றது. இந்த வானிலை விபரங்களை http://aas.tnau.ac.in/vlf என்னும் இணைய தளத்தில் அனைவரும் தெரிந்து கொள்ளலாம். இந்த வானிலை முன்னறிவிப்பின் துல்லியம் சராசரியாக 70 – 80 சதவீதமாகும். இக்கிராம அளவிலான முன்னறிப்பின் மூலம் கன மழை, புயல், அதிக வெப்பம் போன்ற அசாதாரண வானிலை விவரங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். தற்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கிராம அளவிலான மத்தியகால வானிலை முன்னறிவிப்பை மின் தேவையினைக் கணக்கீடு செய்வதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கி வருகிறது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் மே மாத இறுதி வாரத்தில் தென்மேற்குப் பருவமழைக்கும், செப்டம்பர் மாத இறுதி வாரத்தில் வடகிழக்குப் பருவமழைக்கும் நீண்டகால மழை முன்னறிவிப்பை வழங்கி உழவர்களின் பயிர் சாகுபடி திட்டமிடலுக்கும், அரசின் திட்ட வல்லுநர்களுக்கும் பயனுடையதாக உள்ளது. மேலும், இந்திய வானிலைத் துறையுடன் இணைந்து ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வெள்ளி ஆகிய இரு தினங்களில் தமிழ்நாட்டில் 12.95 இலட்சம் உழவர்களுக்கு வேளாண் அறிவுரைகள் குறுந்தகவலாக வழங்கப்பட்டு வருகிறது. 2023–24–ஆம், ஆண்டில்

மட்டும் வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை மற்றும் பறவைகளுக்கான 780 முன்னறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.2.2 விலை முன்னறிவிப்பு, சந்தை நுண் தகவல்

விலை முன்னறிவிப்பு திட்டமானது, வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி மையத்தின் (CARDS) உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தினால் (DEMIC) தமிழ்நாடு–பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் (TN–IAMP) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. DEMIC மக்காச்சோளம், உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை, எள், கொப்பரை, வாழை, தக்காளி, கத்தரி, வெண்டை, சின்ன வெங்காயம், பருத்தி, வரமிளகாய், தேங்காய் போன்ற 14 முக்கியப் பயிர்களுக்கான விலை முன்னறிவிப்புகளை உழவர்களுக்கு இலவசமாக வழங்குகின்றது. இந்த விலை முன்னறிவிப்பு, சந்தை ஆலோசனைகள், விதைப்பதற்கு முன்பும், அறுவடைக்கு முன்பும், அச்சுப்பிரதி, மின்னணு ஊடகங்கள் வழியாக சரியான நேரத்தில் உழவர்களுக்கு விதைப்பு, சேமிப்பு, விற்பனை போன்றவற்றில் முக்கிய முடிவுகளை எடுக்க உதவுகின்றது. 2023–24ஆம் ஆண்டில், விதைப்பு குறித்த 13 சந்தை ஆலோசனைகளையும்,

அறுவடைக்கு முந்தைய 14 ஆலோசனைகளையும் இத்தகவல் மையம் வழங்கியுள்ளது.

### 6.2.3 ஆராய்ச்சி வெளியீடுகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து கடந்த 2023-24ஆம் ஆண்டில் 750 ஆராய்ச்சிக் கட்டுரைகள், சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி இதழ்களில் (Scopus Index Journals) வெளியிடப்பட்டுள்ளன.

### 6.2.4 வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து 2023-24ஆம் ஆண்டில் வேளாண்மை, தோட்டக்கலைப் பயிர்கள் உள்ளடக்கிய சுமார் 20 புதிய இரகங்கள் தமிழ்நாடு அரசின் மாநில பயிர் இரகங்கள் வெளியீட்டுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, உழவர்களின் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டுள்ளன.

## அட்டவணை 6.2. 2023–24ஆம் ஆண்டில் புதியதாக வெளியிடப்பட்ட பயிர் இரகங்கள்

| வ. எண். | பயிர், இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 1. | நெல் – கோஆர்எச் 5 | 120–125 நாட்கள் | • மகசூல்: 6,467 கிலோ/எக்டர்<br>• பருவம்: பின் சம்பா, தாளடி |
| 2. | நெல் – கோ 58 | 120–125 நாட்கள் | • பாசுமதி அல்லாத வாசனை கொண்ட நீள் சன்ன இரகம்<br>• மகசூல்: 5,858 கிலோ/எக்டர்<br>• பருவம்: பின் சம்பா / தாளடி |
| 3. | மக்காச் சோளம் விஜிஐ எச்(எம்) 2 | 95–100 நாட்கள் | • மகசூல்: மானாவாரியில் 6,300 கிலோ/எக்டர் |
| 4. | இனிப்புச் சோளம் – கோ (எஸ்எஸ்) 33 | 110–115 நாட்கள் | • மகசூல்:<br>தானியம்: 2,500 கிலோ/எக்டர்<br>பசுந்தீவனம்:42,000 கிலோ/எக்டர்<br>சாறு: 15,133 லி/எக்டர்<br>• எத்தனால் உற்பத்தித் திறன்: 1,127 லி/எக்டர் |
| 5. | சோளம் – கோ 34 | 100–105 நாட்கள் | • மகசூல் (மானாவாரி):<br>தானியம்: 2,765 கிலோ/எக்டர்<br>உலர் தீவனம்: 9,480 கிலோ/எக்டர் |
| 6. | தினை – ஏடிஎல் 2 | 80–85 நாட்கள் | • மகசூல்:<br>தானியம்: 2,174 கிலோ/எக்டர்<br>தட்டை: 2,688 கிலோ/எக்டர் |
| 7. | பாசிப்பயறு – விபிஎன் 7 | 65–70 நாட்கள் | • மகசூல்: 900 கிலோ/எக்டர் |

| வ. எண். | பயிர், இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 8. | நிலக்கடலை – கோ 8 | 110–115 நாட்கள் | • மகசூல்: ஆடிப்பட்டம்: 2,527 கிலோ/எக்டர் கார்த்திகை–மார்கழிப் பட்டம்: 2,343 கிலோ/எக்டர்<br>• அதிக எண்ணெய்ச் சத்து (51–52%), உடைப்புத்திறன் (69%) |
| 9. | பருத்தி – விபிடி 2 | 120–130 நாட்கள் | • சராசரி மகசூல்: 1,624 கிலோ/எக்டர்<br>• நீண்ட இழை பருத்தி (29.6 மிமீ) |
| 10. | தக்கைப் பூண்டு – டிஆர்ஒய் 1 | விதைத்த 45 நாட்களுக்கு பிறகு மடக்கி உழ வேண்டும் | • பசுந்தாள் மகசூல்: 17.86 டன்/எக்டர் |
| 11. | திராட்சை – ஜிஆர்எஸ் (எம்எச்) 1 | கவாத்து செய்ததிலிருந்து 120–130 நாட்களில் அறுவடை | • பழ மகசூல்: 41 டன்/எக்டர்/ஆண்டு<br>• குளிர்காலத்தில் கவாத்து செய்யும் பொழுது அதிக இனிப்புத் தன்மை (24–26° பிரிக்ஸ்) |
| 12. | பலா – பிகேஎம் 2 | பல்லாண்டுப் பயிர் | • மகசூல் – 175.6 டன்/எக்டர்/ஆண்டு<br>• நடுத்தர அளவுள்ள பழங்கள் (11.46 கிலோ)<br>• அதிக இனிப்புத் தன்மை (30.8° பிரிக்ஸ்) |
| 13. | வாழை – காவிரி காஞ்சன் | 305–320 நாட்கள் | • புரோ வைட்டமின் ஏ செறிவூட்டப்பட்ட இரகம்<br>• 30–40 மடங்கு வைட்டமின் ஏ சத்து மிகுந்தது (2.4 மி.கி/100 கி) |

| வ. எண். | பயிர், இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 14. | கத்தரி – கோ 3 | 140–150 நாட்கள் | • மகசூல்: 48.5 டன்/எக்டர் |
| 15. | கொத்தவரை– எம்டியு 2 | 75 நாட்கள் | • மகசூல்: 14 டன்/எக்டர்<br>• செடிக்கு 115 – 125 காய்கள் |
| 16. | வெள்ளை தண்டுக்கீரை – பிஎல்ஆர் *2* | 50 நாட்கள் | • மகசூல்: 43 டன்/எக்டர்<br>• அதிக β கரோட்டினாய்டு சத்து (8 மிகி / 100கி) |
| 17. | சிவப்புக் கீரை – கோ *6* | 30–35 நாட்கள் | • மகசூல்: 12.6 டன்/எக்டர்<br>• அதிக ஆந்தோசயனின் நிறமியுள்ளது (0.653 மிகி/100கி) |
| 18. | பல்லாண்டு முருங்கை – பிகேஎம் 3 | 10–15 ஆண்டுகள் | • மகசூல்: 68.7 டன்/எக்டர்/ஆண்டு<br>• நடுத்தர நீளமான காய்கள் (47–55 செ.மீ) |
| 19. | சிவப்பு புளி – பிகேஎம் 2 | பல்லாண்டுப் பயிர் | • மகசூல்: 217 கிலோ/மரம்/ஆண்டு (21.78 டன்/எக்டர்)<br>• அதிக அளவு ஆண்டி–ஆக்ஸிடன்ட்ஸ் (1,614 மைக்ரோகிராம்/ கிராம்),, ஆந்தோசயனின் (234 மிகி/கி), குறைந்த அளவு டார்டாரிக் அமிலம் (14.50%) |
| 20. | தென்னை – விபிஎம் 6 | பல்லாண்டுப் பயிர் | • மகசூல்: 120 – 173 காய்கள்/ஆண்டு/மரம்<br>• கொப்பரை மகசூல்: 18 கிலோ/ ஆண்டு/மரம்<br>• அதிக எண்ணெய்த்திறன் (67.94%) |

### 6.3 வேளாண் விரிவாக்கக் கல்வி

விரிவாக்கக் கல்வி இயக்குநரகம், சமூக வானொலி நிலையம், 15 வேளாண்மை அறிவியல் நிலையங்கள், 18 கல்லூரிகள், வேளாண் தொழில்நுட்ப இணையதளம், கிசான் கால் சென்டர், 42 ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றின் வாயிலாக மாநில வளர்ச்சித் துறைகளின் ஒருங்கிணைப்புடன் விரிவாக்கக் கல்வி இயக்குநரகம் பின்வரும் முன்னணி வேளாண் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2023ஆம் ஆண்டில், மாநிலத்தில் வேளாண் விரிவாக்க சேவைகளை வலுப்படுத்துவதற்காக, வட்டார அளவில் 389 வேளாண் விஞ்ஞானிகளை வட்டாரத்திற்கு ஒரு விஞ்ஞானி என்ற முறையில் நியமித்து செயல்பட்டு வருகிறது.

உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் (FPOs) திறனை மேம்படுத்திடவும், சிறு, குறு விவசாயிகளின் மேம்பாட்டிற்காகவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் – ஒரு அலகு (TFL) – ஒரு FPO திட்டம் 2023-24ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதுவரை 112 உழவர்

உற்பத்தியாளர் அமைப்புகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக 15 வேளாண்மை அறிவியல் நிலையங்களில் வேளாண்மை தொழில்நுட்பம், முதல் நிலை செயல் விளக்கத்திடல்கள், பண்ணை வழி ஆய்வுகள், விரிவாக்க செயல்பாடுகள், பயிற்சிகள் போன்றவை நடத்தப்பட்டன. அவைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.3. வேளாண் அறிவியல் நிலையங்களின் நிகழ்ச்சிகள் (2023–24)**

| வ. எண் | நிகழ்ச்சியின் விபரம் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பயனடைந்த உழவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | வயல் வெளி விழா | 179 | 1,027 |
| 2. | முதல் நிலை செயல்விளக்கம் | 339 | 3,390 |
| 3. | பயிற்சிகள் | 1,160 | 41,805 |
| 4. | தொழிற் பயிற்சிகள் | 47 | 1,771 |
| 5. | நிதியுதவி அளித்த பயிற்சிகள் | 162 | 5,171 |
| 6. | கண்காட்சி / உழவர் தினம் / வயல் விழா / மேளா / சிறப்பு நிகழ்ச்சிகள் | 9,059 | 10,33,963 |
| | **மொத்தம்** | **10,946** | **10,87,127** |

### 6.3.1 பயிற்சிகள்

வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்குநரகத்தின் பயிற்சிப் பிரிவின் மூலமாக வேளாண் விரிவாக்க அலுவலர்கள், உழவர்கள், வளர்ச்சித் துறை அலுவலர்கள் பயனடையும் வகையில் ஆறு கட்டமாகப் பயிற்சிகள் நடத்தப்பட்டு 242 அலுவலர்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

துணை ஆட்சியர், கூட்டுறவு இணைப் பதிவாளர்கள் ஆகியோருக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பங்கள், வசதிகள் பற்றிய ஐந்து பயிற்சிகள் நடத்தப்பட்டு 44 அலுவலர்கள் பயனடைந்துள்ளனர்.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை(ATMA), பிற சகோதரத் துறைகளின்கீழ் நடத்தப்பட்ட பயிற்சிகள், கண்டுணர்வு பயணம் ஆகியவற்றின் மூலம் 5,453 உழவர்கள் பயனடைந்தனர். ஏறத்தாழ 866 மாணவர்களுக்கு இயக்குநரகத்தின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன.

### 6.3.2 கல்வி ஊடக மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்வி ஊடக மையம் 2023-24 ஆம் ஆண்டில்

63 வேளாண் வீடியோ நிகழ்ச்சிகளைத் தயாரித்துள்ளது. உழவர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தொலைக்காட்சி YouTube சேனலில் 108 வீடியோ நிகழ்ச்சிகள் பதிவேற்றம் செய்யப்பட்டன. 36 இலட்சத்திற்கு மேற்பட்ட பயனாளிகள் நிகழ்ச்சிகளைப் பார்த்து பயன்பெற்றுள்ளனர்

### 6.3.3 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் தொழில்நுட்ப இணையதளம் (http://agritech.tnau.ac.in) தமிழ், ஆங்கிலத்தில் சுமார் 12 இலட்சம் பக்கங்களைக் கொண்டுள்ளது. ஒரு நாளைக்கு சராசரியாக 4,032 நபர்களும், வருடத்திற்கு 14.71 இலட்சம் நபர்களும் இந்த இணையதளத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

### 6.3.4 உழவர் அழைப்பு மையம் (கிசான் கால் சென்டர்)

விவசாயிகள், உழவர் அழைப்பு மையத்தை 1800– 180–1551 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு வட்டார மொழியில் வல்லுநர்களுடன்

தொலைபேசியில் கலந்துரையாடலாம். அனைத்து வேலை நாட்களிலும் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை செயல்படும் இம்மையத்தில் 2023–24ஆம் ஆண்டில், மொத்தம் 95,605 தொலைபேசி அழைப்புகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.3.5 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக சமுதாய வானொலி நிலையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சமுதாய வானொலி நிலையம் 107.4 மெகா ஹெர்ட்ஸ் அலைவரிசையில் 2010ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளது. 2023–24–ஆம் ஆண்டில் 1,346 நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

### 6.4 விதை உற்பத்தி

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் 2023–24–ஆம் ஆண்டில், 194.06 மெட்ரிக் டன் வல்லுநர் விதைகளும், 525.7 மெட்ரிக் டன் ஆதார விதைகளும், 128.7 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகளும், 330.7 மெட்ரிக் டன் உண்மை நிலை விதைகளும்

உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன. மேலும், 15.70 இலட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன.

## 6.5 வேளாண் வணிக மேம்பாடு

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகத்தில், வேளாண் வணிகக் காப்பகம், தொழில் நுட்பம், வீரிய ஒட்டு இரகம், இயந்திர வணிகமயமாக்கல், ஆலோசனை சேவைகள், முனைப்பு மூலதனத் திட்டம், மாணவர் தொழில் முனைவோர் திட்டம், வேளாண் மைய நிர்வாக மேம்பாட்டுத் திட்டம், நிறுவன மேம்பாட்டுத் திட்டம், உன்னத பாரத இயக்கம் 2.0 ஆகிய திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இயக்குநரகம், 306 உறுப்பினர்களைக் கொண்ட ஆறு வேளாண் வணிகக் கூட்டமைப்புகளையும், 86 பெண்கள் உட்பட 203 தொழில் முனைவோர்களையும் உருவாக்கியுள்ளது. மேலும், 1,329 வணிக ரீதியான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

## 6.6 விருதுகள்

2023-24ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் மக்காச்சோள படைப்புழுவுக்கான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைக்காகவும், கந்தகம், நுண்ணூட்டச்

சத்துக்கள் மீதான மண் வளத்தை வரைபடமாக்குதல் போன்ற சிறந்த ஆராய்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதற்காகவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 'SKOCH ஆர்டர் ஆஃப் மெரிட்' விருது வழங்கப்பட்டது.

2023–24ஆம் ஆண்டில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொழில்முனைவோர் கல்வியை ஊக்குவித்தமைக்காகச் 'சிறந்த தென்னிந்திய நிறுவனம்' என்ற விருதை சிறு, நடுத்தர மற்றும் குறு நிறுவனங்களின் வர்த்தக அமைச்சகம் வழங்கியது.

திருவண்ணாமலை மாவட்டம் அத்தியேந்தலில் இயங்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சிறுதானிய மகத்துவ மையம் 2023–24ஆம் ஆண்டிற்கான இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தால் வழங்கப்பட்ட சிறந்த சிறுதானிய மையத்திற்கான விருதினை பெற்றுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்படும் நுண்ணிய இரண்டாம் நிலை ஊட்டச்சத்துகள், மாசுபடுத்தும் கூறுகள் குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டம்,

2023–24ஆம் ஆண்டுக்கான இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால் (புதுதில்லி) வழங்கப்படும் சிறந்த நுண்ணூட்டச்சத்து மையத்திற்கான விருதினைப் பெற்றுள்ளது.

ஏத்தாப்பூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மரவள்ளிக்கிழங்கு, ஆமணக்கு ஆராய்ச்சி மையம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் 2023–24ஆம் ஆண்டிற்கான சிறந்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்ட மையம் என்னும் விருதை பெற்றுள்ளது.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் (ICAR– IIFSR) 2023–24ஆம் ஆண்டிற்கான உயிர்ம வேளாண்மை குறித்த அகில இந்திய நெட்வொர்க் திட்டத்திற்கான சிறந்த மையமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

**6.7. பணியாளர் விபரம்.**

**அட்டவணை: 6.4. பல்கலைக்கழக பணியாளர்களின் விபரம்**

| வ. எண் | பணியிடம் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1 | பேராசிரியர்கள் | 444 |
| 2 | இணைப் பேராசிரியர்கள் | 311 |
| 3 | உதவிப் பேராசிரியர்கள் | 262 |
| 4 | இதர துணை ஊழியர்கள் | 1,262 |
| | **மொத்தம்** | **2,279** |

## 7. விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை

விதை, பயிர் உற்பத்திக்கு ஒரு முக்கியமான இடுபொருள் ஆகும். பயிர் விளைச்சலை அதிகரிக்க விதையின் தரம் மிக முக்கியமான காரணியாகக் கருதப்படுகிறது. தரமான விதைகளைப் பயன்படுத்துவது அதிக உற்பத்திக்கு வழிவகுப்பதுடன் நாட்டின் உணவுப் பாதுகாப்பை அடையவும் பெரிதும் உதவுகிறது.

சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் நலனுக்காக தரமான விதைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யவும், உயிர்மச் சான்றளிப்பை ஊக்குவிக்கவும், இத்துறை பின்வரும் பிரிவுகளின் கீழ் பல்வேறு நடவடிக்கைகளைச் செயல்படுத்தி வருகிறது.

- விதைச் சான்றளிப்பு
- விதைத் தரக்கட்டுப்பாடு
- விதைப் பரிசோதனை
- பயிற்சி
- உயிர்மச் சான்றளிப்பு

### 7.1 விதைச் சான்றளிப்பு:

விதைச் சட்டம், 1966 மற்றும் விதை விதிகள், 1968 ஆகிய சட்ட அமலாக்கத்தின்படி விதைச் சான்றளிப்புப் பிரிவு செயல்படுகிறது. இது இந்திய குறைந்தபட்ச விதைச்சான்றுத் தரநிலைகளைப் பூர்த்தி செய்திடும் பொருட்டு அறிவிக்கப்பட்ட பயிர் இரகங்களில் விதைச் சான்றளிப்பு மேற்கொள்கிறது.

வல்லுநர் விதை ஆய்வுக் குழு மூலமாக வேளாண் ஆராய்ச்சி நிலையங்களில் வல்லுநர் விதை வயல்களில் தரங்களை ஆய்வு செய்து அரசு, தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு வல்லுநர் விதை வழங்கப்பட்டு வருகிறது.

விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையில் அரசு, தனியார் விதை உற்பத்தியாளர் மூலம் அமைக்கப்படும் விதைப் பண்ணைகளில் விதையின் ஆதாரம் கண்டறிதல், வயலாய்வு, சுத்திப்பணி, விதைத்தரங்கள் பரிசோதனை, சான்றட்டை பொருத்துதல் ஆகிய தொடர் பணிகளின் மூலம் தரமான சான்று விதைகள் விவசாயிகளுக்குக் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

விதைச் சான்றளிக்கும் திட்டத்தின் கீழ், 2023–24ஆம் ஆண்டில் 63,709 எக்டர் விதைப் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு, 1,35,819 மெட்ரிக் டன் விதைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.1: 2023–24 – விதைப் பண்ணை பதிவு செய்யப்பட்ட பரப்பு, சான்று செய்த விதையளவு**

| வ. எண் | விதைச் சான்று உதவி இயக்குநர் தலைமையிடம் | விதைப் பண்ணைப் பதிவு (எக்டர்) | சான்று செய்த விதையளவு (மெ.டன்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 1,232 | 1,336 |
| 2 | கடலூர் | 2,366 | 1,841 |
| 3 | தர்மபுரி | 1,237 | 768 |
| 4 | திண்டுக்கல் | 1,840 | 3,605 |
| 5 | ஈரோடு | 3,641 | 1,530 |
| 6 | காஞ்சிபுரம் | 1,469 | 2,612 |
| 7 | கன்னியாகுமரி | 201 | 262 |
| 8 | கரூர் | 456 | 302 |
| 9 | கிருஷ்ணகிரி | 1,169 | 751 |
| 10 | மதுரை | 1,778 | 6,276 |
| 11 | நாகப்பட்டினம் | 2,882 | 3,285 |
| 12 | நாமக்கல் | 1,079 | 2,464 |
| 13 | பெரம்பலூர் | 1,105 | 1,753 |
| 14 | புதுக்கோட்டை | 927 | 1,190 |
| 15 | ராமநாதபுரம் | 503 | 683 |
| 16 | சேலம் | 1,349 | 821 |
| 17 | சிவகங்கை | 416 | 520 |
| 18 | தஞ்சாவூர் | 8,828 | 2,525 |

| வ. எண் | விதைச் சான்று உதவி இயக்குநர் தலைமையிடம் | விதைப் பண்ணைப் பதிவு (எக்டர்) | சான்று செய்த விதையளவு (மெ.டன்) |
|---|---|---|---|
| 19 | தேனி | 947 | 2,814 |
| 20 | திருவள்ளூர் | 932 | 1,000 |
| 21 | திருவாரூர் | 7,931 | 2,436 |
| 22 | தூத்துக்குடி | 894 | 915 |
| 23 | திருநெல்வேலி | 2,816 | 5,450 |
| 24 | திருப்பூர் | 7,129 | 77,492 |
| 25 | திருவண்ணாமலை | 2,900 | 2,157 |
| 26 | திருச்சி | 1,302 | 2,567 |
| 27 | வேலூர் | 1,459 | 766 |
| 28 | விழுப்புரம் | 3,447 | 7,071 |
| 29 | விருதுநகர் | 1,472 | 628 |
| | மொத்தம் | 63,709 | 1,35,819 |

மேலும், தரமான வயலாய்வு மூலம் தரமான விதை உற்பத்திக்காக 2024–25ஆம் ஆண்டில் 70,000 எக்டர் விதைப் பண்ணைகளைப் பதிவு செய்யவும், 1,36,000 மெட்ரிக் டன் தரமான விதைகளுக்குச் சான்றளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.2 விதைத் தரக்கட்டுப்பாடு

நல் விதையே நல்ல விளைச்சலுக்கான ஆதாரம், இந்த நல்ல விதைகள் கிடைப்பதை உறுதி செய்வதே இந்தப் பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுவதை உறுதி செய்திட, விதைத் தரக்கட்டுப்பாடு பிரிவு, தற்பொழுது நடைமுறையில் உள்ள விதைச்சட்டங்களான விதைகள் சட்டம் 1966, விதைகள் விதிகள் 1968, விதைகள் (கட்டுப்பாடு) ஆணை, 1983, சுற்றுப்புறச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 ஆகியவற்றை அமல்படுத்தி தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிப்பதை உறுதி செய்கின்றது.

இத்துறையின் மூலம் 12,482 விதை விற்பனை நிலையங்களுக்கு விதைகள் (கட்டுப்பாடு) ஆணை, 1983–இன் படி, உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விதை விற்பனை நிலையங்கள் விதை ஆய்வாளர்களால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள விதைக் குவியல்களிலிருந்து விதை மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. அவ்வாறு எடுக்கப்படும் விதை மாதிரிகள் அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் பரிசோதனை செய்யப்படுகின்றன. பகுப்பாய்வு முடிவுகளின் அடிப்படையில் தரமற்ற விதைக் குவியல்களின் மீது

துறை / நீதிமன்றம் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

2023-24ஆம் ஆண்டில், 78,788 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 60,622 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. விதைப் பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்ட 1,894 தரமற்ற விதை மாதிரிகளில், 1,707 விதை மாதிரிகளுக்கு துறை நடவடிக்கை மூலமாகவும், 187 விதை மாதிரிகளுக்கு நீதிமன்றம் வாயிலாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தரம்குறைவு, பிற விதி மீறல்களுக்காக ரூ.25.37 கோடி மதிப்புள்ள 1,885 மெட்ரிக் டன் அளவிலான விதைகள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

2024-25ஆம் ஆண்டில் 79,000 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளவும், 70,000 விதை மாதிரிகளில் தரப்பரிசோதனை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆய்வு விதை மாதிரிகளின் விலை, மாதிரிகளின் தரத்தில் அதிக கவனம் செலுத்தவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 7.3 விதைப் பரிசோதனை:

இத்துறையின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட 34 விதைப் பரிசோதனை ஆய்வகங்கள் உள்ளன. விதைச் சான்றளிப்பு, விதை ஆய்வுப் பிரிவுகளில் இருந்து பெறப்படும் சான்று விதை, ஆய்வு விதை மாதிரிகள் மட்டும் அல்லாது விவசாயிகள், விதை விற்பனையாளர்கள், விதை உற்பத்தியாளர்கள் மூலம் அனுப்பப்படும் பணி விதை மாதிரிகள் ஆகிய மூன்று வகை விதை மாதிரிகளும் இந்திய குறைந்தபட்ச விதைச் சான்றளிப்புத் தரநிலைகளின் (IMSCS) அடிப்படையில் பரிசோதனை செய்யப்படுவதன் மூலம் தமிழ்நாட்டில் வேளாண்மையின் முதன்மை ஆதாரமான விதையின் தரம் உறுதி செய்யப்பட்டு வருகிறது.

**அட்டவணை 7.3: ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகள்– 2023–24:**

| வ. எண் | மாதிரிகளின் வகைகள் | இலக்கு (எண்கள்) | சாதனை (எண்கள்) |
|---|---|---|---|
| 1 | சான்று விதை மாதிரி | 28,500 | 28,889 |
| 2 | ஆய்வு விதை மாதிரி | 60,000 | 60,622 |
| 3 | பணி விதை மாதிரி | 26,500 | 27,022 |
| | **மொத்தம்** | **1,15,000** | **1,16,533** |

மேலும் 2024-25ஆம் ஆண்டில் 1,17,000 விதை மாதிரிகளை ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**7.3.1 பன்னாட்டு விதைப்பரிசோதனை குழும அங்கீகாரம் பெற்ற விதைப்பரிசோதனை நிலையம், கோவை (ISTA):**

கோவை விதைப்பரிசோதனை நிலையம் 2014ஆம் ஆண்டில் பன்னாட்டு விதைப் பரிசோதனைக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்ற ஆய்வகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. இப்பரிசோதனை நிலையம், தானியங்கள், பயறு வகைகள், காய்கறிகள் ஆகிய பயிர்களுக்கு விதைக்குவியல்களில் இருந்து மாதிரிகள் எடுக்கவும் அவற்றின் புறத்தூய்மை, பிற தானிய விதை, முளைப்புத் திறன், ஈரப்பதம் ஆகியவற்றைக் கண்டறியும் பரிசோதனைக்காக பன்னாட்டுக் குழுமத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே முதன் முறையாக பொதுத்துறை விதைப்பரிசோதனை நிலையங்களில், பன்னாட்டுக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்ற முதல் பரிசோதனை நிலையம் என்ற பெருமைக்குரியது. சர்வதேச தரத்திற்கு விதை மாதிரிகளை உறுதி செய்து ஆரஞ்சு

நிற விதைக் குவியல் சான்றிதழ், நீல நிற விதை மாதிரி சான்றிதழ் ஆகியவற்றை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கும் தகுதியை இந்த ஆய்வகம் பெற்றுள்ளது.

கோவை விதைப்பரிசோதனை நிலையத்தில் இதுவரை 93 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு சர்வதேச விதைச் சான்றிதழ்கள் தமிழ்நாட்டிலுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 7.3.2. மாநில டி.என்.ஏ கைரேகை ஆய்வகம் (DNA Fingerprinting Lab)

விதைக்குவியல்களின் இனத்தூய்மையை விரைவாகக் கண்டறிந்து உறுதிப்படுத்திட டி.என்.ஏ. மரபணு ஆய்வகம், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறையின் கட்டுப்பாட்டில் 2007–ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூரில் இயங்கி வருகிறது. பயிர் வளர்ப்பு முறையின் மூலம் இனத்தூய்மை பரிசோதனை முடிவை அறிவிக்க இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வரை தேவைப்படும். ஆனால், விவசாயிகளுக்குத் தரமான விதைகள் உரிய காலத்தில் கிடைக்கும் பொருட்டு 3

முதல் 5 நாட்களில் உயர் தொழில்நுட்பமான டி.என்.ஏ கைரேகை ஆய்வு மூலம் இனத்தூய்மை பரிசோதனை முடிவுகளை அறியமுடியும். இந்த ஆய்வகம் இந்தியாவிலேயே வேளாண்மைத்துறையின் கீழ் முதன்மையாக விளங்குவதோடு 2014–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் மாநில டி.என்.ஏ. கைரேகை ஆய்வகம் என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அதிக அளவில் பயிரிடப்படும் அறிவிக்கை செய்யப்பட்ட 27 நெல் இரகங்களுக்கு SSR (Single Sequence Repeat) மரபணு குறியீட்டைப் பயன்படுத்தி மிகத் துல்லியமாகவும், விரைவாகவும் இனத்தூய்மை பரிசோதனை செய்யும் திறனுடன் செயல்பட்டு வருகிறது. 2023–24–ஆம் ஆண்டில் 250 நெல் விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், 2024–25–ஆம் ஆண்டில் SNP (Single Nucleotide Polymorphism) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆய்வுத் திறனை மேம்படுத்தத் தேவையான பணிகள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 7.3.3. பயிர் வளர்ப்பு பரிசோதனைப் பண்ணை (Grow–out Test Farm)

இனத்தூய்மை, முளைப்புத்திறன் ஆகிய இரண்டும் விதையின் மிக முக்கிய தர காரணிகளாகும். பயிர் வளர்ப்புப் பரிசோதனைத் தொழில் நுட்பம் மூலம் பயிர் இரகங்களின் இனத்தூய்மை கண்டறியப்படுகிறது. விதைச்சான்றளிப்பு, விதைத் தரக்கட்டுப்பாடு பிரிவுகளிலிருந்து பெறப்படும் விதை மாதிரிகள் இனத்தூய்மை பரிசோதனைக்காக பயிர் வளர்ப்புப் பண்ணைக்கு அனுப்பப்படுகிறது.

பயிர் வளர்ப்பு பரிசோதனைத் திடலில், பயிரின் பூக்கும் பருவம் முதல் முதிர்ச்சிப் பருவம் வரையிலான வளர்ச்சி ஆய்வு செய்யப்படுகிறது. அனைத்துப் பயிர்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு பயிர் இரகங்களின் இனத்தூய்மை அறியப்படுகிறது. 2023–24–ஆம் ஆண்டு 3,000 விதை மாதிரிகளில் இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2024–25–இல் 3,100 விதை மாதிரிகளில் இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 7.3.4 ஒப்பீட்டு விதைப்பரிசோதனை ஆய்வகம்:

இத்துறையின் கீழ் 30 விதைப்பரிசோதனை ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த பரிசோதனை நிலையங்களில் பரிசோதனை முடிவுகள் துல்லியமாகவும், சீராகவும் உள்ளனவா என்பதைக் கண்காணிக்கவும், நெறிமுறைப்படுத்தவும் ஒப்பீட்டுப் பரிசோதனை ஆய்வகம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வாய்வகத்தில் ஒவ்வொரு விதைப்பரிசோதனை நிலையங்களிலிருந்தும் மாதந்தோறும் ஐந்து விதைமாதிரிகள் பெறப்பட்டு, ஒப்பீட்டுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வருடந்தோறும் 1,800 விதைமாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

### 7.3.5 பி.டி நஞ்சு பரிசோதனை ஆய்வகம்:

பி.டி.பருத்தி விதை மாதிரிகளில் பி.டி நஞ்சு பரிசோதனை மேற்கொள்ளும் பி.டி.பரிசோதனை ஆய்வகம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் அனுப்பப்படும் ஆய்வாளர் பருத்தி விதை மாதிரிகளில் பி.டி நஞ்சு பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இதில், ஆண்டு ஒன்றிற்கு

சராசரியாக 2,000 விதை மாதிரிகளில் பி.டி நஞ்சு பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

## 7.4 பயிற்சி:

இத்துறையின் மூலம் விதை உற்பத்தியாளர்களுக்கும், கள அலுவலர்களுக்கும் விதைச்சான்று, விதை ஆய்வு, விதைப்பரிசோதனை பிரிவுகளில் உரிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தரமான விதை உற்பத்தி, விதை விநியோகத்தினை மேம்படுத்த பயிற்சிப் பிரிவின் மூலம் கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**7.4.1 ஆற்றுப்படுத்தும் பயிற்சி :** இத்துறையில் புதிதாகப் பணியேற்கும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு விதைச்சான்று நடைமுறைகள், வயலாய்வுகள், பயிர் இரகங்களைக் கண்டறிதல், சுத்திகரிப்புப் பணி, விதை மாதிரிகள் எடுத்தல், சான்றட்டை பொருத்துதல், விதைப் பரிசோதனை நடைமுறைகள், விதைத்தரக்கட்டுப்பாடு குறித்த ஆற்றுப்படுத்தும் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

**7.4.2 புத்தாக்கப்பயிற்சி :** இத்துறையில் பணியில் உள்ள அலுவலர்களுக்கு விதை உற்பத்தி, விதைப்

பரிசோதனை, விதை ஆய்வுப் பிரிவுகளில் புதிய தொழில் நுட்பங்கள் பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது.

**7.4.3 விதை உற்பத்தியாளர் பயிற்சி** : தரமான விதைகள் கிடைப்பதை அதிகப்படுத்தவும், உற்பத்தியை மேம்படுத்தவும் வயல், விதைசுத்தி நிலைய தரங்கள் குறித்த பயிற்சி விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விதை உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

**7.4.4 விதை விற்பனையாளர் பயிற்சி** : விதை விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தரமான விதைகளை விற்பனை செய்வது, சேமித்து வைப்பது, விதைச் சட்டங்கள் ஆகியவை குறித்து பயிற்சியளிக்கப்படுகிறது.

**7.4.5 வெளிமாநிலப் பயிற்சி** : விதைச்சான்று நடைமுறைகள் குறித்து தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கு இத்துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு விதைச்சான்று, விதைச்சட்டம் அமலாக்கம், விதைப்பரிசோதனை குறித்து பல்வேறு தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்காக உத்திரபிரதேச மாநிலம், வாரணாசியிலுள்ள தேசிய

விதை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது.

2023-24ஆம் ஆண்டில் 50,000 விவசாயிகள், உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2024-25ஆம் ஆண்டிலும் 55,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.5. உயிர்மச் சான்றளிப்பு

தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறை 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. இத்துறையானது உயிர்மப் பண்ணையம், பதப்படுத்துதல், ஏற்றுமதிக்கான உயிர்ம விளைபொருட்களை சான்றளிப்பதற்காக வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

ஒன்றிய வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் இயற்கை வேளாண்மைக்கான தேசிய மையம், பங்களிப்பு உத்திரவாத திட்டத்தின் கீழ் உயிர்மச் சான்றிதழை வழங்க தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 7.5.1. துறையின் நோக்கம், செயல்பாடுகள்:

தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறையானது பயிர் உற்பத்தி, பதப்படுத்துதல் மூலம் கிடைக்கப்பெறும் உயிர்ம விளைபொருட்களை வெளிநாடுகளுக்கு வர்த்தகம் செய்வதற்கான சான்றிதழினை வழங்குகிறது. தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறை வழங்கும் சான்றிதழ் ஐரோப்பிய ஒன்றியம், சுவிட்சர்லாந்து நாட்டின் சுவிஸ் உயிர்மத் தர நிலைகளை ஒத்ததாகும்.

தேசிய உயிர்ம உற்பத்தித் திட்ட அமைப்பு, உயிர்ம விளைபொருட்களை இந்தியாவிற்குள்ளும், பிறநாடுகளுக்கும் சந்தைப்படுத்த உதவுகிறது. இது உயிர்ம விவசாயிகள், பதனிடும் மையங்கள், வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள் தேசிய உயிர்ம உற்பத்தித் திட்ட விதிமுறைகளின்படி உயிர்மச் சான்றிதழைப் பெற உதவுகிறது. உயிர்மச் சான்றிதழ் ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும். உயிர்ம வேளாண் விதிகள் செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள், மரபணு மாற்றுப் பயிர்கள் ஆகியவற்றைத் தவிர்ப்பதை உறுதி செய்கின்றன.

தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறை பங்களிப்பு உத்திரவாதத் திட்டத்தின் கீழ் பயிர் உற்பத்தி, பதப்படுத்துதல், வர்த்தகத்திற்கான வாய்ப்புச் சான்றிதழை வழங்குகிறது. தற்போது இத்துறையின் மூலம் தனிநபர்(விவசாயிகள்), குழுக்கள், பண்ணைக்கு உள்ளேயும் வெளியேயும் உணவு பதப்படுத்துதல், கையாளுதலுக்கான சான்றிதழினை வழங்குவதோடு பெரிய தொடர்ச்சியான பாரம்பரிய உயிர்மப் பகுதிகளுக்கும் (Large Area Certification) சான்றளிக்கிறது.

### 7.5.2 உயிர்மச் சான்றளிப்பின் நிலை

2023-24ஆம் ஆண்டில் 83,979 ஏக்கர் உயிர்மச் சான்றளிப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் பதிவு செய்யப்பட்ட மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை 39,428. இதில் 2,772 தனிநபர் விவசாயிகள், 36,656 விவசாயிகள், உழவர் குழுக்கள், உணவு பதனிடுவோர், உயிர்ம விலைபொருள் வணிகர்கள் ஆகியோர் அடங்குவர். தேசிய அளவில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளைப் பதிவு செய்யும் ஒரே சான்றிதழ் அமைப்பு தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறை ஆகும்.

தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறை மூலம் ரூ.155 இலட்சம் மதிப்பிலான 92.15 மெட்ரிக் டன் உயிர்ம விளைபொருட்களை ஏற்றுமதி செய்யவும், உள்நாட்டு வணிகத்திற்காகவும் பரிவர்த்தனை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தேங்காய், காப்பி, மஞ்சள் ஆகியவற்றிற்கு ஏற்றுமதிக்கான சான்றளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 7.5.3 எஞ்சிய நச்சுத்தன்மை பகுப்பாய்வு

தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் விளை நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள இணக்கமின்மையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 374 விவசாயிகளிடம் இருந்து உயிர்ம விளைப்பொருட்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வு முடிவுகளின்படி 23 விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட மாதிரிகளில் எஞ்சிய நச்சு இருப்பது உறுதி செய்யப்பட்டு அவ்விளைபொருட்களை "உயிர்ம விளைபொருள்" என குறிப்பிட்டு விற்பனை செய்யக் கூடாது என எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மேலும் அந்த

விவசாயிகள் முதலாம் ஆண்டு மாறுதல் காலத்திற்கு தர இறக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

2024-25ஆம் ஆண்டில் உயிர்ம விளைபொருட்களில் இருக்கும் நச்சுப்பொருட்களின் தன்மையினை விவசாயிகள் அறிந்து அதன் தரத்தை உறுதிப்படுத்தி ஏற்றுமதி செய்ய, எஞ்சிய நச்சு மதிப்பீட்டுப் பரிசோதனைக் கட்டணம் முழு மானியமாக வழங்கப்படவுள்ளது.

### அட்டவணை 7.5 ஆண்டு வாரியாக தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தின் கீழ் பதிவு விபரம் (ஏக்கரில்)

| வ எண் | மாவட்டம் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 5 | 829 | 811 | 656 | 694 |
| 2 | கோயம்புத்தூர் | 1,906 | 3,905 | 3,645 | 3,633 | 4,263 |
| 3 | செங்கல்பட்டு | - | 1,357 | 1,266 | 1,301 | 1,196 |
| 4 | கடலூர் | 2,251 | 1,799 | 1,755 | 1,014 | 1,418 |
| 5 | தருமபுரி | 1,359 | 7,687 | 7,384 | 3,526 | 2,746 |
| 6 | திண்டுக்கல் | 1,925 | 3,585 | 9,519 | 7,557 | 4,752 |
| 7 | ஈரோடு | 1,136 | 3,982 | 3,425 | 3,576 | 4,925 |
| 8 | கள்ளக்குறிச்சி | - | 2,307 | 2,375 | 193 | 1,184 |
| 9 | காஞ்சிபுரம் | 1,164 | 894 | 1,752 | 1,071 | 1,175 |
| 10 | கன்னியாகுமரி | 2 | 403 | 796 | 3,563 | 2,935 |
| 11 | கரூர் | 1,371 | 1,324 | 2,045 | 2,168 | 3,121 |
| 12 | கிருஷ்ணகிரி | 48 | 7,064 | 8,082 | 2,629 | 1,683 |
| 13 | மதுரை | 385 | 4,194 | 3,842 | 1,955 | 3,315 |

| வ எண் | மாவட்டம் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|---|
| 14 | மயிலாடுதுறை | - | 514 | 1,436 | 759 | 1,869 |
| 15 | நாகப்பட்டினம் | 113 | 2,769 | 1,005 | 1,084 | 1,208 |
| 16 | நாமக்கல் | 980 | 1,640 | 5,275 | 578 | 1,908 |
| 17 | பெரம்பலூர் | 53 | 806 | 1,373 | 1,063 | 555 |
| 18 | புதுக்கோட்டை | 119 | 3,121 | 3,797 | 1,952 | 1,651 |
| 19 | இராமநாதபுரம் | 3,374 | 1,851 | 2,389 | 3,235 | 4,583 |
| 20 | இராணிப்பேட்டை | - | 1,531 | 1,705 | 2,368 | 2,057 |
| 21 | சேலம் | 161 | 3,701 | 9,044 | 7,443 | 4,021 |
| 22 | சிவகங்கை | 293 | 1,146 | 1,650 | 1,672 | 2,349 |
| 23 | தஞ்சாவூர் | 206 | 785 | 1,963 | 1,648 | 1,947 |
| 24 | நீலகிரி | 5,455 | 6,447 | 6,428 | 1,606 | 434 |
| 25 | தேனி | 181 | 3,973 | 3,805 | 3,787 | 2,793 |
| 26 | தென்காசி | - | 975 | 1,483 | 1,222 | 1,877 |
| 27 | திருப்பத்தூர் | - | 2,144 | 2,065 | 1,498 | 1,729 |
| 28 | திருவள்ளூர் | 329 | 1,473 | 1,484 | 1,677 | 1,692 |
| 29 | திருவண்ணாமலை | 405 | 3,424 | 5,811 | 4,431 | 2,628 |
| 30 | தூத்துக்குடி | 130 | 473 | 811 | 747 | 659 |
| 31 | திருநெல்வேலி | 761 | 2,734 | 3,202 | 3,400 | 2,326 |
| 32 | திருப்பூர் | 897 | 4,360 | 4,124 | 4,125 | 4,851 |
| 33 | திருவாரூர் | 76 | 561 | 829 | 1,062 | 2,024 |
| 34 | திருச்சி | 201 | 1,568 | 1,615 | 1,574 | 1,863 |
| 35 | வேலூர் | 1,202 | 2,222 | 2,339 | 1,785 | 1,250 |
| 36 | விழுப்புரம் | 1,657 | 3,120 | 2,723 | 2,415 | 2,400 |
| 37 | விருதுநகர் | 370 | 2,667 | 2,546 | 2,315 | 1,899 |
| | **மொத்தம்** | **28,515** | **93,335** | **1,15,599** | **86,288** | **83,980** |

2024–25–ஆம் ஆண்டில் தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டம், பங்களிப்பு உத்தரவாதத் திட்டங்களின் மூலம் 1,25,000 ஏக்கர் நிலப்பரப்பை உயிர்மச் சான்றிதழின் கீழ் பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 7.6 பணிக்குழு

விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை 345 தொழில்நுட்ப பணியாளர்களையும், 500 அமைச்சுப் பணியாளர்களையும் கொண்டு இயங்கி வருகிறது.

**அட்டவணை 7.6. ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரம்**

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|
| **அ.தொழில்நுட்ப அலுவலர்கள்** | |
| விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இயக்குநர் | 1 |
| விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இணை இயக்குநர் | 1 |
| விதை ஆய்வு இணை இயக்குநர் | 1 |
| விதை ஆய்வு துணை இயக்குநர் | 15 |
| தரமேலாளர் | 1 |

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
| --- | --- |
| விதைச்சான்றளிப்பு உதவி இயக்குநர் ( விதை பகுப்பாய்வு மற்றும் பயிற்சி) | 1 |
| விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் | 29 |
| மதிப்பீட்டாளர் (உயிர்மச்சான்றளிப்பு) | 1 |
| விதைப்பரிசோதனை அலுவலர் | 7 |
| விதைச்சான்றளிப்பு அலுவலர் | 119 |
| விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு ஆய்வாளர்கள் | 26 |
| வேளாண்மை அலுவலர் | 63 |
| விதை ஆய்வாளர் | 70 |
| உயிர்மச்சான்றளிப்பு ஆய்வாளர் | 10 |
| **மொத்தம்** | 345 |
| **ஆ. அமைச்சுப்பணியாளர்** | 500 |
| மொத்த பணியாளர்கள் (அ + ஆ) | 845 |

## 8. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

8.1. தரிசு நிலங்களிலுள்ள நீர்வடிப்பகுதிகளைப் பங்கேற்பு அணுகுமுறையில் மேம்படுத்தும் நோக்கத்தோடு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975ன் கீழ் நிறுவப்பட்டது. பின்னர், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையில் மாநில அளவிலான இணைப்பு முகமை (SLNA) அமைக்கப்பட்டு கீழ்க்கண்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. நீர்வடிப்பகுதி மேம்பாடு–பிரதம மந்திரியின் விவசாயப் பாசனத் திட்டம்–2.0
2. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியில் சேலம், விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம்

மேலும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையானது ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கான இணைப்பு முகமையாக (Nodal Agency) அறிவிக்கப்பட்டு ஒன்றிய அரசு, மாநில அரசு,

திட்ட செயலாக்கத் துறைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்துச் செயல்பட்டு வருகிறது.

1. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்
    i. விரிவான திட்ட அறிக்கை அடிப்படையிலான திட்டங்கள்
    ii. மானாவாரிப் பகுதி மேம்பாடு
    iii. மண் நலம் மற்றும் மண்வளம்
    iv. பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம்
    v. வேளாண்காடுகள்
    vi. புகையிலைப் பயிருக்கு மாற்றாக தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடித் திட்டம்
    vii. துளி நீரில் அதிக பயிர்
    viii. வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கம்
2. பிரதம மந்திரியின் விவசாயப் பாசனத் திட்டம்
    i. பிரதம மந்திரியின் விவசாயப் பாசனத் திட்டம் – வயல்தோறும் வாய்க்கால்
    ii. விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டம்

## 8.2. நீர்வடிப்பகுதி மேம்பாடு – பிரதம மந்திரியின் விவசாயப் பாசனத் திட்டம் – 2.0

இத்திட்டம், 2021–22 முதல் 2025–26 வரையிலான ஐந்து ஆண்டு காலத்தில் பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி,

இராமநாதபுரம், தருமபுரி, விருதுநகர் ஆகிய ஏழு மாவட்டங்களில் 275 நீர்வடிப்பகுதிகளில், 27 திட்டங்களை ரூ.286.73 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1.30 இலட்சம் எக்டரில் செயல்படுத்த ஒன்றிய அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு,

i. **பொருளாதாரம்** – இயற்கை வளங்களை சமச்சீரான, ஒருங்கிணைந்த, நிலையான, திறன்மிகு முறையில் பயன்படுத்துவதன் மூலம் பல்வேறு பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதுடன் நீர்வடிப்பகுதிகளிலுள்ள கிராம சமுதாயத்தின் வருமானத்தை மேம்படுத்துதல்.

ii. **சூழலியல்** – சமூக அமைப்புகளை உருவாக்கி எளிய, சாத்தியமான (affordable) தொழில்நுட்பங்களையும் நடைமுறைகளையும் ஊக்குவிப்பதன் மூலம் இயற்கை வளங்களை (சூழல் சமநிலையை மீட்டெடுக்க) பயன்படுத்துதல், பாதுகாத்தல், மேம்படுத்துதல்.

iii. **சமபங்கு** – நிலம், நீர், பிற வளங்களில் ஏழைகள், நிலமற்றோர், மாற்றுத்திறனாளிகள், பெண்கள் ஆகியோருக்குச் சமபங்கீடு கிடைப்பதை உறுதிப்படுத்துவதோடு, பல்வேறு சமுதாய

நிறுவனங்களில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.

### 8.2.1 திட்டச் செயலாக்க அமைப்பு

பிரதம மந்திரியின் விவசாயப் பாசனத் திட்டச் செயலாக்கத்திற்கு மாநில அளவிலான இணைப்பு முகமையாக தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை செயல்பட்டு வருகிறது. மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையானது மாவட்ட ஆட்சியர் தலைமையில், வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல் துறை தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு திட்டத்திற்கும் களப்பணிகளை மேற்கொள்வதற்காக நீர்வடிப்பகுதி மேம்பாட்டு குழு வேளாண்மை, சமூகவியல், வேளாண்மைப் பொறியியல் பயின்ற பணியாளர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பல்வேறு பணிக்கூறுகளைச் செயல்படுத்துவதற்காக கிராமசபையின் துணைக் குழுவாக நீர்வடிப்பகுதிக் குழு கிராம அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

### 8.2.2 திட்டச் செயல்பாடுகள்

இத்திட்டம் மூன்று கட்டங்களாக ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். தற்போது இரண்டாம் கட்ட நிலையில் கீழ்க்கண்ட இனங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| இனம் | செயல்பாடுகள் |
|---|---|
| இயற்கைவள மேம்பாட்டுப் பணிகள் | பண்ணைக் குட்டைகள், கசிவு நீர்க்குட்டைகள், சிறு, நடுத்தர, பெரிய தடுப்பணைகள், கிராமக் குட்டைகள், ஊருணிகள், நீர்வரத்துக் கால்வாய்களை தூர்வாருதல், கேபியான் அமைப்புகள், நீர் செறிவூட்டும் அமைப்புகள், கிணறுகளைச் சீரமைத்தல், அமிழ்வு நீர்க்குட்டைகள். |
| பண்ணை உற்பத்தி அமைப்புப் பணிகள் | தோட்டக்கலைப் பயிர்கள், வேளாண் காடுகள், மலர் பயிர்கள், தீவனப்புல் வளர்த்தல், பயிர் செயல் விளக்கங்கள், மண் புழு உரம் தயாரித்தல், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான், பேட்டரி தெளிப்பான், தார்ப்பாலின், புல்வெட்டும் கருவி விநியோகம், வெள்ளாடு/ செம்மறியாடு வழங்குதல், கோழி வளர்த்தல் |
| நிலமற்றவர்களுக்கான வாழ்வாதாரப் பணிகள் | ஆயத்த ஆடை தயாரித்தல், தையல் இயந்திரம், கறவைமாடு வழங்குதல், வீடுகளில் கோழி வளர்த்தல், பெட்டிக்கடை, கரி தயாரித்தல், கைவினைப் பொருள்கள் தயாரித்தல், ஆடு வளர்த்தல், சலவைப் பெட்டி, இட்லி/ தோசை மாவு அரைக்கும் இயந்திரம் வழங்குதல் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல் |
| திறன் மேம்பாட்டுப் பணிகள் | பயிற்சி வழங்குதல் |

இத்திட்டத்தில் 2023–24ஆம் ஆண்டில், ரூ.133.26 கோடி நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024–25ஆம் ஆண்டில் ரூ.43 கோடி மதிப்பீட்டில் திட்ட இனங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 8.2.3. சுனைநீர் வடிப்பகுதி மேம்பாடு

மலைப்பகுதியில் அமைந்துள்ள சுனைகள், அப்பகுதியில் வசிக்கும் மக்கள், கால்நடைகள், விவசாயப் பணிகள் ஆகியவற்றுக்கு ஆதாரமாக விளங்குகின்றன. இச்சுனைகளை மீட்டுருவாக்கி மேம்படுத்துவதன் மூலம் நீர்ப்பிடிப்பை அதிகரிக்கலாம். 2023–24ஆம் ஆண்டு ஒன்றிய அரசு நீர்வடிப்பகுதி மேம்பாடு 2.0 திட்டத்தில், தருமபுரி மாவட்டத்தில் பென்னாகரம், அரூர் வட்டாரங்களிலுள்ள பிக்கிலி, சிட்டிலிங்கி மலைத்தொகுப்புகளிலுள்ள சுனைகளை மேம்படுத்த ரூ.14 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்படி, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2024–25ஆம் ஆண்டு ரூ.6.86 கோடி செலவினத்தில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

**8.3. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின் கீழ் சேலம், விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம்.**

இத்திட்டம் ஒன்றிய அரசின் சுற்றுசூழல் , வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதி உதவியுடன், நபார்டு வங்கியை தேசிய செயலாக்க நிறுவனமாகவும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையை செயலாக்க நிறுவனமாகவும் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம், விருதுநகர் மாவட்டங்களில் 15,990 எக்டரில் ரூ.23.80 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட செயலாக்க காலம் 2019–20 முதல் 2024–25 வரை ஆகும் .

**8.3.1 திட்டத்தின் நோக்கம்**

1. மண், நீர் பாதுகாப்பு மேலாண்மை மூலம் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளைத் தகவமைத்தல்.
2. பல்வகைப் பயிர்களை ஊக்குவித்தல், மாற்று வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதன் மூலம்

நீடித்த நிலையான வாழ்வாதாரங்களை உறுதி செய்தல்.

3. காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப சமுதாயத்தின் திறனை உருவாக்குதல்.

### 8.3.2 திட்டத்தின் இனங்கள்

கிராம மக்களின் மிக முக்கியத் தேவையான நீர் சேமிப்புத் தொட்டிகள் நுழைவுக் கட்டப்பணியாக அமைக்கப்பட்டு கிராம மக்களுடன் இணக்கமான உறவு ஏற்படுத்தப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகள், நீர் செறிவூட்டும் அமைப்புகள் அமைத்தல் ஆகிய நீர்வள, மண்வள மேலாண்மை செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுவதோடு, கிராம மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில், சிறு, குறு தொழில் செயல்பாடுகளான மண்புழு உரம் தயாரித்தல், வீடுகளில்கோழி வளர்ப்பு ஆகிய இனங்களும் செயல்படுத்தப்படுகின்றன. இது தவிர மாற்றுப் பயிர் சாகுபடி, பருவகால மாற்ற நிலையைத் தாங்கக்கூடிய பயிர் இரகங்கள், பொது, தனியார் நிலங்களில் காடு வளர்த்தல், சூரிய ஒளியால் இயங்கும் நீர் இறைப்பான், உயிரியல் முறையில் மக்கு உரம் தயாரிப்பு

ஆகிய பருவநிலை பாதுகாப்பு செயல்பாடுகளுக்கு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. 2022–23ஆம் ஆண்டு வரை ரூ.11.52 கோடி விடுவிக்கப்பட்டு, ரூ.10.84 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ரூ.12.96 கோடி நிதி ஒன்றிய அரசிடமிருந்து எதிர்நோக்கப்படுகிறது.

### 8.4. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

**இலக்கு : 6** பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதி

**குறிக்கோள்:** 6.6 மலைகள், காடுகள், சதுப்பு நிலங்கள், ஆறுகள், நீர்நிலைகள் மற்றும் ஏரிகள் உள்ளிட்ட நீர் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்து, மீட்டெடுத்தல்.

**மாநில குறிகாட்டி:** 6.6.4 பண்ணைக் குட்டைகள்/ தடுப்பணைகள்/ கசிவுநீர் குட்டைகள், இதர பணிகள் உருவாக்கம், புதுப்பித்தல்/ தற்போதுள்ள கட்டமைப்புகள் புதுப்பித்தல் பணிகளின் எண்ணிக்கை.

2024-25ஆம் ஆண்டு 1,468 எண்ணிக்கையிலான மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் மற்றும் 1,88,167 மீட்டர் நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர்வாரும் பணிகள் ஆகியவை பிரதம மந்திரியின் விவசாய நீர்பாசனத் திட்டம் 2.0 இல் ஏழு மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளன.

## கோரிக்கை 05 வேளாண்மை – உழவர் நலத்துறை

## 2024–2025–இல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2024 –2025 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 14,604,21,75 | 144,64,13 | 13,67,16 | 14,762,53,04 |
| மொத்த தொகை சாட்டியது | 55 | --- | --- | 55 |

### நிகர செலவு

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | | 2022 – 2023 | 2023 – 2024 | 2023 – 2024 | 2024– 2025 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2059 | பொதுப்பணிகள் | 2,47,11 | 5,15,13 | 4,15,13 | 4,34,05 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 13,282,69,90 | 13,021,51,76 | 10,753,62,33 | 13,444,20,60 |
| 2402 | மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | 83,25,77 | 107,58,34 | 89,15,95 | 90,20,43 |
| 2408 | உணவு சேமிப்பு – கிடங்கு வசதி | 35,62,43 | 13 | 2 | 2 |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் | 530,82,07 | 625,53,89 | 664,71,29 | 680,55,29 |

| கணக்குத் தலைப்பு | | 2022 – 2023 | 2023 – 2024 | 2023 – 2024 | 2024–2025 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 239,49,95 | 264,84,81 | 269,21,00 | 273,62,69 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 71,40,00 | 71,68,16 | 97,08,00 | 86,07,18 |
| 2551 | மலைப் பகுதிகள் | 71,37 | 92,42 | 56,55 | 60,54 |
| 2702 | சிறுபாசனம் | 5,83,30 | 7,03,73 | 5,79,01 | 6,17,81 |
| 2705 | பாசனப் பகுதி மேம்பாடு | --- | 1 | 1 | 1 |
| 2810 | புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | --- | 1 | 1 | 1 |
| 3054 | சாலைகளும் பாலங்களும் | --- | --- | 15,20 | --- |
| 3451 | தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 15,72,03 | 18,30,45 | 16,76,01 | 18,43,66 |
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 117,53,56 | 60,56,92 | 99,85,61 | 111,92,60 |
| 4402 | மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 4,16,06 | 24,01,93 | 25,46,22 | 7,22,67 |
| 4408 | உணவுப் பொருள் சேமிப்பு மற்றும் கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு | 2,55,00 | --- | --- | --- |

| கணக்குத் தலைப்பு | | 2022 – 2023 | 2023 – 2024 | 2023 – 2024 | 2024–2025 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 4415 | வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி குறித்த மூலதனச் செலவு | --- | 10,00,00 | 11,74,02 | 15,00,00 |
| 4435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 62,50,25 | 34,42,13 | 36,58,96 | 10,48,86 |
| 6401 | பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | 130,00,00 | 1 | 125,00,00 | 1 |
| 6425 | கூட்டுறவு குறித்த கடன்கள் | 252,90,60 | 16 | 155,61,34 | --- |
| 6435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்களுக்கான கடன்கள் | --- | --- | 37,45,54 | 12,67,15 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 2,00,89 | 1,00,00 | 2,78,11 | 1,00,00 |

# கோரிக்கை 05 வேளாண்மை – உழவர் நலத்துறை

## 2024 – 2025 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| வ. எண் | துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 005 01 | வேளாண்மை – உழவர் நலத்துறை - தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 18,43,66 | --- | 1,00,00 | 19,43,66 |
| 2. | 005 02 | வேளாண்மை இயக்ககம் | சாட்டியது | 2 | --- | --- | 2 |
| | | | அனுமதித்தது | 11,082,54,91 | 111,92,54 | 1 | 11,194,47,46 |
| 3. | 005 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 199,41,48 | 10,48,86 | 12,67,15 | 222,57,49 |
| 4. | 005 04 | விதைச் சான்று இயக்ககம் | அனுமதித்தது | 69,44,28 | --- | --- | 69,44,28 |
| 5. | 005 05 | தோட்டக்கலை, மலைத்தோட்டப் பயிர்கள் இயக்ககம் | அனுமதித்தது | 1,621,60,26 | 6 | --- | 1,621,60,32 |
| 6. | 005 06 | வேளாண்மைப் பொறியியல் துறை | சாட்டியது | 53 | --- | --- | 53 |
| | | | அனுமதித்தது | 707,31,07 | 7,22,67 | --- | 714,53,74 |

| வ. எண் | துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 7. | 005 07 | வேளாண் பொறியியல் பணிகள் | அனுமதித்தது | 74,77 | --- | --- | 74,77 |
| 8. | 005 08 | தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக் கழகம், கோயம்புத் தூர் | அனுமதித்தது | 649,31,89 | 15,00,00 | --- | 664,31,89 |
| 9. | 005 09 | அங்ககச் சான்றளிப்பு இயக்ககம் | அனுமதித்தது | 1,33,22 | --- | --- | 1,33,22 |
| 10. | 005 10 | சர்க்கரை இயக்ககம் | அனுமதித்தது | 254,06,21 | --- | --- | 254,06,21 |
| **மொத்தம்** | | | சாட்டியது | **55** | **---** | **---** | **55** |
| | | | அனுமதித்தது | **14,604,21,75** | **144,64,13** | **13,67,16** | **14,762,53,04** |

# நிறைவுரை

**"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டேம்என் பார்க்கும் நிலை"**

**(திருக்குறள் – 1036)**

எல்லாப் பற்றையும் விட்டுவிட்டதாகக் கூறும் துறவிகள்கூட உழவரின் கையை எதிர்பார்த்துதான் வாழ வேண்டும் என்று உழவின் பெருமை உயர்த்திக் கூறப்பட்டுள்ளது.

**(முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் உரை)**

மாநிலத்தின் உணவுப் பாதுகாப்பையும், ஊட்டச்சத்து பாதுகாப்பையும் உறுதி செய்ய உழைக்கும் உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் முதன்முறையாக தமிழ்நாட்டின் வேளாண்மை– உழவர் நலத்துறையில், வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையானது 2021–22ஆம் ஆண்டில் சமர்ப்பித்ததனால் ஒரு வரலாற்றுச் சாதனை நிகழ்த்தப்பட்டு, தொடர்ந்து 2024–25–ஆம் ஆண்டிலும் நான்காவது முறையாக வேளாண்மை நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேளாண்மை–உழவர் நலத்துறைக்கு வழங்கப்பட்டுள்ள தொலைநோக்குத் திட்டங்களான

நிகரசாகுபடிப் பரப்பை உயர்த்துதல், இருபோக சாகுபடிப் பரப்பை இரு மடங்காக்குதல், உணவுதானியங்கள், சூரியகாந்தி, தென்னை, பருத்தி மற்றும் கரும்பு பயிர்களின் உற்பத்தித் திறனில் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களில் இடம்பெறுதல் ஆகியவற்றை நிறைவேற்றிட நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்களின் சாகுபடிப் பரப்பு, மகசூல் ஆகியவற்றை அதிகரித்திட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதனால் 2022–23–ஆம் ஆண்டில் 154 இலட்சத்து 65 ஆயிரம் ஏக்கரில் மொத்த சாகுபடி மேற்கொள்ளப்பட்டன.

மேன்மையான உழவுத்தொழில் புரியும் உழவர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி அதிக அளவிலான பருவமழை, வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் பயிர்பாதிப்பு, மகசூல் இழப்பீட்டிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்திட பயிர்காப்பீட்டுத் திட்டம், மாநிலப் பேரிடர் நிவாரண நிதி மூலம் நிவாரண உதவித்தொகை வழங்கி, விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காதவாறு தமிழ்நாடு அரசு,

எப்பொழுதும் உழவர்களுக்கு உறுதுணையாக செயல்பட்டு வருகின்றது.

2024–25ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறைக்கு முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டம், தேவைக்கேற்ப உற்பத்தியை அடைய வேளாண் பயிர்களில் பரப்பு விரிவாக்கம், பயிர் உற்பத்தித்திறன் உயர்த்துதல் ஊக்குவிப்புத் திட்டம், ஒரு கிராமம் ஒரு பயிர் செயல்விளக்கம், கரும்பிற்கு சிறப்பு ஊக்கத்தொகை, கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம், வறண்ட நிலங்களில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாடு, தோட்டக்கலைப் பயிர் சாகுபடியினை ஊக்குவித்தல், வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம், எளியோர்க்கென இயந்திர வாடகை மையங்கள் போன்ற பல்வேறு திட்டங்களும் விவசாயிகள் நலனுக்காக அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், தானியங்களை உலர்த்துவதற்கு நடமாடும் உலர்த்திகள், மஞ்சள் மெருகூட்டும் இயந்திரம், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்குப் பொது முத்திரை, சிப்பமிடல் வசதிகள், ஒருங்கிணைந்த விதைச் சான்றளிப்பு வளாகம்,

டிஎன்ஏ மார்க்கர் அடிப்படையிலான தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆய்வகம், ஏழு மாவட்டங்களில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வேளாண் இடுபொருட்களை துல்லியமாகத் தெளிக்கச் செய்வதற்கான தொழில்நுட்பம் போன்ற திட்டங்களும் உழவர்களின் மேம்பாட்டிற்காக அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளன.

வேளாண்மையை மேற்கொண்டால் வாழ்வாங்கு வாழலாம் என்று ஏரெழுபது நூலில் போற்றிக் கூறியதற்கேற்ப, வேளாண் பெருங்குடி மக்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத்துறையை, வேளாண்மை–உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றம் செய்தது ஒரு வரலாற்று நிகழ்வாகும். 2024–25ஆம் ஆண்டிலும் வேளாண் நிதிநிலை அறிக்கையில் உழவர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, வளர்ந்து வரும் புதிய அறிவியல் தொழில் நுட்பங்களையும் ஈர்த்துக்கொண்டு, திட்டங்கள் அனைத்தும், விவசாயிகளைச் சென்றடைய முனைப்புடன் இத்துறை செயல்படும்.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**
**வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்**






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.07.2023 அன்று நந்தம்பாக்கம்,
சென்னை வர்த்தக மையத்தில் வேளாண் வணிகத் திருவிழா 2023-ஐ தொடங்கி வைத்து,
உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகளைத் திறந்து வைத்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் 27.02.2024 அன்று உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருது வழங்கப்பட்டது.



தமிழ்நாடு அரசின் 2024-25 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை தனி நிதிநிலை அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பாக மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை சந்தித்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.07.2023 அன்று நந்தம்பாக்கம்,
சென்னை வர்த்தக மையத்தில் வேளாண் வணிகத் திருவிழா 2023-ஐ தொடங்கி வைத்து,
உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 27.07.2023 அன்று திருச்சிராப்பள்ளியில் வேளாண்மை – உழவர் நலத்துறை ஏற்பாடு செய்திருந்த "வேளாண் சங்கமம் 2023" விழாவில் அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த ஆளில்லா வானூர்தியைப் (ட்ரோன்) பார்வையிட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 09.06.2023 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், திருமங்கலம் கிராமத்தில் உள்ள கூழையாறு வடிகாலில் மேற்கொள்ளப்பட்ட தூர்வாரும் பணிகளை ஆய்வு செய்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 27.07.2023 அன்று திருச்சிராப்பள்ளியில்
வேளாண்மை – உழவர் நலத்துறை ஏற்பாடு செய்திருந்த "வேளாண் சங்கமம் 2023"
விழாவில் வேளாண்மைப் பொறியியல் கண்காட்சி அரங்கினைப் பார்வையிட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டாரம், விண்ணமங்கலம் கிராமத்தில் 09.06.2023 அன்று ‘சி’, ‘டி’, பிரிவு வாய்க்கால் தூர்வாருதல் பணியைப் பார்வையிட்டார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.07.2023 நந்தம்பாக்கம்,
சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற வேளாண் வணிகத் திருவிழாவில்
"ஆளுமையில் சிறந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கான" விருதினை வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 08.07.2023 அன்று நடைபெற்ற வேளாண் வணிகத் திருவிழா 2023இல் காட்சிப்படுத்தப்பட்டிருந்த சிறுதானிய வகைகளைப் பார்வையிட்டார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் 04.09.2023 அன்று தலைமைச் செயலகத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில், வடகிழக்குப் பருவமழை குறைவாகப் பெய்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.06.2024 அன்று
"முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்"
திட்டத்தைத் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்குப் பசுந்தாள் உர விதைகளை வழங்கினார்.



செம்மொழிப் பூங்காவில் மூன்றாவது சென்னை மலர்க்காட்சியினை மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள் முன்னிலையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10.02.2024 அன்று தொடங்கி வைத்தார்.



செம்மொழிப்பூங்காவில் மூன்றாவது சென்னை மலர்க்காட்சியினை மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டனர்.



மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 20.02.2024 அன்று சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு அரசின் 2024-25ஆம் ஆண்டிற்கான வேளாண்மை தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.




மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 09.12.2023 அன்று சென்னையில் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நடமாடும் வாகனங்கள் மூலம் மலிவு விலையில் காய்கறிகள் விற்பனையைத் தொடங்கி வைத்தார்.



மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், வேளாண்மை தனி நிதிநிலை அறிக்கை 2024–25 ஆம் ஆண்டிற்கான கருத்துக்கேட்புக் கூட்டம் 10.02.2024 அன்று சென்னை வேளாண்மை இயக்குநரகத்தில் நடைபெற்றது.



மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சென்னை செம்மொழிப் பூங்காவில் தோட்டக்கலை – மலைப்பயிர்கள் துறை சார்பில் பாரம்பரிய நாட்டுக் காய்கறிகளின் “நம்ம சென்னை, நம்ம சந்தை” விற்பனையை 12.01.2024 அன்று தொடங்கி வைத்தார்.



காட்டுமன்னார்கோவிலில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய உழவர் சந்தை
மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால்
06.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.




தூத்துக்குடி மாவட்டத்தில் அதீத கனமழையினால் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் “பேரிடர் துயர் துடைப்பு” பணிகளை 23.12.2023 அன்று மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.



தூத்துக்குடி மாவட்டத்தில் அதீத கனமழையினால் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் ‘‘பேரிடர் துயர் துடைப்பு’’
மேற்கொண்ட பணியாளர்களை மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கௌரவித்தார்.




திருநெல்வேலி மாவட்டம், மாநகராட்சி வர்த்தக மையத்தில் 09.02.2024 அன்று நடைபெற்ற வேளாண் விளைபொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டுக் கருத்தரங்கில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு அவர்கள் பார்வையிட்டார்.




திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டில் ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் தரம் பிரிப்புக் கூடம்
மற்றும் மதிப்புக்கூட்டும் இயந்திரங்களுடன் வாழை ஏல மையம் அமைக்கப்பட்டு,
உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 12.06.2024 அன்று தலைமைச் செயலகத்தில். வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் குறைந்த வாடகையில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக கொத்துக் கலப்பைகள் மற்றும் ரோட்டவேட்டர்கள் பொருத்தப்பட்ட டிராக்டர்களைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.



வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை
இயக்கம் – பவர் டில்லர் – கடலூர் மாவட்டம்



விலை ஆதரவுத் திட்டத்தில் கொப்பரை கொள்முதல்



நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளைப் பராமரித்தல்
விழுப்புரம் மாவட்டம்



பிளாஸ்டிக் நிலப்போர்வை அமைக்கும் கருவி
திண்டுக்கல் மாவட்டம்



வாய்க்கால்களைத் தூர்வாருதல் – விருதுநகர் மாவட்டம்



பண்ணைக்குட்டை அமைத்தல் – திருவள்ளூர் மாவட்டம்



சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் – தடுப்பணை
திண்டுக்கல் மாவட்டம்



சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் – நிலச்சரிவு தடுப்புச்சுவர்
கன்னியாகுமரி மாவட்டம்



நிலக்கடலைப் பயிர் இரகம் கே 1812 வயலாய்வு
திருவாரூர் மாவட்டம்



பண்ணைப்பள்ளி – காய்கறிகளில் ஒருங்கிணைந்த
பயிர் மேலாண்மை – செங்கல்பட்டு மாவட்டம்



பண்ணைப்பள்ளி – நெல்லில் ஒருங்கிணைந்த
பயிர் மேலாண்மை – திருவள்ளூர் மாவட்டம்



விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க பணியாளர்கள்
இணைந்து வயலாய்வு மேற்கொள்ளுதல்



பழங்குடியினர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்
சமநிதி பங்கீட்டு மானியம் – ஏலகிரி மலை, திருப்பத்தூர் மாவட்டம்



இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல்
பசுமை அக்ரோ புட்ஸ் – சிவகங்கை மாவட்டம்



உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு திட்டம்
பருத்தியில் பயறுவகை ஊடுபயிர் சாகுபடி



தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்
கரும்பு (கோ 86032) திசு வளர்ப்பு நாற்றுகள்



மணல் படிமங்களை அகற்றும் பணி
தூத்துக்குடி மாவட்டம்



நீடித்த நிலையான பருத்தி சாகுபடி இயக்கம்
ஆளில்லா வானூர்தி மூலம் (ட்ரோன்) பூச்சிக்கொல்லி தெளிப்பு



நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளைப் பராமரித்தல்
அரியலூர் மாவட்டம்



கரும்பில் அறுவடை இயந்திரம் மூலம்
அறுவடை செய்தல்



முதலமைச்சரின் சூரியசக்தி பம்பு செட்டுகள் திட்டம்



கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த
வேளாண் வளர்ச்சித் திட்டம் – திருவள்ளூர் மாவட்டம்




விதைப்பு கருவி மூலம் நெல் வரிசை விதைப்பு
செயல்விளக்கத் திடல் – சிவகங்கை மாவட்டம்



முருங்கை நடவு – திண்டுக்கல் மாவட்டம்



126வது உதகை மலர் கண்காட்சியில் மலை இரயில்



126வது உதகை மலர் கண்காட்சியில் டிஸ்னி உலகம்





செம்மொழிப் பூங்காவில் மூன்றாவது சென்னை மலர்க்காட்சி



இயந்திர நெல் நடவு செயல் விளக்கம் – கடலூர் மாவட்டம்



கரும்பில் ஒருபரு விதைக்கரணை நடவு
கள்ளக்குறிச்சி மாவட்டம்

